"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை – வைகாசி – ஆனி – 2005

SAIVA MUNNETTA SANGAM UNITED KINGDOM



50வது இதழ்!


இலண்டன்
ஸ்ரீ முருகன்
ஆலய
கும்பாபிஷேக
சிறப்பிதழ்
22.05.2005

லண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# Sindu Mahal Event Planners

- *Catering*
- *Cakes*
- *Rich Cakes*
- *Sweet/ Cake Boxes*
- *Invitation Cards*
- *Arrangement of Venues*
- *Arrangements of Priests*
- *Servicemen Arrangements*
- *DJ / Merla Katcheries*
- *Videography and Photography*
- *Decoration*
- *Garlands*
- *Bouquets*
- *Cutlery / Chair Hire*
- *Marquee Hire*

அத்துடன் உங்கள் திருமணம், பிறந்தநாள், மற்றும் பூப்புனித நீராட்டுவிழா அரங்கேற்றம்
போன்ற மங்களகரமான நிகழ்வுகளிற்கான உணவு வகைகளும்,
பலகார வகைகளும் செய்து கொடுப்பதுடன், மண்டபம், அலங்காரம்
முதலிய அனைத்து ஏற்பாடுகளையும் ஓரேயிடத்தில் மலிவாகவும்,
தரமாகவும்,பெற்றுக்கொள்வதுடன்,
ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஓரேயிடம்




உங்கள் குதூகல
நிகழ்வுகளிற்கான
70 இருக்கைகொண்ட
Party Hall இலசவ
பாவனைக்குத் தருகிறோம்

# சிந்து மஹால்

**Finest Sri Lankan & South Indian Cuisine**
**274 Barking Road, Eastham, London E6 3BA**
**Tel: 020 8471 6226**
**07984 423 284, 07830 361 317, 07956 544 066**

மணி 13

# கலசம் KALASAM

ஒலி 50

www.smsuk.org.uk E-mail: kalasam @ gmail.com

சிவமயம்

# முருகன் திருவடியில் 50 மலர்கள்

கலசத்தின் முதலாவது இதழை முருகன் திருவடிகளில் சமர்ப்பித்து இலண்டன் ஸ்ரீ முருகன் கோயிலில் 1993ஆம் ஆண்டு தைப்பொங்கல் திரு நாளன்று வெளியிட்டோம். இப்போது புதிய பொலிவுடன் மிளிரும் அதே ஆலயத்தின் கும்பாபிஷேகத்தின் போது, கலசத்தின் 50 ஆவது இதழை மீண்டும் அவன் பாதங்களில் சமர்ப்பித்து வணங்கி நிற்பதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஒவ்வொரு ஊருக்கும் ஒரு கோயில் அவசியம் என்பது எமது ஆன்றோர் வாக்கு. அதற்குக் காரணம் கலி சூழ்ந்துவரும் இக் காலகட்டத்தில் இறைவனைப் பற்றிக் கொள்வது ஒன்றே உய்வதற்கு வழி என்பதுவேயாகும். அந்த வழியைக் காட்டும் பணியே சமூகத்தில் ஆலயங்களின் பங்கு. ஆனால் எமது சமூகத்தின் அடுத்த சந்ததிகளுக்கு இவ் வழியைக் காட்டுவதில் ஆலயங்கள் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இன்றைய இளவயதினரே நாளை இவ்வாலயங்களைப் பரிபாலிக்க வேண்டியவர்களாவர். அத்தகைய ஓர் இளம் சமுதாயத்தை உருவாக்க வேண்டிய கடப்பாடு நம் அனைவருக்கும் உண்டு.

இந்த இடைவெளியை நிரப்புவதே கலசத்தின் பிரதான பணியாக அமைகிறது. சிறார்களுக்கு நேரடியாகவும், அவர்களின் பெற்றோரின் சமயஅறிவை வலுப்படுத்துவதன் மூலமும் அவர்கள் சமய அறிவை வளர்ப்பதே எமது செய்றபாடுகளின் அடிப்படையாகும். இப்பணியில் எம்முடன் இணைந்து எம்மை ஊக்குவிக்கும் வாசகர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், வர்த்தகப் பெருமக்களுக்கும் எமது பசுமையான நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் மிகவும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

50 ஆவது இதழ் வெளியிடுவது ஆழமான மகிழ்வினைத் தருகின்ற போதிலும் கலசத்தின் எதிர்காலம் எதிர்வரும் காலங்களில் பல சவால்களைக் கொண்டது என்பதை நாம் நன்றாக உணர்கின்றோம். எமது இந்த நீண்ட பயணத்தில் கலசம் வாசகர்கள் யாவரையும் எம்முடன் கைகோத்து வரும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய நிர்வாகத்தினரும், பக்தர்களும் காலத்தால் வெல்லமுடியாத கற்கோயில் ஒன்றை முதன்முறையாக ஆகமமுறைப்படி இலண்டனில் அமைத்து எமது வருங்காலச் சந்ததியினரும் காலங்காலமாக வழிபடக்கூடியவாறும் எமது கலாசாரத்தைப் பின்பற்றக்கூடியவாறும் வகைசெய்துள்ளனர். வானைநோக்கிய கோபுரங்களில் கலசங்களை வைத்து கும்பாபிஷேகம் செய்விக்கின்றனர். இந்தத் தருணத்தில் எமது கலசத்தையும் முருகன் பாதக்கமலங்களில் வைக்கின்றோம்.

**நிர்வாகக் குழு**

திரு.சி.அற்புதானந்தன், திரு.சிவ.அசோகன், திரு.சி. தம்பு, திரு.சு.வைத்தியநாதன், திரு.வ.இ.இராமநாதன், திரு. ந. நவநீதராசா, திரு.ந.சிவராசன், திரு.செ..தர்மலிங்கம், திரு. ம. ஜெயசீலன், திரு.ஸ்ரீரங்கன், திருமதி.சி.தமிழரசி

**தொடர்பு முகவரி:** 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# கலியுகவரதனுக்கு ஒரு கற்கோயில்

இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதமகுரு கயிலை சிவஸ்ரீ இராம. நாகநாதசிவம் குருக்கள்

**வேதக் காட்சிக்கும் உடபநிடதத் துச்சியில் விரித்த**
**போதக் காட்சிக்கும் காணலன் புதியரில் புதியன்**
**மூதக் கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்**
**ஆதிக் காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்**
- கந்தபுராணம்

அரிதாகிய மானிடப்பிறவியில் ஆன்மாக்கள் ஆணவ, கா்ம, மாயா பாசங்கள் நீங்கி பேரானந்த மடைந்து இறைவன் திருவடி நீழலில் என்றென்றும் இளைப்பாறுவதற்கு இறையருள் இன்றியமையாததாகும். அவனருளாளே அவன் தாள் வணங்கி என்ற மணிவாசகரின் வாக்கினாலே இறைவனைச் சார்வதற்கும் அவனருள் வேண்டும் என்பது புலனாகிறது.

கிருத யுகத்தில் அழுக்கின்றி ஆனந்தித்த ஆன்மா பாசவினையினால் அறிவிழந்து கண்டதே காட்சியாகத் தடுமாறி கொண்டதே கோலமாக ஏற்று அடுத்த யுகங்களில் போகங்களே பேரானந்தம் என மயங்கி கலியுகத்தில் மயக்கத்தையே மனித வாழ்க்கையாக்கித் தடுமாறுகின்றது. கருணையே வடிவான இறைவன் ஆன்மாக்கள் உய்வதற்காக இறங்கி வந்து அருள் புரியும்போது பக்குவப்பட்ட ஆன்மாக்கள் விரைவா-கப் பற்றிக் கொண்டு பரமனின் அருளானந்தத்திலே திளைத்தார்கள். பக்குவப்படாத பல கோடி ஆன்மாக்களுக்கு அருள்வதற்காக இறைவன் பல்வேறு வழிகளிளே சமய உண்மைகளை உணர்த்தி வேத சிவாகம ஞான சாஸ்திரங்களையும் அருளாளர்களின் அனுபவ வாயிலாக திருமுறை முதலான சைவ சாஸ்திரங்களையும் படைத்து அருள் புரிகின்றான்.

ஆண்டவனால் அருளப்பட்ட ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களாக விரிகின்றன. இதில் கிரியாபாத வழியாக இறைவனை அடைவதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாததாகிறது.

மாயா பாசங்கள் வசப்பட்ட ஆன்மாக்களுக்கு முதலில் அதன் வழியாகவே உண்மையை புகட்டி ஞானத்தெளிவு தந்து பேரின்ப நிலையை அறிவித்து இறைவனோடு கூட்டுவிப்பதே ஆகமங்களின் பணியாகும். இந்த வழியில் திருக்கோயில் வழிபாடு மிக அவசியமான ஒன்றாகும்.

உலக இயக்கத்திலும், ஆன்மாக்கள் ஏற்கும் சரீரங்களிலும் இரண்டறக் கலந்துள்ள பஞ்சபூதங்கள், இறைவனின் அருட்சக்தி உறைந்து வெளிப்பட்டு அருள்புரிவதற்கும் ஆதாரமாக அமைந்துள்ளன.

இறை சக்தியும் இறைவனின் பேரருளும் உலகெங்கும் நிறைந்திருந்தாலும் ஆலயங்களின் வாயிலாகத்தான் நமக்கு முழுமையாகக் கிடைக்கின்றது. நமது உடம்பே ஆலயத்தின் வடிவாகத்தான் நோக்கப்படுகிறது. ஆதலால் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்றும், ஆலயம்தொழுவது சாலவும் நன்றென்றும் பெரியோர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

கலியுக தெய்வமாகிய முருகக்கடவுளுக்கு ஆறுபடை வீடு திருத்தலங்கள் பெருமை வாய்ந்தவை. அதற்கு மேல் குமரன் குடிகொண்டு வேலாட்சி செய்து வரும் திருத்தலங்களெல்லாம் ஏழாவது படைவீடாகப் போற்றப்பெறும். திருமுருகனின் பெருங்கோயில்கள் உலகெங்கும் அமைந்துள்ளன. கடல்கடந்து நடைபெறுகின்ற இந்து சமய வழிபாட்டிலே முருகன் வழிபாடு முக்கியமாக நடத்தப்படுகிறது.

உலகின் பழம்பெரும் நாடுகளில் உலகத்தலைநகராக விளங்கும் அளவிற்கு புகழ்பெற்ற இங்கிலாந்து நாட்டின் லண்டன் மாநகரின் கிழக்குப் பகுதியில் ஈஸ்ட்ஹாம் மனோர் பார்க் என்னும் புண்ணிய பகுதியில் அமைந்துள்ள திருத்தலமே லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னம் இங்கு வந்த நமது மக்கள் வழிபாடாற்ற இடமில்லாமல் தவித்து இந்த ஆலயத்தைத் துவக்கினர். மாதமொரு பூஜையாக நடைபெற்று அருள்பெருகி 1984 இல் புதிய ஆலயம் அமைத்து திவாடானை சிவஸ்ரீ ஐயாமணி சிவாசாரியார், சென்னை காளிகாம்பாள் கோயில் சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசாரியார் போன்ற மகான்களை வரவழைத்து கும்பாபிஷேகம் செய்வித்தனர். அந்த ஆண்டே தேர்திருவிழாவும் தொடங்கப்பெற்றது.

ஆலயத்தில் நித்திய பூஜைகளும்

உற்சவங்களும் குறைவற நடத்தப்பெற்று ஸ்ரீ முருகன் அருள் உலகெங்கும் பரவியது. இங்கு நடைபெறும் புகழ்பெற்ற ஆடித் தேர்த் திருவிழாவைக் காண ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் உலகின் பல பாகங்களிலிருந்தும் பக்தப் பெருமக்கள் வந்து கூடுவார்கள். பக்தர்களின் வருகை அதிகரிக்கத் தொடங்கியதும் இடவசதி மற்ற சௌகர்யக் குறைவுகளை மனதில் கொண்டும் முருகனுக்கு முறைப்பாடியான ஆலயத்தை அமைக்க வேண்டும் என்று எண்ணிய ஆலய அறங்காவலர்கள், நிர்வாக சபையினர் ஆலயத்தை பாலஸ்தாபனம் செய்து பக்தப்பெருமக்களின் பேருதவியால் கலியுகக்கடவுளுக்கு கற்கோயில் சமைத்துள்ளனர்.

ஆலய கும்பாபிஷேகம் நிகழும் இந் நன்னாளில் இலண்டன் வாழ் சைவத் தமிழ் மக்களுக்கு அரிய சமயப்பணி செய்து வரும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் கலசம் காலாண்டிதழும் தனது 50 ஆவது இதழை வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே.

கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க வானளாவிய கோபுரமும், இரண்டு வீதிகளும் கொண்ட அழகிய ஆலயத்தில் இருந்து அருளாட்சி செய்யும் எம்பெருமான் இலண்டன் ஸ்ரீ முருகனின் பேரருள் எல்லோருக்கும் கிடைத்து இன்புற்றிருக்கப் பிரார்த்திப்போமாக.

***

# கும்பாபிஷேகமும் முருகனும்

யாகசாலைப் பூஜையை சரியாகச் செய்தால் அந்த யாக அக்கினியிலிருக்கும் எந்த தேவதையை உபாசிக்கிறோமோ அந்த மந்திரத்தைச் சொல்லச் சொல்ல அதனுடைய வடிவம் பூரணமாக வரும். அதாவது மந்திரவடிவமாக, ஆகாயத்தில் இருந்து காற்று மூலம் அக்கினிக்குள் இறைவனைக் கொண்டு வருகின்றோம். அதன் பிறகு, நீ வந்ததற்கு நன்றி என்று கூறி ஆகுதி கொடுக்கிறோம். அந்த நெருப்பிலிருந்து தர்ப்பை மூலம் கும்பத்திலிருக்கும் தண்ணீருக்குள் வரவழைக்கின்றோம். தண்ணீர் வடிவமற்றது. வடிவமற்ற ஒன்றை வடித்தில் கொண்டு வருவதற்காகத் தண்ணீரைக் கும்பத்தில் எடுத்து அதனை ஒரு பிம்பம் ஆக்குகிறோம். எப்படி? ஒரு தேங்காயை வைத்து அதைக் கடவுளின் முகமாக உருவகிக்கின்றோம் அது போல் மாவிலையைத் தலைமுடியாகவும், குடத்தை உடலாகவும், தண்ணீரை இரத்தமாகவும், உள்ளே போடப்படும் ரத்தினங்களை சப்த தாதுக்களாகவும், சுற்றப்பட்டிருக்கும் நூலை நரம்புகளாகவும் உருவகிக்கிறோம். இப்படி உடலாக உருவகித்த கும்பத்தினுள் தர்ப்பை மூலம் அக்கினியிலிருந்து அப் பரம்பொருள் பிரவேசிக்கிறார். அந்தத் தண்ணீரைக் கொண்டு போய் சிலையில் ஊற்றும்போது அப் பரம்பொருள் சிலையில் பிரவேசிக்கின்றார்.



அதாவது ஆகாயம், காற்று, தீ, நீர் மூலமாக இறைவனை மண்ணுக்குக் கொண்டுவருகிறோம். அதாவது பஞ்சபூதங்கள் வழியாக இறைவனை கொண்டு வருகின்றோம். இது தான் யாகசாலையில் நடக்கின்ற கிரியைகளின் பொருள். இது எவ்வளவு பெரிய கிரியை?

இது போலத்தான் முருகனும் உருவத்தில் வரும்போது ஆகாயமாக இருந்து சிவனின் நெற்றிக் கண்களிலிருந்து தோன்றிய அக்கினியாகி, காற்றினால் காவப்பட்டு, கங்கை மூலம் சரவணத்தில் (பூமி) வந்து உதிக்கிறார். ஆகவே ஐந்து பூதங்களை அடக்கி முருகப் பெருமான் தோன்றுவது ஐந்து பூதங்களை அடக்கி இறைவனைக் கோவிலுக்குக் கொண்டுவருவதை ஒத்ததாகும்.

**-சுகி சிவம் அவர்களின் உரையிலிருந்து**

பெரிய புராணம் பிறந்த கதை!

# உலகெலாம் .............

## கம்பவாரிதி இ. ஜெயராஜ்

உலகெலாம் அதிசயித்தது.
அரசியலைத் துறந்து அருட்பணிக்காக ஒரு முதலமைச்சர் தில்லை செல்கிறார்.
இப்படியும் ஒரு புதுமையா?
உலகியலார் வியப்பெய்தினர்.
அருளாளர்கள் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தனர்.
திருத்தொண்டர்புராணத் தீந்தமிழைப் பெறப்போகும் மகிழ்ச்சியில்,
உலகம் ஒரு தரம் சிலிர்த்துக்கொண்டது.
அதோ!
புத்திநிறைந்த நெஞ்சோடும்,
உச்சி குவிந்த கையோடும்,
தில்லையதன் திசைநோக்கி,
தன்னை மறந்து தளர்நடைபோடும் அவர்தாம் அருள்மொழித்தேவர்.
தவறு! தவறு!
சிவனடியார் சீருரைத்து செழுந்தமிழை தெய்வநிலைக்கு உயர்த்தப்போகும்,
சேக்கிழார் என்னும் செம்மல்.
இதோ!
தில்லையின் எல்லை.
கண்ணீரால் மெய்குளித்து,
காண்பரிய சிவப்பொருளைக் காணும் ஏக்கம் உள்ளமெல்லாம் நிரம்ப,
உவப்பெய்தி தனைமறந்து
மெய்சோரத் தில்லையதன் நிலம்சேர்ந்து,
மேனியெலாம் அருள் நிரம்ப,
உய்யுமோ தன்நோக்கம்? என உழலும் மனத்தோடு,
தில்லை அம்பலவன் திருவடி காண விரைகிறது அவர் பாதங்கள்.
சேக்கிழார்தம் சிந்தை மருள்விக்கும் அந்நோக்கம்தான் என்ன?
அரசபதவியைத்துறந்து இவ்வமைச்சர்,
தில்லையதன் எல்லை சேர்ந்தது எதற்காக?
அறிய விழைவார்க்காய் சற்றுப் பின்செல்வோம்.

********

சோழ அரண்மனை.
முதலமைச்சர் அருள்மொழித்தேவர் ஆசனத்தினில் அமர்ந்திருக்கிறார்.
அவரைச் சூழ்ந்து ஆன்றோர் பலர்.
அவ்வான்றோர்தம் அகச்சோர்வை முகம் காட்டுகிறது.
அத்தக்கார்தம் தாள்பணிந்து, அருள்மொழித்தேவர் பேசத்தொடங்குகிறார்.
செழுந்தமிழில் உளம்பதித்து, சிவப்பொருளே சிந்தையதாய்,
தேசத்தில் நேசங்கொண்டு,
"அறமே வாழ்வான ஐயன்மீர்!
கண்ணுரைக்கும் கருத்ததனால்,
உங்கள் அகங்கொண்ட அவலம் உணர்ந்தேன்.
ஏதுக்காய் இவ்வருத்தம் என இயம்புக!"
பணிவோடு கூடிய உத்தரவு அமைச்சரிடம் இருந்து பிறக்கிறது.
அமைச்சர் உரைகேட்ட ஆன்றோர்,

ஒருவரையொருவர் பார்க்க,
அவர்தம் முகக்குறிப்பறிந்த மூத்த பெரியார் ஒருவர் மெல்ல எழுகிறார்.
எந்நாட்டார்க்கும் அருள்செய்யும் தென்னாடுடைச் சிவனை,
எண்ணாது, மன்னனவன் இன்பத்துரை உரைக்கும்,
சிந்தாமணி நூலில் சிந்தைதனைப்பதித்து மயங்கினான்.
அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி.
வளவன் இன்பவழி நாடின்,
உலகமும் அவ்வழிதனையே நாடும்.
சிவனில் நேசம் சிதைந்தால்,
தேசம் சிதையும்.
தடுப்பது நும்கடன்
செப்புவது எம்கடன்.
இயம்பி விடைகொண்டார் சான்றோர்.
மன்னனின் மாண்ட பெரும்புகழை மங்காது காத்தல்,
தன் நீண்ட கடனென்று உணர்ந்த
நேச நெடுஞ்சர் அருள்மொழித்தேவர்,
ஆன்றோர் உரைதன்னை அகத்திருத்தி,
அவனி வேந்தன் அனபாயச் சோழன்தன் அவைசேர்ந்தார்.

********

மன்னன் அவை.
அகம்வாட அரசன் முன்நிற்கிறார் அமைச்சர் அருள்மொழித்தேவர்.
வானமே இடிந்தாலும் வாடாத தன் அமைச்சரின் வாட்டம் கண்டு
மன்னன் மனதில் மருட்சி.
"என்ன குறை இயம்பிடுக!" ஏந்தல் உத்தரவிடுகின்றான்.
மன்னவனைப் பணிந்து தன் மனவாட்டம் உரைக்கின்றார் மந்திரியார்.
"இன்பத்துறை உரைக்கும் ஏற்றமிலாச் சிறுநூலாம் சிந்தாமணியதனில்.
மன்னர் மனம் பதிந்தீர்! மக்கள் வழிதொடர்ந்தார்.
கூத்தன் திருவடியைக் கொண்டாடி நும்குலத்தோர்,
ஏற்றமுறச்செய்த எழில் சைவ மரபெல்லாம்
இக்கருத்தால் மாற்றமுறும்.
மருண்டுரைத்தார் ஆன்றோர்கள்.
ஆன்ற பேரரச! ஆன்றோர் தம் குறையகற்றி,
மீண்டும்,
சைவநெறி துலங்க சகத்தை நெறிசெய்வீர்!"
தன்னுயிர்க்கு இறுதியெண்ணாது தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்று உரைக்கும்,
மாண்புமிகு மந்திரியார் மனக்கருத்தை உரைத்திட்டார்.

செவி கைக்கச் சொற்பொறுக்கும் மன்னர் மன்னன்,
தவறுணர்ந்தான்.
மேற்சென்று இடித்து, தன்னை நெறிசெய்த மந்திரிமேல் மதிப்புயர்ந்தது.
பிழையகற்றி என்னைப் பெரும்பாவம் தனில் வீழாது,
நிலையுணர்த்தி நன்றாண்டீர்.
நேசத்தால் நெகிழ்கின்றேன்.
சிற்றின்ப நெறிகாட்டும் சிந்தாமணி விடுத்து,

பேரின்ப நெறியுணர்த்தும் பெருங்காதை எதுவென்று,
நீர் உரைத்து நெறி செய்வீர்!"
மன்னன் வேண்ட மந்திரியார் மனதில் மகிழ்ச்சி.
"கூடும் அன்பினால் கூத்தன் திருவடியைக் கும்பிட்டு உயர்வடைந்த,
வீடும் வேண்டா விறலுடையார் தம்கதையை,
ஓதி உணர்ந்தால் உய்திடலாம்."
வழியுரைத்தார் மந்திரியார்.

மன்னன் மனதில் மட்டற்ற மகிழ்ச்சி.
"ஒப்பில்லா அடியார்தம் உயர்கதையை உலகெல்லாம்,
ஓதி, உணர்ந்து, உயர்வடையக் காவியமாய்
நீரே சமைத்து நெறிசெய்ய வேண்டும்."
என்றுரைக்க. மனம்பதறி "ஏற்றமிகு தொண்டர் கதை,
நின்றுரைக்க வல்லனோ? இந்நீசன்" என மருண்டு,
நெஞ்சம் நடுநடுங்க, நீரருவி கண்சோர,
கும்பிட்டு நின்றார் அக்குன்றத்து முனிவர்.
கும்பிட்டு நின்றவரைக் கும்பிட்டான் மன்னவனும்.
"அன்பிற் சிறந்த ஐயனே! உமையன்றி,
மெய்த்தொண்டர் கதையுரைக்க மேதியினில் வல்லார் யார்?"
வினாவால் பதிலுரைத்து வேந்தன் தொடருகிறான்.
ஒப்பரிய தொண்டர் கதை.
உளம் நிரம்ப. உயிர் உயர. செவி நானீட்ட,
தப்பில்லாக் காவியமாய்த் தாமியற்றித் தரல்வேண்டும்
என்றுரைத்தான் மன்னன்.
ஏற்றமுறப் பொருள் கொடுத்தான்.
நின்றவரின் தாள் தன்னில் நெடுங்கிடையாய்த் தான்வீழ்ந்து,
அன்றுமுதல் அமைச்சர் அலர் அவர் என்று அகத்துணர்த்தி,
குன்று பெயர்ந்தாற்போல் அக்கோமகனும் சென்றுவிட,
மன்றாடும் சிவன்தாள்கள் மனம் கொண்டு,
தில்லைதனில், நின்றாடும் சிவன்தாள்கள் நெறிசெய்தால் அன்றி,
அடியார்தாம் கதைசொல்ல அறிவால் முடியாதென்னும்,
உண்மைதனையுணர்ந்து தன் உள்நோக்கம் நிறைவேற்ற,
தில்லைதனை நோக்கி அச்சிவனடியார் ஓடுகிறார்.

********

சேக்கிழார் பெருமான் தில்லைதனைத் தேடிவந்த,
நோக்கம் இதுதான்.
சித்தாந்த அட்டகத்தை செப்பிப் புகழ்கொண்ட
உமாபதியார், முன்னாளில் ஓதிவைத்த,
சேக்கிழார் புராணம் செப்பும் கதையிது.
சேக்கிழார் என்னும் அச்சீரோங்கும் மந்திரியின்,
நோக்கம் நிறைவேறியதா?
உண்மையறிய எம் உள்ளம் விளைகிறது.
அதற்காக,
மீண்டும் தில்லையின் எல்லையுள்,
புகுவார் அவர்பின் புகுவோம்.



தொடரும்......

கந்தபுராணம்

# முருகன் அவதாரம்

**முன்னுரை**

கடவுள் என்ற சொல் எல்லாவற்றையும் கடந்த பொருள் எல்லாவதற்றுக்கும் உள்ளான பொருள் என்ற கருத்துடையது. ""எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை ""என்பது ஆன்றோர் வாக்கு. தனக்கென ஓர் உருவின்றி குணம் குறியின்றி செயல் இன்றி உள்ள நிலை "சிவம்" எனப்படும். இது இறைவனின் சொரூப நிலை. ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவம் தனது சொரூப நிலையிலிருந்து இறங்கி உருவமும்,

> ***ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவம் தனது சொரூப நிலையிலிருந்து இறங்கி உருவமும், குணமும், குறியும், செயலும், கொள்வது தடத்த நிலை ஆகும். சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், நடராசர் முதலாய தோற்றங்கள் அவரது தடத்த நிலைக்கு உதாரணங்கள்.***

குணமும், குறியும், செயலும், கொள்வது தடத்த நிலை ஆகும். சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், நடராசர் முதலாய தோற்றங்கள் அவரது தடத்த நிலைக்கு உதாரணங்கள். இந்த நிலையிலேயே ஒருவரான சிவம், விநாயகர், வைரவர், வீரபத்திரர், முருகன் என்னும் வேறுபட்ட திருவுருவங்களையும் கொள்ளுகிறார். இந்த நான்கு மூர்த்த ங்களையும் சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் என உபசாரமாகக் கூறுவர். சிவம் வேறு இவர்கள் வேறு அல்லர்.

**ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்**
**பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்**
**ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்**
**போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள**
**-வல்லான்**
**- என்பது கந்தபுராணம்.**

இறைவன் பரிபூரணன். தோற்றத்துக்கு அப்பாற் பட்டவன். அவனிடமிருந்து தோன்றும் அவனது அம்சமும் பரிபூரணம் ஆனதே, அவ்வாறு பரிபூரணமான ஒன்று தோன்றியதால் முன்னர் பரிபூரணமாய் இருந்த பொருளில் ஏதும் குறைவு ஏற்படாது தொடர்ந்தும் பரிபூரணமாகவே இருக்கும். இதனை

**"பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணம் உதச்யதே பூர்ணஸ்ய பூர்ணம் ஆதாய பூர்ணமேவ அவசிஷ்யதே""**

என உபநிஷதம் விளக்குகிறது. இந்த உண்மையை விளங்கிக் கொண்டால், கடவுள் ஒருவரே என்பதும், அவரே பல பெயர்களால் விளங்குகிறார் என்பதும் உறுதிப்படும்.

**முருகன் அவதாரம்**

தேவர்களும் அசுரர்களும் அண்ணன் தம்பிகள், அசுரர் அறுபத்தாறு கோடி பேர். தேவர் முப்பத்து மூன்று கோடி பேர். இரு சாராரும் தமக்குள் பகைமை பூண்டவர்கள். அசுரர்கள் பலம் பெற்ற நிலையில் போர் செய்து வென்று தேவர்களைத் துன்புறுத்துவதும், தேவர்கள் பலம் பெற்ற காலத்து அசுரர்களைத் தோல்வியுறச் செய்து சுகிப்பதும் வழமை.

இந்த வழக்கப்படி மாயை என்னும் அசுரப் பொண்ணுக்கு காசிப முனிவர் மூலம் பிறந்த சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் ஆகியோர் சிவபிரானை நோக்கி கடும் தவம் செய்து பவ்வேறு வரங்களைப் பெற்றனர். 1008 அண்டங்களை 108 யுகம் அரசாளவும், இறவாமல் இருக்கவும் சூரன் வரம் பெற்றான். இவர்கள் தோன்றும்வரை ஒடுங்கியிருந்த அசுரர் குலம் அதன்பின் தேவர்களோடு போர் செய்து அவர்களை வென்றது. தேவேந்திரன் ஓடி ஒளிந்து கொண்டான். சூரபன்மன் தேவர்களை அடிமைகளாக்கித் தன்பணி செய்ய வைத்தான். சூரன் மகன் பானுகோபன் சுவர்க்கலோகம் சென்று இந்திரன் மகன் சயந்தனுடன் போர் செய்து, அவனைச் சிறைப்பிடித்து, சுவர்க்க லோகத்தை அக்கினிக்கு இரையாக்கினான்.

சூரனாலும் அவன் சுற்றத்தாலும் படும் துன்பம் தாங்கமாட்டாத தேவர்கள் இந்திரன், பிரமா, விட்டுணு ஆகியோருடன் திருக்கயிலாயம் சென்று சிவபிரானிடம் முறையிட்டனர். அவர்களின் துன்பம் தீர ஒரு குமாரனைத் தருவதாகப் பெருமான் அருளினார். பின் ஒரு நாள் தமது ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற ஐந்து முகங்களோடு அதோமுகத்தையும் சேர்த்து, அவ்வாறு முகங்களின் நெற்றிக் கண்களினின்றும் ஆறு அக்கினிப் பொறிகளை வெளிவரச் செய்தார். அப்பொறிகளை முதலில் அக்கினி தேவனும், பின்பு வாயுதேவனும் தாங்கிச் சென்று கங்கைநதியில் சேர்த்தனர். கங்கை அவற்றை சரவணப் பொய்கையில் சேர்த்தது.

அங்கு அப்பொறிகள் ஆறு குழந்தைகளாக அவதாித்தன.

தேவர்கள் பணித்தபடி கார்த்திகைப் பெண்கள் ஆறுபேரும் அக்குழந்தை களுக்குப் பாலூட்டி வளர்த்து வந்தனர். ஒரு நாள் சிவனும் உமையும் சரவணப் பொய்கைக்கு வந்தனர். உமையம்மையார் ஆறு குழந்தைகளையும் ஒருசேர அணைத்தபோது அவை ஆறு தலைகளும் பன்னிரண்டு கைகளும் ஓர் உடலும் கொண்ட ஆறுமுகப் பெருமான் ஆயின.

**உமையால் ஒன்று சேர்க்கப் பட்டதால் குமரனுக்குக் கந்தன் என்ற பெயர் உண்டாயிற்று!**



உமையால் ஒன்று சேர்க்கப்பட்டதால் குமரனுக்குக் கந்தன் என்ற பெயர் உண்டாயிற்று. கங்கையால் சுமக்கப் பட்டதால் கங்காசுதன் என்றும், சரவணப் பொய்கையில் அவதரித்ததால் சரவணபவன் என்றும். கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததால் கார்த்திகேயன் என்றும் அழகே உருவான முருகனுக்குப் பெயர்கள் வழங்கும்.

பெற்றோர் முருகனைக் கயிலைக்கு அழைத்துச் சென்றனர். குழந்தையான முருகன் கயிலை மலையிலும், அருகே மேரு மலையிலும் திருவிளையாடல்கள் பல செய்து கொண்டிருந்தார். தேவர்கள் மீண்டும் கயிலைக்கு வந்து சிவனை வணங்கி தங்கள் துன்பம் தீரும் பொருட்டு சூரனையும், அவன் கிளைகளையும் அழிக்க வேண்டினர், சிவனும் உமையும் முருகனுக்கு சக்திவேல், முதலாய படைக்கலங்களையும், தேவ அஸ்திர ங்களையும், தேர் முதலியனவற்றையும் கொடுத்து, வீரவாகு முதலாய நவ வீரர்கள், இலட்சம் வீரர்கள், சேனைகள் சூழச்சென்று சூரனைக் கிளையுடன் சங்கரித்து, தேவர்களுக்குப் புனர்வாழ்வு அளித்து வரும்படி பணித்தனர்.


அவ்வாறே முருகன் சென்று தாரகனைக் கிரௌஞ்சமலையோடு அழித்து, திருச்செந்தி நகரில் படைவீடு அமைத்து தங்கி இருந்தார். அங்கிருந்து வீரவாகு தேவரைச் சூரனிடத்து தூதாக அனுப்பி, தேவர்கனைச் சிறை நீக்குமாறு கேட்பித்தார். அவன் மறுத்துப் போருக்கு ஆயத்தமானான். போர்க்களத்தில் அவன் மக்களும் மந்திரி, சேனைத்தலைவர் முதலாயினோரும் முருகன் படைவீரர்களால் மாண்டனர். சிங்கமுகாசுரனை முருகன் அழித்தார்.

ஈற்றில் சூரபன்மன் பல மாயங்கள் காட்டிப் போர் செய்தும் முருகனை வெல்ல முடியவில்லை. ஒரு மாமர உருக்கொண்டு சமுத்திரத்தில் ஒளிந்து கொண்டான். கந்தன் வேலாயுதத்தை அவன் மீது விடுக்க அது தாக்க வரும்போது சூரன் தன் சொந்த உருவில் தோன்றி எதிர்த்தான். வேலாயுதம் அவன் உடலை இரு கூறாகப் பிளந்தது. பிளவுபட்ட இரு பாதிகளில் ஒன்று சேவலாகவும், மற்றது மயிலாகவும் உருக்கொண்டு கந்தனைக் கொல்ல வந்தன. அவன் திருக்கருணை அவைமீது பட, அவற்றுக்கு நல்லறிவு கிடைத்தது. கந்தன் சேவலைத் தன் கொடியாகவும் மயிலைத் தன் வாகனமாகவும் ஆக்கிக் கொண்டார்.

முருகன் மகிழ்வு கொண்ட தேவர்களைச் சுவர்க்கலோகம் சேர்ப்பித்து இந்திரனை மீண்டும் அவர்களுக்கு அரசனாக்கினார். இந்திரனது வேண்டுகோளின்படி அவன் மகள் தெய்வயானை அம்மையாரைத் திருமணம் செய்தார்.

**அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்ப தோர்மேனி ஆகக்**
**கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும்கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய.**

-கந்தபுராணம்.-



*ஈழமண்ணுக்குப் புகழீட்டித் தந்தவர்கள் வரிசையில்.......*

## இசை உலகின் முடிசூடா மன்னன்

# அளவையூர் தட்சணாமூர்த்தி

சிவசம்பு கந்தசாமி

அளவையூருக்குப் புகழ் சேர்த்துத் தந்தவர்களில் அளவையூரில் வாழ்ந்த, வாழுகின்ற மங்கல இசை வித்துவான்கள் முதலிடம் வகிக்கின்றனர். இவ் வரிசையில் இணுவிலில் பிறந்த, அளவையூரில் வாழ்ந்த இறையருள் பெற்ற, ஈடு இணையற்ற தவில் மேதை "லயஞானகுபேரபூபதி" தட்சணாமூர்த்தி போற்றுதற்குரியவர்.



இவர் இணுவிலில் வாழ்ந்த பிரபல இசைக் குடும்பமாகிய விஸ்வலிங்கம் தவிற்காரருக்கும் ரத்தினம் அம்மாளுக்கும் 26.08.1933ல் பிறந்தார். இவரை ஒரு சிறந்த தவில்மேதையாக்க வேண்டும் என்று விரும்பிய தந்தை இளவயதிலேயே இவருக்குத் தவில் கற்றுக் கொடுக்கலானார். அன்று வாழ்ந்த பிரபல தவில்வித்துவான்களாகிய என். சின்னத்தம்பி, பி.எஸ்.ராஜகோபால், காமாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோரிடம் அனுப்பித் தவில் பயிற்றுவித்தார். ஒரு நாளைக்கு 16 மணிநேரம் சாதகம் செய்வித்தார். தட்சணாமூர்த்தி எட்டு வயதினிலேயே கச்சேரி செய்ய ஆரம்பித்து விட்டார்.

இந்தியாவில் உள்ள பிரபல தவில் மேதைகளிடம் தனது மகன் வித்துவத்துவம் பெற வேண்டும் என எண்ணிய தந்தை, தட்சணாமூர்த்தியை அக்காலத்தில் பிரபலதவில் மேதையாகிய நாச்சியார் கோவில் ராகவப் பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து தவில் பயிலச் செய்தார்.

சுமார் ஒன்றரை வருட காலப் பயிற்சியின் பின் இவரது குரு "உனக்கு இனி சொல்லித் தர என்னிடம் ஒன்றும் பாக்கியில்லை. ஒரு அபிப்பிராயம் காதிலே விழுவதற்குள் உனது கைகளில் அது ஒலித்து விடும்படியான கடவுளின் வரப்பிரசாதம் பெற்ற நீ ஊருக்குத் திரும்பலாம். மகோன்னதமான பெயரும் புகழும் உன்னை வந்துசேர அதிக காலம் இல்லை" என ஆசீர்வதித்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். இக் காலத்தில் இவருடைய தந்தை இறைவனடி எய்தியதனால் இவர் மூத்த சகோதரி கணேஷ் குடும்பத்துடன் வாழ்வதற்காக அளவையூருக்குக் குடிபெயர நேரிட்டது.

இவர் பிரபல தவில் வித்துவான்களாகிய யாழ்ப்பாணம் காமாட்சி சுந்தரம் பிள்ளை, இணுவில் என். சின்னத்தம்பி, பி.எஸ்.ராஜகோபால் இந்தியாவிலிருந்து வருகை தந்த மிகப்புகழ் பெற்ற தவிற்காரர்களாகிய நாச்சியார் கோவில் ராகவப்பிள்ளை, திருமுல்லைவாயில் "லயபிண்டம்" முத்துவேற்பிள்ளை,திருவிழந்தூர் ராமதாஸ்பிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளை, வடபாதி மங்கலம் தட்சணாமூர்த்திப்பிள்ளை, கும்பகோணம் தங்கவேற்பிள்ளை, நீடா மங்கலம் சண்முக வடிவேல் முதலியோருடனும், பிரபல நாதஸ்வர வித்துவான்களாகிய யாழ்ப்பாணம் முருகையா பிள்ளை, சீர்காழி திருநாவுக்கரசுப்பிள்ளை, நாதஸ்வர உலகிலே ஜோதியாக விளங்கிய திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியம், குழிக்கரைப் பிச்சையாபிள்ளை, காரைக்குறிச்சி அருணாசலம் பிள்ளை, டாக்டர். ஷேக். சின்ன மௌலானா, திருவிடை மருதூர் வீரஸ்வாமிப்பிள்ளை,

திருவீழிமிழலை கோவிந்த ராஜபிள்ளை சகோதரர், செம்பொன்னாறு முத்துக்குமாரசாமிப்பிள்ளை சகோதரர்கள், சிதம்பரம் ராதா கிருஷ்ணபிள்ளை, திருமெய்ஞ்ஞானம் பல்லவி நடராஜ சுந்தரம் பிள்ளை, தருமபுரம் கோவிந்தராஜபிள்ளை, கோட்டூர் ராஜரத்தினம் பிள்ளை, நாமகிரிப்பேட்டை

**"உனக்கு இனி சொல்லித் தர என்னிடம் ஒன்றும் பாக்கியில்லை. மகோன்னதமான பெயரும் புகழும் உன்னை வந்து சேர அதிக காலம் இல்லை."**

கிருஷ்ணன், வேதாரணியம் வேதமூர்த்தி, மதுரை சேதுராமன் சகோதரர்கள், பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை, அளவையூர் என். கே. பத்மநாதன், எம். பி. பாலகிருஷ்ணன், எம். பஞ்சாபிகேசன் முதலியோருக்கும் தவில் வாசித்துப் பெற்ற அனுபவத்தால் இவருடைய ஞானம் மெருகூட்டப்பெற்று பிரகாசிக்கத் தொடங்கியது.

மேற் கூறப்பட்ட தவில் நாதஸ்வர மேதைகள் எமது ஊர் ஆலய உற்சவங்களுக்கு வந்திருந்த போது தட்சணாமூர்த்தி அவர்கள் இவர்களுடன் தவில் வாசித்ததை அளவையூரில் வாழ்ந்து அனுபவித்தவர்கள் உண்மையில் பேறுபெற்றவர்கள்.

1959ஆம் ஆண்டு மார்கழித் திங்களில் இவர் இந்தியாவுக்குச் சென்ற பொழுது, பல சபாக்களில் இசைக்கச்சேரிகள் நடந்து கொண்டிருந்தன. தட்சணாமூர்த்தி இந்தியாவில் இருப்பதை அறிந்த இவருடைய உயிர் நண்பரான நீடா மங்கலம் சண்முக வடிவேல் அன்றுஇரவு சென்னைத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்படும் இசை விழாவில் காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரியில் தன்னுடன் தவில் வாசிக்கும்படி கேட்டுக் கொண்டதுமல்லாமல். அன்றைய கச்சேரியை ஆரம்பித்து வைக்கும் கௌரவத்தையும் கொடுத்தார்.

தட்சணாமூர்த்தியின் தவில் ஒலிக்கத் தொடங்கியதும் இசை மேதைகளாலும் இசைப் பிரியர்களாலும் நிறைந்து வழிந்த மண்டபம் சபாஷ் கூறி கரகோசம் செய்தது. வழக்கமாக 12 மணிக்கு முன் ஒலிபரப்பை நிறுத்திக் கொள்ளும் அகில இந்திய வானொலி தட்சணாமூர்த்தி, சண்முக வடிவேல் தவில்காரர்களின் லயவின்யாசத்தின் விறு விறுப்பால் கவரப்பட்டு கச்சேரி முடியும் வரை அதனை ஒலி பரப்பி இவர்களைக் கௌரவித்தது மறக்க முடியாத ஒரு சம்பவமாகும்.

தட்சணாமூர்த்தி என்ற இறையருள் பெற்ற, அருமை மிக்க, விலை மதிப்பற்ற, தவில் பொக்கிஷத்தைத் தமிழ் நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தமை வெள்ளை உள்ளம் படைத்த நீடா மங்கலம் சண்முக வடிவேலு அவர்களுக்கு மட்டுமே உண்டு. இவர்களுடைய நட்பு தெய்விகமாது. அக் காலத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குஅழைக்கப் பட்டுக் கௌரவிக்கப்பட்ட இசைக் கலைஞர்களுள் மூத்தவர் சங்கீத பூஷணம் வித்துவான்சண்முகரத்தினம் அவர்கள் (பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர்). அடுத்தவர் தவில் மேதை தட்சணாமூர்த்தி அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் அளவையூரில் வாழ்ந்த செல்லத்துரை தவிற்காரரின் மகளான மனோன்மணியைக் காதலித்து கைப் பிடித்தார். இவர்களுக்கு இரண்டு பெண்களும் மூன்று ஆண் பிள்ளைகளும் உளர். இவர் சரித்திரம் காணாத உயர்வை எட்டிக் கொண்டிருப்பதை ஜீரணிக்க முடியாத சக கலைஞர்கள் பலரால் மறைமுகமான தொல்லைகளுக்கு ஆட்பட நேர்ந்தது. இதனால் மனவேதனையும்விரக்தியுமடைந்த தட்சணா மூர்த்தி தனது குடும்பத்துடன் இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து வசிக்கலானார். இந்தியாவில் வசித்த காலமே இவருடைய வாழ்வின்

**சங்கீர்ணகதி, அவருக்கு மிகவும் விருப்பமானவொன்று. கடுமையான சந்தத் தாளங்களில் லயவின்யாசம் செய்வது அவருக்குத் தேனில் தோய்த்த பலாச்சுளை.**

பொற்காலமாகும். எம்மவர்கள் இந்தியாவுக்குச் சென்று வாழவும் கலையை வளர்க்கவும் பாலம் அமைத்து அறிமுகம் செய்து வைத்த பெருமையும் தட்சணா மூர்த்தி அவர்களுக்குச் சேரும்.

இந்தியாவிலுள்ள இசை விமர்சகர் ஒருவரால்

மங்கல இசை மன்னர்களின் வரிசையில் அளவெட்டித் தட்சணா மூர்த்தியைப் பற்றிக் கூறப்பட்டவை இதோ: "தவில் வித்வான்களின் திறமை பலவகைப்பட்டது. சிலருக்கு லய சம்பந்தமான கணக்கு களில் நிறைந்த புத்திசாலித்தனமிருக்கும். ஆனால் கரத்திலே வேகம் அல்லது பேச்சு அதிகம். விவகாரப் புலமை குறைந்து காணப்படும். சிலர் உருப்படிகளுக்குப் பொருத்தமாக வாசிப்பதில் தேர்ந்திருக்கார். இந்த எல்லா அம்சங்களையும் முழுமையாகப் பெற்ற தவிற்கலைஞர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அவ்வகைப்பட்ட மிகச்சிலரில் நீடா மங்கலம் சண்முக வடிவேலு பிள்ளைக்கு அடுத்துச் சொல்லக் கூடிய ஒரே வித்துவானாகத் திகழ்ந்தவர் தட்சணாமூர்த்தி. கடுமையான அசுர சாதகமும் பலவகைப்பட்ட திறமை செறிந்த நாதஸ்வரக் கலைஞர்கள் பலருக்கு வாசித்து வாசித்துப் பெற்ற அனுபவமும், இவற்றுக்கெல்லாம் மேலாக இறைவனின் அருட்கொடையும் தட்சணாமூர்த்திக்கு ஈடிணையற்ற பெரும் ஸ்தானத்தைத் தேடித்தந்தன. வயதிலோ, அனுபவத்திலோ தன்னைவிட மூத்தவர்களுக்கு மிகுந்த மரியாதை கொடுக்கும் பண்பாளராக விளங்கிய தட்சணாமூர்த்தி எப்பேர்ப்பட்ட லயவிசேடங்களையும், எந்தத் தாளத்திலும், எத்தனை வேகத்தில் வேண்டுமானாலும் மணிக்கணக்கில்வாசிக்கும் வல்லமை பெற்றிருப்பவர்."

தனக்கு விருப்பமான தாளத்தில் தனக்குச் சௌகரியமானகாலப்பிரமாணத்தில் "தனி" வாசிப்பலரல்லர் அவர். நாதஸ்வரக்காரர் ராக ஆலா பனையின்போதோ, கீர்த்தனையிலோ அல்லது பல்லவியிலோ, எப்போது "லயவின்யாச" த்துக்கு இடமளிக்கிறாரோ, அப்போது அதே காலப்பிரமாணம் சிறிதும் சிதையாமல் நாணயத்துடன் தட்சணாமூர்த்தி லயவின்யாசம் செய்வதே வழக்கம்.


**வழக்கமாக 12 மணிக்கு முன் ஒலிபரப்பை நிறுத்திக் கொள்ளும் அகில இந்திய வானொலி தட்சணாமூர்த்தி, சண்முக வடிவேல் தவில் காரர்களின் லயவின் யாசத்தின் விறு விறுப்பால் கவரப்பட்டு கச்சேரி முடியும் வரை அதனை ஒலி பரப்பி இவர்களைக் கௌரவித்தது!**

"என்ன பல்லவி" என்று நாதஸ்வரக்கலைஞரிடம் முன்னதாகவே கேட்டுக் கொள்வது, "இன்ன"கீர்த்தனையில் லயவின்யாசம் கொடுக்குமாறு முன்பே தெரிவித்துக்கொள்வது இவையெல்லாம் தட்சணா மூர்த்தியிடம் என்றுமே காணப்பட்டது இல்லை. சாதாரணமாகத் தட்சணாமூர்த்தி பங்குபெறுகின்ற லயவின்யாஸ நிகழ்ச்சிகள் குறைந்தது இரண்டு மணிநேரத்துக்காவது அமையும் ஒருசமயம்

புதுக்கோட்டையில் ஐந்து முறை தட்சணாமூர்த்தி லயவின்யாசம் நிகழ்த்தினார். அன்றைய லயவின்யாசம் "இந்த பராகா" (நாதநாமக்கிரியா) என்ற கீர்த்தனையின் அதிதுரித கால ஸ்வரப்பிரஸ்தாரத்துக்குப் பின்பு நடைபெற்ற சிறப்பினைக் கேட்டுய்த்தவர்களுக்கு அதுவொரு மறக்க முடியாத லயவின்யாச நிகழ்ச்சியாகும். வடபாதி மங்கலம் தட்சணாமூர்த்திப்பிள்ளையும், யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தியும் அன்று தவில் வாசித்தனர். கண்டமோ, சங்கீர்ணமோ, எந்தக் கதியை அமர்த்திக் கொண்டாலும் கடைசிவரை, மோஹரா, கோர்வையுட்பட அந்தக் கதிக்கான சொற்களைக் கொண்டே, தட்சணாமூர்த்தி முடிப்பார். சங்கீர்ணகதி, அவருக்கு மிகவும் விருப்பமானவொன்று. கடுமையான சந்தத் தாளங்களில் லயவின்யாசம் செய்வது அவருக்குத் தேனில் தோய்த்த பலாச்சுளை.

தொடரும்....

*********



# Hindu Attainments in Positive Sciences

**Prof. B. V. Raman**

India as the home of one of the most ancient civilizations has contributed not a little to the history of scientific thought and techniques. Most scholars, when they think of the genius of the Vedic Hindu, are naturally more attracted to their noble religion, sublime philosophy and the most varied character of the rich literature and the charming devotional poetry. The Vedic Hindu in his great quest of the para vidya (supreme knowledge - satyasya satya or truth of the truths) made much progress in the apara vidya or the so called inferior knowledge or relative truths, with a completeness which is unparalleled in antiquity.

The evidence that has been accumulated from the days of Warren Hastings, the first British Governor General of India, to which every generation of devoted scholars from East and West have contributed, has revealed how hasty and unfounded is the view entertained by a section of oriental scholars - Western and Indian- that all that India could boast of in matters of science was a reflection of early Greek civilization; that the Indians were only hair-splitting philosophers not conversant with the so called positive sciences and that ancient India had neither scientific talent nor a scientific outlook.

The Hindus were in the vanguard of civilization and produced great thinkers in every field of science and art, great astronomers and great mathematicians when the ancestors of people who now claim to be enlightened were yet in a primitive condition.

In the domain of philosophy, the Hindus had developed such a variety of systems that we can find a parallel today in them for every phase of European thought. But the question may also arise: What is the use for instance of subjects like astronomy and astrology as developed by ancient Hindu thinkers, in this age of space science and space travel? The answer is: They can, if properly understood, combat the overwhelming onslaughts of the materialistic view of life, and the consequent corruption of spiritual and moral ideals so characteristic of today.

Western scholarship and its Indian counterpart tend to under estimate the antiquity of Indian culture. It tends to begin its story where it is coming to a close, such as the time of the Buddha. They attribute the achievements of Indian sciences and arts to the Greeks or other non-Indian sources. Unable to comprehend the vast time scale in which Indian culture crystallized through millennia, they transferred much of it to pre-history and mythology and superstition.

It can be conclusively established that the Hindus were the original inhabitants of India knocking down the mischievous theory of the so-called Aryan immigration from somewhere else. The earliest Aryans were conscious of the fact that they were natives of India and of no other foreign country. In fact all thoughts and sciences developed in India during the past several thousands of years are purely indigenous.

A study of Hindu methodology which is necessary for a right understanding of Hindu attainments reveals the whole movement was genuinely and positively scientific, though arrested at an important stage due to perhaps to political convulsions. Perception, observation and experiment were the main criteria of truth. The scientific method proceeded on the basis of observed instances carefully analyzed and sifted. It behoves all unprejudiced scholars to study and understand India's ancient scientific heritage and not dismiss their attainments as of no relevance to modern times.

The science of mathematics saw a high development in the hands of the Hindus. They were the inventors of the decimal system and 'zero' without which arithmetic would be reduced to non-entity.

The Yajurveda Samhita gives an account of numbers in ascending decimal scale up to parardha (or $10^{42}$). In this respect the highest terminology used by the Greeks (probably in the 4th century B.C.) was myriad (or $10^4$). In fact the ancient Hindus had developed terminology, to express numbers as large as $10^{53}$. It is interesting to note that it is the Indian numerals that are mis-named as Arabic numerals. They had attained a very high proficiency in Algebra-the Bijaganita. In fact as Manning says Hindu "excellence in algebraic analysis was attained in India independent of foreign aid".

The arithmetic of surd roots, the general resolution of the second degree had all received the careful attention of the Hindus. The credit of discovery of the principle of differential calculus generally claimed by Europeans should justly go to the great Indian mathematician Bhaskaracharya who lived about 11 centuries ago.

A perusal of the Silbasastras or the manuals for the construction of the altars (which were necessary in connection with certain religious rites) reveals the construction of squares and triangles, relation of the diagonal to the sides, etc. Apastambha describes a square to the sum of two different squares like $8^2 + 15^2 = 17^2$ ; $12^2 + 35^2 = 37^2$, etc.

According to some Western scholars G. Millhand, the Pythagorean geometry might have been inspired by the Hindu findings. A scholar by the name Pingala in his book Chandra Sutra describes the binomial theoram. The triangular array formed by the binomial coefficients was known in ancient India as Maru Prasara.

The classical period was known for the array of critical thinkers it produced. Aryabhatta (1st century B.C) was mathematician and astronomer of stature. Bhaskara, Brahma Gupta, Mahavira, Sripathi, Sridhara, etc. were all well known names in mathematics and astronomy.

The rules of extraction of square and cube roots, arithmetic progressions, summation of series, etc. were well know to Aryabhatta. He gave the value of Pi as 3.1416. The famous indeterminate equation of the second degree Ny + 1 = X2 was dealt with by Brahama Gupta. One of his researches on indeterminate equations was re-discovered a thousand years later by Euler (1707-1780). In his monumental works Lilavati or Bijaganita Bhaskara the greatest astronomer of the 10th century A.D. has dealt with indeterminate equations of the 1st and 2nd degree.

One significant feature is that none of these ancient masters claimed originality for their theories. On the other hand they have often expressly said to have taken them from earlier works.

In meteorology, the Hindus used the rain gauge in their forecasts for the year, made careful observations of the different kinds of clouds and their atmospheric phenomena and how phases of Moon and certain geometrical positions of planets caused rains, floods, earthquakes, volcanic eruptions, etc.

It might surprise many a modern scientist to learn that the Hindus had developed what was called Viman Vidya or science of aeroplanes. The Yajur Veda refers to travel in space or antariksha. According to the great law-giver Manu, science of aeroplanes was a part of a more comprehensive science called Vayu Vidya or the science of space.

In Zoology the enumeration of the species of worms, insects, reptiles, etc. was based on the external characteristics and nature of life. In Botany the observations were related to the interests of materia mediea. Experiments in metallurgy, pharmacy, horticulture and making of lenses etc. were freely drawn upon for building up scientific generalizations.

(To be continued)

**(Reproduced with thanks from The Astrolgical Magazine Vol 62 No 2)**

# CONCEPTS OF HINDUISM

## How is that the Vedha's portray one supreme; we pray to many?

The idea of Brahman portrayed in the Upanishads is not one that can satisfy the demands of the mind. The 'knowing' of which the Upanishads speak is of different order. Brahman-Atman can only be 'known' by identity with it, by direct intuition. It is Nirguna- without qualities of any sort, because these would limit its absolute nature. Since the mind deals only with relationships and qualities, the reality of Brahman remains forever outside its grasp.

It is therefore not surprising that in the period succeeding the Upanishads the idea of Brahman came to be clothed in forms which the human mind and imagination can grasp. The result was a vigourous development of theism, during which the Gods and Goddesses which today characterise Hinduism assumed much of their character. Many of the deities have Vedic origins and are varied expressions of the one all-pervasive reality.

Hindu deities are not viewed as separate and rival powers, but as different functions, different aspects, different ways of understanding and approaching the one Reality.

" The human mind of a person, who does not worship idols, can only imagine Supreme Being in the form of humans. This is nature. The various forms that lord is worshipped, human, Varaha, Narasimhsa, Arthanareeswarar, Agni, vamana, all illustrate that the supreme being cannot be contained into a single form, and it is beyond form.

One, who is worshipped in many forms, helps to understand that the one is in all forms. Ordinary man is educated to see god in every one and every thing through having different forms for the God. By allowing the Lord who is everywhere, to be contained in idol or temple, the understanding is made easier.

'Method of difference' is a mathematical analysis, in which known common statistics are used to differentiate and deduce the unknown quantities. Likewise we are given idols, and murtis to deduce and explain the unknown"

**-Chakravarthi Rajagopalachariyar -Rajaji-**

## Why Do Hindu Deities have multiplicity of limbs?

The reason the Hindu deities are represented in this way is to simply illustrate that they are gods, that they differ from human beings and have more and greater powers than humans. The symbolism extends to every detail of the image of deity. Each god also holds various objects to symbolise various aspects, and make it meaningful.

'The image of a deity is not merely beautiful, but a complex statement, product of the intellect. Every peculiarity of the attitude, of the expression, or the ornaments is of significance and is intended as a fit object for meditation'

**'Hindu Polytheism' - Alain Danielou**

## Why Does Hinduism Portray God as a Woman?

Hinduism contains many feminine forms of the Divine like Kali, Durga, Lakshmi and Sarasvati. These represent different feminine qualities and functions of the Divine, which contains both male and female energies. For example, Kali portrays the destructive energy, Lakshmi the nourishing, and Sarasvati the creative, while Durga is the Divine Mother in her protective role.

Hinduism also has many dual male-female forms like Radha-Krishna, Sita-Rama, Uma-Maheshwara, and Lakshmi -Narayan in which the female form is usually addressed first. The different masculine forms of the Divine in Hinduism have their feminine counterparts.

As Sanatana Dharma or a universal tradition, Hinduism recognises that the Divine contains both masculine and feminine attributes. Without giving proper honour to the feminine qualities a religion must be incomplete and one-sided, which must result in its teachings having negative consequences. Without recognising the feminine aspect of Divinity one cannot claim to know God. To recognise the feminine is necessary to restore wholeness, completeness and universality.

"If God is our- father, why cannot God be our Mother? If we are the children of our heavenly Father, why cannot we be the children of our heavenly Mother?" This rhetorical question is the basis of why Hindus recognise and accept both male and female aspects of Nature and worship the Supreme Reality in the form of Mother, Father, Friend, Master, Guru, and Saviour.

Thus Lord Krishna declares in the Bhagawad Gita:
"I am the Father- of this Universe. I am the Mother of this universe, and the Creator- of all. I am the Highest to be known, the Purifier, the holy OM, and the three Vedas."
(BG 9.17)

By worshipping God as the Divine Mother, a Hindu can more easily attribute motherly traits to the Lord, such as tenderness and forgivingness. The natural love between a Mother and her child is the best expression of the Lord's unconditional love for us as children of God.

In the most representative Hindu view, the universe is the manifestation of the creative power (shakti) of Brahman, whose essence is absolute existence, consciousness, and bliss (or in Sanskrit, sat-chit-ananda). Since all created forms proceed from the womb of the mother, the creative power (Shakti) of God is recognised by Hindus as the female principle of the motherly aspect of nature. In this sense we are all children of the Divine Mother. We are contained by Her before our manifestation and nourished by Her throughout our existence.

To a Hindu, the motherly aspect of God in nature is full of beauty, gentleness, kindness, and tenderness. When we look upon all the glorious and beautiful things in nature and experience a feeling of tenderness within us, we feel the motherly instinct of God. The worship of God in the form of Mother is a unique contribution of Hinduism.

When a devotee worships God as Divine Mother, he or she appeals to Her tenderness and unconditional love. Such love unites the devotee with God, like a child with its mother. Just as a child feels safe and secure in the lap of its mother, a devotee feels safe and secure in the presence of the Divine Mother.

Sri Ramakrishna, one of the greatest Indian sages of modern times, worshipped the Divine Mother Kali during his entire life. He established a personal relationship with Her and was always conscious of Her presence by his side.

In Hinduism, Divine Mother is the first manifestation of Divine Energy. Thus with the name of Divine Mother comes the idea of energy, omnipotence, omnipresence, love, intelligence, and wisdom. Just as a child believes its mother to be all-powerful, and capable of doing anything for the child, a devotee believes the Divine Mother to be all merciful, all-powerful and eternally guiding and protecting him with her invisible arms.

The worship of God as Mother has had a significant impact on Hinduism. The position of women in the Hindu religion is dignified because each woman is considered a manifestation of the Divine mother. Hindus view man and woman as the two wings of the same bird. Thus, a man is considered incomplete without a woman, since "it is not possible for a bird to fly on only one wing"
(---Swami Vivekananda.)

Through the worship of God in the form of Mother, Hinduism offers a unique reverence to womanhood.

## Who are Brahma Vishnu & Siva?

Hindus believe in one major force that controls the universe. They refer to this as 'NIRGUNA BRAHMAN' or 'SIVAM' meaning beyond description.

Ordinary man cannot understand this and hence three stages were defined and represented by idols. The gods of the Hindu universe are guardians of the natural order. They help humans enjoy a worldly life. They also provide the means to break free from the wheel of existence.

The three supreme manifestations of the supreme divine principle are:

Brahma, the creator, who introduces the soul into the cycle of life;
Vishnu, the sustainer, who helps the soul participate in the cycle of life;
Shiva or Uruthra, the destroyer, who liberates the soul from the cycle of life

Brahma is said to have four faces representing the four directions, aided by his consort Saraswathi - God of knowledge. Brahma worship has diminished and a note worthy temple can be found in Pushkar.

Vishnu worship is popular as he is revered as the saviour of the universe aided by consort Luxmi goddess of wealth. It is believed that Lord Vishnu comes to earth in human forms - Avtars, to save from destruction.

Siva, in the form of Uruthra, is worshiped as lord of destruction. His consort is Parvathi/Uma . In Siva Purana it is revealed that he had come to earth in his 'Leelai' - test/play with his devotees. Ganesh and Murugan are worshipped as his sons.

***To be continued...***

# 6. PATTINATHAR - I

*Story* : **Vandu Mama** *Graphics* : **Padmavasan**

**1**

Sivanesar was a very rich merchant in Kaveripoompattinam. His wife was Jnanakalai.

They had a son. His name was Swetharanyar. He was also called Thiruvenkadar.

Thiruvenkadar had an elder sister too.

**2**




**3**

Thiruvenkadar was very intelligent. He became a great scholar and simultaneously a great devotee of Siva. He was a successful merchant. He spent a lot of money in charity.



**4**

When Thiruvenkadar was of age he married Sivakalai, daughter of Sivachidambaram-Sivakami couple.


**5**


Thiruvenkadar couple visited many temples ...






**6**


Siva Sarma lived in Thiruvidaimarudhur with his wife Suseela. They were great devotees of Siva. They served the devotees spending all their wealth. At last, they became poor.




7
Oh! What a beautiful male child!
Thiruvenkadar has no issues. He yearns for a child. We shall give this child to him and get gold equal to the weight of the child. With that gold we can serve the devotees.
8
Thiruvenkadar accepted the child gladly and gave them the gold they wanted.
Sivakalai! This child was found under a Vilva tree. Definitely Siva himself has kept him there for us. Let us name him Marudhavanan.
9
Marudhavanan grew up as a handsome young man, studied well and helped his father in his business...
Father, I too would like to go to foreign countries by ship and do business.
Son, I will not be able to live without you. I can't send you abroad.
10
At last, the father had to yield to the request of his son.
Marudhavana, come back successfully. Buy good articles from there and bring them.


11
Marudhavanan made good business and earned a lot of money. But to the wonder of wonders he purchased cow-dung cakes and other fuel materials and loaded the ship full.
What! Thiruvenkadar's son doing this!...Has he come here all the way taking a ship just to buy this cow-dung cakes! What a pity! What a shame!
This fellow's brain is deranged! Poor Thiruvenkadar!
12
The ships returned to Kaveripoompattinam.
Oh Thiruvenkadar! See the great things brought by your darling son! Ha... Ha...Ha...
Why are you laughing? What has he brought that you are laughing like this?
What else? A lot of cow-dung cakes, other fuels etc, etc! Ho... Ho...Ha... Ha...
13
Marudhavanan, What is this I am hearing? Is it true?
Yes, father...
What happened to you? Have you lost your senses? Have you gone all the way just to purchase these useless cow-dung cakes! Shame! Don't stand before me!


14
Thiruvenkadar could not control himself. In great anger he went to the place where the cow-dung cake bundles were piled...
Oh! I have a stupid boy as my son! Mere cow-dung cakes!... Ah! What is this! Pearls, diamonds, gold—all inside the cow-dung cakes! What a mistake I made! Oh, my son...
15
Struck with wonder Thiruvenkadar ran to the house to see Marudhavanan.
Oh my son Marudhavanan! I am fool, I am stupid! Without knowing your greatness I abused you. Sivakalai, where is our son?
Giving this box to me to be handed over to you, he has gone out.
16
Inside the box there was a small palm leaf in which it was written...
Nothing will accompany you to the Unknown Land after death...
Yes. What a truth! When I pass away I can't even take a needle with me...
17
My eyes are opened. My son, you have lit the lamp of knowledge in me. I will renounce the world now.
Thiruvenkadar renounced the world. People called him 'Pattinathar'.
To be continued...
Reproduced with thanks to Ramakrishna Mission


கலசத்தின் சீரிய பணி தொடர எமது வாழ்த்துக்கள்
தமிழ் மங்கையர்
அங்க அழகுக்கு
மெருகூட்டும் புத்தம்புது
டிசைன்கள்
Royal Jewelry
உங்கள் எண்ணமும்
எங்கள் கை வண்ணமும்
ஒருங்கமைந்தால்
உருவாவது தரமான
கண்ணைப் பறிக்கும்
வண்ண நகைகள்!
287 High st. North, Eastham, London E12 6SL
Tel : 020 8472 5500

# SRI MURUGANS ENTERPRISES

177 Church Road, Manor Park, E12



- **Pooja things**
- **Grocery** English/Asian/Carribean
- **Fruit &Vegetables**
- **Frozen Food**
- **Top up** Mobile Phones /Gas/Electricity Charge
- **Cash Machine**
- **Video Rental** (Hindi/Tamil)
- **News Papers**
- **International Calling Cards**
- **Travel Cards**

**Tel : 020 8478 7912**

# PARTY SERVICES

## Best Decorations

www. tamilparty.co.uk




திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள், Reception Engagement போன்றவற்றுக்கு அழைப்பிதழ்கள் அச்சிட்டுத் தரப்படும்.

உங்கள் பெயரை தமிழிலும் ஆங்கலித்திலும் Baloon இல் 24 மணி நேரத்திற்குள் பொறித்துத் தருகிறோம்!

**Tel : 020 8552 9336 Mob : 07957 6322656**


**342 High Street North, East Ham, E12 6PH**

கலசத்தின் சீரிய பணி தொடர எமது வாழ்த்துக்கள்

# K.S.P

## Super Foods and Off Licence

பூஜைப் பொருட்கள்,
இலங்கை, இந்திய, ஆபிரிக்க
உணவுப்பொருட்கள், உடன்
மரக்கறி வகைகள்,
குளிர்பானங்கள், குறைந்த
விலையில் தொலைபேசி
அட்டைகள் மற்றும் அனைத்து
தேவைகளையும் ஒரே இடத்தில்,
மலிவாக எம்மிடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்



**318 High St North**
**Manor Park, London E12 6PS**

**Cut Price Phone Cards**

**Tel : 020 8471 7806**
**Fax : 020 8552 0300**
**Mob : 07958 360 176**


கலசத்தின் சீரிய பணி தொடர எமது வாழ்த்துக்கள்
Rani Fashions
302 High St, North, Manor Park,
London E12 6SA
இந்தியாவிலும், சிங்கப்பூரிலும்
இருந்து தருவிக்கப்பட்ட சேலைகள்,
பஞ்சாபிகள், சிறுவர் ஆடைகள்,
Party dress திருமணக் கூறைப்பட்டுப்
புடவைகள்,
பட்டு வேட்டிகள்
முதலிய அனைத்துக்கும்
இன்றே நாடுங்கள்!
Tel : 020 8472 9970
Fax : 020 8767 3784

# The Three Foolish Scholars and the Wise Friend

Four boys were best friends since their childhood. They had studied all the scriptures under the same teacher and were well versed in all rituals. However, three of them were more scholarly than the fourth. The fourth friend was not scholarly but sensible. Yet he was considered a dullard by the other three.

Now in their youth, they wanted to test their knowledge and also earn wealth. So they decided to go to the city and gain the King's patronship for their knowledge. One of them said, "I feel only the three



of us should go as we are scholars, but the fourth one must stay behind, as he is so dumb."

"No, dear friend," said the second one, "we cannot do so, for we have been together since childhood in every endeavour." The third one added, "Yes, we must stick together as foursome as we have always done."

So. The four friends went to the city. On their way they passed through a forest. There they saw a skeleton of a lion. The first one said, "Ah, there is a chance for me to test and display my learning. I will




assemble the skeleton." The second one announced, "I will supply the skeleton with skin, flesh and blood." Third one said "And I shall bring the creature back to life!"



At this point, the three looked at the fourth friend who was a dullard in their opinion. The sensible one said, "Friends, I advise you against these tests, for if this wild and ferocious lion comes to life he will surely kill us"

"Oh you are as dumb as we always thought and a coward too" said the three friends. At this the fourth friend said, "Do as you want to, but let me climb up a tree to protect myself before you perform your life giving task." The friends agreed and the sensible friend scrambled up a

tree.



Then the first person got the skeleton together, the second provided the skin, flesh and blood and the third one gave it the breath and life.

The instant it came to life, the lion roared and jumped at the three scholars. They tried to run away but the lion caught them and ripped them apart. Then it leisurely had its lunch and left the spot.



Then the sorrowful yet sensible friend climbed down the tree and went home safe.

**Moral:**
Scholarship is less important than sensibility.

Let us learn

# Thirukkural

# திருக்குறள்



## Friendship

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு

1.What is there in the world that is so difficult to acquire than friendship? And what other armour equals it as a defence against the actions of foes?

---

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையர் நட்பு.

2.The friendship of the wise people is like the waxing of the crescent moon; but the alliance of fools is like the waning of the moon.

---

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

3.The friendship of the worthy is like the reading of great books; the more a person studies them, the more delight a person will discover in them.

---

நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்
மேற்சென்(று) இடித்தற் பொருட்டு

4.The object of friendship is not merry making; but the restraining and reproving of oneself when one goes astray.

---

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்

5.Constant meeting and companionship are superfluous; it is the union of hearts that makes the bond of friendship strong.

---

முகம்நக நட்பது நட்பன்று, நெஞ்சத்(து)
அகம்நக நட்பது நட்பு.

6.Friendship is not the companionship that smiles to the face; it is rather the love that delights the heart.

---

அழிவி னவைநீக்கி ஆறுய்த்(து) அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

7.A friend is one who turns you away from wrong, directs you towards the right and shares your distress in misfortune.

---

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

8. A true friend is one who hastens to help someone in his misfortune, just like the hand of a person hastens to cover the body when their garment is blown away.

---

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

9.Where does the friendship reign? Where two hearts combine to lift each other up in every possible way.

---

# நான் ரசித்த கவிதைகள்

### ஞானம்

ஞானம் பெற்றது
நீ
உன் மண்ணில்
பள்ளிக்கூடங்கள்
கட்டப்பட்டதால்
நான்
என் மண்ணில்
பள்ளிக்கூடங்கள்
இடிக்கப்பட்டதால்.

### கோயில்

செருப்புகளை
வெளியே
விட்டு
உள்ளே
போகிறது
அழுக்கு.

### கூண்டு

விடுதலை
ஆவாரா
சிறையில்
இருந்து
என்
கணவர்?

சோதிடம்
கேட்கிறாள்....
கூண்டுக்கிளியிடம்.

### கொலை

ஒருநாள்
வாழ்க்கை
பூவுக்கு
விரியுமுன்பே
பறித்து இறைவனுக்கு
அர்ச்சனை செய்கிறான்
நூறாண்டு
வாழ்க்கை
வேண்டி
தனக்கு.

காசி ஆனந்தனின் "நறுக்குகள்"
தொகுப்பிலிருந்து எழுதியனுப்பியவர்:
வாகீசன் செல்வராஜா கனடா.

## Competition questions for this issue: (Closing Date 15 July 2005)
**(Suggested age 9+)**

1. What is more important than scholarship?
2. Why do Hindu deities have many limbs?
3. Complete the following sentence: 'Hindu deities are not viewed as...'
4. Why does Hinduism portray God, also as a woman?
5. "நகுதற் பொருட்டன்று" என்ற திருக்குறளை எழுதி, அதன் கருத்தையும் தருக.
6. உண்மையான அன்பும் நட்பும் உள்ளவர்களாக இராமாயணத்தில் வரும் சிலரின் பெயரைக் குறிப்பிடுக.
7. "அருவமும் உருவுமாகி" என்ற கந்தபுராணப் பாடலை எழுதுக.
8. கூனிக்கு ஏன் இராமரில் கோபம் இருந்தது?
9. கூட்டுப்பிரார்த்தனையின் முக்கியத்துவம் என்ன?
10. கும்பாபிஷேகத்தின் போது கும்பத்தை எப்படிக் கடவுளின் உடலாக உருவகிக்கிறோம்?

**Questions may be asked from issue 50 onwards. Back issues are available on request. Please keep them safe.**

***All students who participate in this competition from Issue 46 are awarded 10 points each (per issue).***


***Your Name, Age, School and Tel. must be stated with the answers, please.***

**Special Prizes for to celebrate 50th Issue!**
**For 3 lucky winners...**


***1st Prize - CD/MP3 player***




***2nd Prize - DVD Player***



***3rd Prize - Book***




**( Free Gifts will be awarded to EVERYONE who writes correct answers!)**

The help of **parents** & teachers is **necessary** for this project.

**(All the answers can be found within this magazine itself)**

**Answers to Issue: 49**

**Naalvar Tamil Academy**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Hindujan | Vaityanandan | 10 | 40 |
| Shironika | Vaityanadan | 10 | 40 |
| Sobiga | Vaityanadan | 10 | 40 |
| Mythilli | Jeganathan | 10 | 30 |
| Thanusha | Perinpanathan | 10 | 30 |
| Arudchiga | Sivanesan | 10 | 20 |
| Mayuri | Jeganathan | 10 | 20 |
| Meenuja | Logasounthiran | 10 | 20 |
| Sivackshan | Sivanesan | 10 | 20 |
| Thurigah | Logasounthiran | 10 | 20 |
| Achuthan | Balasingam | 10 | 10 |
| Amalan | Tharmarajah | 10 | 10 |
| Anusha | Balasingham | 10 | 10 |
| Arulram | Nadarasalingam | 10 | 10 |
| Arunan | Tharmarajah | 10 | 10 |
| Arunniya | vajera | 10 | 10 |
| Ayuaran | Vipulananthan | 10 | 10 |
| Doreena | Arokianathar | 10 | 10 |
| Gowreesan | Pushpanathan | 10 | 10 |
| Janani | Suresh | 10 | 10 |
| Kasthuri | Jeyashankar | 10 | 10 |
| Kavin | Thiruhsivam | 10 | 10 |
| Keshana | kumar | 10 | 10 |
| Mathura | Balasubramaniam | 10 | 10 |
| Pavithra | Sritharan | 10 | 10 |
| Pranavan | Sriharan | 10 | 10 |
| Rajinthan | Sivalingam | 10 | 10 |
| Shinmayan | Atheesan | 10 | 10 |
| Sirojan | Sivalingam | 10 | 10 |
| Sujeevan | Hariharan | 10 | 10 |
| Thanarubini | thanarajah | 10 | 10 |
| Tusanthan | Sivagnanam | 10 | 10 |
| Vithuran | Kuganathan | 10 | 10 |
| Ashaanth | Sounthararajan | | 10 |
| Shushaanth | Sounthararajan | | 10 |
| Adshara | | | 10 |
| Asvini | Nadarasalingam | | |
| Dineshkanth | Kiritharan | | |
| Piriyanka | Sivakumar | | |
| Ramintha | Bitnarajah | | |
| Rishanth | Sivanathan | | |
| Sayankan | Sivakumar | | |
| Subarna | Manikkaratnam | | |
| Vinitha | Bitnarajah | | |

**Thiruvalluvar Tamil School**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Sayanthini | Vairavanathan | 10 | 40 |
| Archana | Sasitharan | 10 | 30 |
| Nivetha | Sivanantharajah | 10 | 30 |
| Apargitha | Ravindranathan | | 30 |
| Thushyanthan | Ravindranathan | | 30 |
| Jathurshika | Vigneswaran | 10 | 20 |
| Thuvaragan | Ravindranathan | | 20 |
| Cucani | Chananathan | 10 | 10 |
| Janani | Vijayamonohar | 10 | 10 |
| Jatheeph | S | 10 | 10 |
| Logini | Sivaselvam | 10 | 10 |
| Raveethan | Gunaratnarajah | 10 | 10 |
| Sahana | Ravikumar | 10 | 10 |
| Sivaanya | Sivakumaran | 10 | 10 |
| Thiviya | Thanabalasingam | 10 | 10 |
| Yasmin | Sainudin | 10 | 10 |
| Sunantha | Kanthasamy | | 10 |
| Bhanuja | Balakrishnan | | 10 |
| Brahalathan | Balakrishnan | | 10 |
| Geerthana | Vijayan | | 10 |
| Niruban | Jeyakumar | | 10 |
| Nishany | Jeyapalan | | 10 |
| Shahana | Sundaresan | | 10 |
| Thanushyah | Alaguthurai | | 10 |
| Vijenthana | Vijayan | | 10 |
| Yarlinie | Thanabalasingam | | 10 |

**North London Tamil School**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Arthavan | Manoharan | 10 | 40 |
| Birawi | Manoharan | 10 | 40 |
| Nitharan | Puvanendran | 10 | 40 |
| Prabesh | Krishnakumar | 10 | 40 |
| Ajantha | Ballard | | 20 |
| Amintha | Ballard | | 20 |
| Anita | Ballard | | 20 |
| Arunan | Logeswaran | | 20 |
| Sithuya | Sivagnanam | | |

**Hendon Tamil School**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Kabilan | Selvamuruganantham | 10 | 40 |
| Punya | Selvamuruganantham | 10 | 40 |
| Thanushan | Mohanarajah | | 20 |
| Pratheep | Premaraj | | 20 |
| Vijievan | Jeevathayalan | | 20 |
| Prathaphan | Sivakumar | 10 | 10 |
| Iswaryaah | Balakrishnan | | 10 |
| Senthooran | Kalaimohan | | 10 |
| Venkadesh | Vigneswaran | | 10 |

**Kingsbury Tamil School**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Tharanny | Srisatkunam | 10 | 20 |
| Aathavan | Srisatkunam | 10 | 10 |
| Kishan | Chandrakumar | 10 | 10 |
| Mithushan | Sathiyaseelan | 10 | 10 |
| Mithushan | Surendra | 10 | 10 |
| Nihila | Paranurajan | 10 | 10 |
| Nirujan | Thillairajah | 10 | 10 |
| Puvi | Vamalaswaran | 10 | 10 |
| Sangeev | Delipkumar | 10 | 10 |
| Vakeesan | Mahendralingam | 10 | 10 |
| Yamesha | Sriskandarajah | 10 | 10 |
| Akalya | Selvarajah | | 10 |
| Januja | Sriskantha | | 10 |
| Oviya | Nagulenthiram | | 10 |
| Ragulan | Balendra | | 10 |
| Thushyanthi | Arumaithurai | | 10 |

**London Tamil Centre**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Sankirtan | Srenathan | 10 | 40 |
| Ushani | Srenathan | 10 | 40 |
| Schwetha | Sriranjan | | 30 |
| Arudkumaran | Suriyakumar | | 20 |
| Akalja | Logeswaran | | 10 |
| Anuja | Satchithananthan | | 10 |
| Dushiyan | Piruthivirajah | | 10 |
| Maathumai | Navaneethanathan | | 10 |
| Rajin | Rajasingham | | 10 |
| Sarangan | Kathirgamanathan | | 10 |
| Sharmila | Tharmakulasingham | | 10 |
| Thanusha | Panchalingam | | 10 |

**Harrow Tamil School**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Abira | Sivalingam | 10 | 40 |
| Agalya | Sivakumar | 10 | 40 |
| Anika | Gnaneswaran | 10 | 40 |
| Eshan | Balachandran | 10 | 40 |
| Karthiha | Sivalingam | 10 | 40 |
| Rakulan | Sivalingam | 10 | 40 |
| Sailakshmi | Gnaneswaran | 10 | 40 |
| Vaishnavi | Balachandran | 10 | 40 |
| Elayitha | Sivarajah | | 30 |
| Kaithiri | Shanmugalingam | | 10 |
| Prasanth | Sabanathan | | 10 |
| Priyanthi | Sivarajah | | 10 |

**West London Tamil School**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Archanaa | Elankovan | 10 | 30 |
| Brenda | Poobalasingham | 10 | 30 |
| Jese | Navaranjan | 10 | 30 |
| Piranavan | Ravivarman | 10 | 30 |
| Piranavan | Sriranganathan | 10 | 30 |
| Pirathiva | Sriranganathan | 10 | 30 |
| Rajinthan | Rasaiyah | 10 | 30 |
| Thivagar | Yogeswaran | 10 | 30 |
| Prasanaa | Amirthalingam | | 30 |
| Agaash | Navaranjan | 10 | 20 |
| Ahsha | Logeswaran | 10 | 20 |
| Anujan | Srikantha | 10 | 20 |
| Faatima | Samat | 10 | 20 |
| Keerthana | Ganeshalingam | 10 | 20 |
| Kowsalya | Srikantharajah | 10 | 20 |
| Mounisha | Srithas | 10 | 20 |
| Naventhan | Ganeshalingam | 10 | 20 |
| Nilani | Rajeswaran | 10 | 20 |
| Nivitha | Nagendrabalan | 10 | 20 |
| Pirathiba | Sriranganathan | 10 | 20 |
| Rajithan | Puventhiranathan | 10 | 20 |
| Santheeep | Sritharan | 10 | 20 |
| Sinthuja | Sriskantharajah | 10 | 20 |
| Sivarenthan | Sivalogan | 10 | 20 |
| Sobiya | Shanmuganathan | 10 | 20 |
| Srinithi | Aravinthan | 10 | 20 |
| Vinoth | Emmanuel | 10 | 20 |

| | | New Points | Total |
|---|---|---|---|
| Zakya Banu | Dawood | 10 | 20 |
| Gajinath | Jeyakumar | | 20 |
| Keerthana | Rajakumaran | | 20 |
| Maithili | Sivakumar | | 20 |
| Piranavi | Jeevarajah | | 20 |
| Sahaana | Thayaparan | | 20 |
| Shobithaa | Sritharan | | 20 |
| Sinthuja | Muralitharan | | 20 |
| Vaishnavi | Jeevarajah | | 20 |
| Vinuja | Premakumar | | 20 |
| Yamini | Ganeshalingam | | 20 |
| Aravinth | Sathiyatharan | 10 | 10 |
| Baheerathi | Gunaratnam | 10 | 10 |
| Kajamugan | Shanmuganathan | 10 | 10 |
| Kamsa | Parameswaran | 10 | 10 |
| Kanusha | Kamalarathan | 10 | 10 |
| Mirujan | Nadesan | 10 | 10 |
| Nalothiya | Nambirajah | 10 | 10 |
| Nathusha | Srithas | 10 | 10 |
| Neibiya | Seastiampillai | 10 | 10 |
| Sanita | Nadarjah | 10 | 10 |
| Sarjitha | Nagendrabalan | 10 | 10 |
| Shafeek Ali | Mohamed | 10 | 10 |
| Sivareka | Sivalogan | 10 | 10 |
| Stephany | Ravinthiran | 10 | 10 |
| Surega | Sriskantharajah | 10 | 10 |
| Ananth | Arumugasamy | | 10 |
| Anisiga | Mahendran | | 10 |
| Anuthya | Nambirajah | | 10 |
| D | Denkitha | | 10 |
| Janci | Chandrakumar | | 10 |
| Jeevapriya | Sockanathan | | 10 |
| Jenad | | | 10 |
| Jesintha | Amirthalingam | | 10 |
| Jeyagovarthan | Sivasubramaniam | | 10 |
| Keerthiga | | | 10 |
| Krishika | Balarasa | | 10 |
| Lahari | Jothinathan | | 10 |
| Lavanya | Loganathan | | 10 |
| Mayora | Chandrakumar | | 10 |
| Mithushan | Sathiyaseelan | | 10 |
| Nathusha | Srithas | | 10 |
| Nivethah | Arulanantham | | 10 |
| Premakathian | Premsankar | | 10 |
| Ranila | Chandrakanthan | | 10 |
| Sabesan | Thayaparan | | 10 |
| Sailajah | Suresh | | 10 |
| Sajitha | Srimurugan | | 10 |
| Sharanya | Ketheeswaran | | 10 |
| Sharenieka | Ketheeswaran | | 10 |
| Sinthuja | Mahaligam | | 10 |
| Suvetha | Sivanesan | | 10 |
| Suyana | Lakshmanan | | 10 |
| Thamilini | Sakthi | | 10 |
| Thanuja | Pathmanathan | | 10 |
| Thivja | Yoganathan | | 10 |
| Vaasuhi | Alageswaran | | 10 |
| Vinukshan | Santharuban | | 10 |
| Vithuran | K | | 10 |
| Vithurshana | Santharuban | | 10 |
| Janarthanan | | | |

**Kingston Institute of Tamil Culture**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Sharanya | Maheetharan | 10 | 40 |
| Annuja | Vijayakumar | | 20 |
| Ahrabee | Balakrishnan | | 10 |
| Raagulan | Vijayakumar | | 10 |

**Sivakumaran Tamil School**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Vijithan | Selvarajah | | 10 |
| Vinothan | Selvarajah | | 10 |

**Schools not known**

| | | New Points | Total |
|---|---|---|---|
| Sangeitha | Kowarthana | 10 | 10 |
| Pratheep | loganathan | 10 | 10 |

# திருக்கடவூர் அபிராமி அம்மன்

தமிழ்நாட்டில் மாயவரம் அருகில் உள்ள சைவ வழிபாட்டுத் தலம் திருக்கடவூர். இங்குள்ள கோவில் புகழ் பெற்றது. முன்பு மார்க்கண்டேயருக்கு யமனை அழித்து உயிர் கொடுத்தார். அதனால் அவருக்கு அமிர்தகடேஸ்வரர் என்று பெயர். அம்மன் பெயர் அபிராமி.

சுமார் 300 ஆண்டுகள் முன்பு சுப்பிரமணி ஐயர் என்னும் அருச்சகர் அம்மனுக்கு பூசை செய்து வந்தார். இவர் பெரிய கல்விமான். சிறந்த தேவி பக்தர். ஒரு நாள் மாலை இவர் அம்மனை நன்றாக அலங்காரம் செய்து பூக்களால் அருச்சித்து தியான நிலையில் கண்மூடி அமர்ந்திருந்தார். அப்போது தஞ்சை மன்னர் சரபோஜி அரசன் வருகை தந்திருந்தார். அதை கவனியாது தியானத்திலிருந்த அவரைத் தட்டி எழுப்பினார். சிலர் ஜபமாலை கிறுக்கன், பித்துப்பிடித்தவன் என்று பரிகசித்தனர். மோன நிலையில் இருந்த ஐயரோ திடுக்கிட்டு எழுப்பினார். அன்றைய தினம் அமாவாசை நாள் அரசன் அன்றைய நாள் என்ன திதி கொண்டது என்று வினவ ஐயர் அம்மனின் அருள் பிரகாசத்தில் மூழ்கி இருந்தமையால் அன்று பௌர்ணமி என்ற கூறி விட்டார். அரசனோ வெகுண்டான். இவன் கர்வம் பிடித்தவன் என்று நினைத்தான். விடியற்காலைக்குள் வானத்தில் பௌர்ணமி முழு நிலவு தோன்றாவிட்டால் உன் உயிருக்கு ஆபத்து என்று கட்டளையிட்டு விட்டான்.

ஐயர் சிறிதும் மனம் கலங்கவில்லை. தாம் வேண்டும் என்று கூறவில்லை. அம்மனின் திருவருள் தான் அவ்விதம் கூற வைத்தது என்று கருதினார். அபிராமி அந்தாதி பாடத் தொடங்கினார். 78 பாடல்கள் முடிந்ததும் நிலவு தோன்றவில்லை. அமாவாசையன்று எப்படி நிலவு வரும்? ஆனால் 79 ஆவது பாடல்பாடும் போதும் ஒரு பெரும் சோதி தோன்றியது. அம்மன் தன் காதில் இருந்த வைரத்தோடு ஒன்றை கழற்றி வானவீதியில் எறிந்தாள். முழுநிலவாய் அது பிரகாசித்தது. எல்லாருக்கும் அதிசயம், வியப்பு, சுப்பிரமணி ஐயரை அபிராமி பட்டர் என்று அழைத்து போற்றினர். ஐயர் மீதியுள்ள பாடல்கள் அனைத்தும் (101 பாடல்கள்) பாடி முடித்தார். அரசன் அபிராமிப் பட்டரின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

**பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்**
**காத்தவளே, பின்கரந்தவளே, கறைகண்டனுக்கு**
**மூத்தவளே, என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே**
**மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம்**
**-வந்திப்பதே**

அபிராமிஅந்தாதி-13

**எழுதியவர் சுவேதா ஸ்ரீரஞ்சன்**

---

### நண்பன்

உண்மையான நண்பனிடம் இருந்து கிடைக்கும் அன்பு தூய்மையானது. ஆபத்தில் உதவுபவன் தான் உண்மையான நண்பன். எனக்கு பல நண்பர்கள் உள்ளனர்.
ஆனால் என் உயிர் நண்பர்கள் அப்பாவும் என் அருமைத் தம்பியுமே. எனக்கும் அப்பாவுக்கும் தம்பிக்கும் உள்ள உறவு அப்பா, தம்பி என்பதை விட நண்பன் என்பதே பொருந்தும்.

**வர்சிகன் பிரதீபன்**
**வயது ஐந்து**


---

### கதக் நடனம்

கதக் என்பது வடஇந்தியாவில் வழங்கிவரும் ஒருவகை நடனத்தின் பெயராகும். இது மிகப் பழைய நடனக் கலையாகும். கதக் ஆடுபவர்கள் கால்களில் சதங்கைகளைக் கட்டிக்கொள்வார்கள். இரு கால்களையும் ஒரே சமயத்தில் தூக்கித் தாவி வேகமாக அசைத்து ஆடுவார்கள். உடல் வளையாது நெளியாது. இவர்கள் நடக்கும்போதும், வளைவதில்லை. இவர்கள் எந்த திசையில் அசைந்தாலும் உடல் நேராகவே நகரும்.

பரதநாட்டியம், கதகளி போன்று இதுவும் இந்து சமயப் பண்பாட்டுக்கு ஏற்றபடி அமைந்துள்ளது. டெல்லியில் 16, 17 ஆம் நூற்றாண்டளவில் ஆண்டு வந்த மொகலாய மன்னர்களுக்குப் பிறகு இதன் பெருமை டெல்லியில் குறைந்தது. எனினும் மற்ற இடங்களில் இதன் பெருமை பெருகுகின்றது. காலப்போக்கில் கதக் ஆட்ட முறைகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆண்களும் இந்த நடனத்தை ஆடுகின்றனர். இதனைப் பயிற்றுவிக்க நாட்டிய ஆசிரியர்மார் உள்ளனர். பரத நாட்டியத்தைப் போலவே இதனை ஆடுவதற்கும் பல விதிமுறைகள் உள்ளன.

**எழுதியவர் தனுஷ்யா அழகுத்துரை**



1. முருகன்
   கையில் வைத்திருக்கும்
   ஆயுதம் என்ன?


2. மயில் யாருடைய வாகனம் ?

பெயர்:


வயது:

பாடசாலை:

படத்திற்கு வர்ணம் தீட்டி சரியான பதில்களையும் எழுதும் அதிஷ்டசாலிக்கு 10 பவுண் பரிசு உண்டு!



Brahalathan Balakrishnanan
Thiruvalluvar Tamil School



Sinthuri
Thiruvalluvar Tamil School

# Paintings for Issue 49 were sent by:

**Paintings for Issue 49 were sent by:**

**Naalvar Tamil Academy**

| | |
|---|---|
| Abiniya | |
| Achuthan | Balasingam |
| Anulka | T |
| Anusha | Balasingham |
| Arudchiga | Sivanesan |
| Arulram | Nadarasalingam |
| Asvini | |
| Asvini | Nadarasalingam |
| Bruntha | E |
| Derick | K |
| Dilakshan | |
| Dineshkanth | Kiritharan |
| Doreena | Arokianathar |
| Emara | |
| Esha | |
| Gowreesan | Pushpanathan |
| Gowsika | |
| Imaani | |
| Kabil | |
| Keeran | |
| Kirishna | Sakar |
| Kishan | |
| Kugan | |
| Mayoon | |
| Meenuja | Logasounthiran |
| Methuja | |
| Nirusan | |
| Nivathitharan | |
| Parthipan | |
| Pavithra | Sritharan |
| Piriyanka | Sivakumar |
| Prashat | |
| Rajinthan | Sivalingam |
| Rakulan | |
| Ramintha | Bitnarajah |
| Ruban | |
| Sahana | Selvarajan |
| Sahana | |
| Salini | |
| Samantha | |
| Sangeetha | |
| Santhiya | |
| Sareena | |
| Sarusan | |
| Sauran | |
| Sayankan | Sivakumar |
| Senthan | Sritharan |
| Siby | Sivanesan |
| Sirojan | Sivalingam |
| Sowmiya | Sivakumar |
| Subarna | Manikkaratnam |
| Thaksitha | |
| Thaksitha | Bitnarajah |
| Thanusha | Perinpanathan |
| Tharsana | |
| Thikanan | |
| Thiviya | |
| Thurga | v |
| Thurigah | Logasounthiran |
| Thusan | K |
| Thuvaraga | v |
| Vinitha | Bitnarajah |
| Vithuran | Kuganathan |
| Yalisa | |
| Yanci | |

**Thiruvalluvar Tamil School**

| | |
|---|---|
| Archana | Sasitharan |
| Janifar | Manoranjalingam |
| Jannagan | Vijayamonohar |
| Keerthana | Sasitharan |

**North London Tamil School**

| | |
|---|---|
| Jathesh | Sakthipakan |
| Nilani | Rageswaran |
| Priyanka | Manivannan |
| Swathi | Krishnakumar |
| Thanucha | Sooriapatham |
| Warren | Manoharan |

**Hendon Tamil School**

| | |
|---|---|
| Kabilan | Selvamurugananthan |
| Prathaphan | Sivakumar |
| Punya | Selvamurugananthan |
| Senthooran | Kalaimohan |
| Sinthiya | Amirthalingam |
| Tarania | Amirthalingam |
| Thanushan | Mohanarajah |

**London Tamil Centre**

| | |
|---|---|
| Sankirtan | Srenathan |
| Ushani | Srenathan |
| Vishnija | Nithyanantrhan |

**Harrow Tamil School**

| | |
|---|---|
| Abira | Sivalingam |
| Anika | Gnaneswaran |
| Eshan | Balachandran |
| Praveen | Makeswaran |
| Rakulan | Sivalingam |
| Sailakshmi | Gnaneswaran |
| Vaishnavi | Balachandran |

**West London Tamil School**

| | |
|---|---|
| Ahsha | Logeswaran |
| Anushka | Shanmugarajah |
| Brenda | Poobalasingham |
| Harinath | |
| Janarthanan | |
| Kabilan | Puvanenthiran |
| Kamsa | Parameswaran |
| Kobiga | Puvanenthiran |
| Kowshik | Yogeswaran |
| Lakshana | Rasaiyah |
| Laksmi | A |
| Luckksha | Logeswaran |
| Mayuri | |
| Nirusha | |
| Nivitha | Nagendrabalan |
| Priyanka | |
| Rajithan | Puventhiranathan |
| Sarjitha | Nagendrabalan |
| Sarjithan | Thayaparan |
| Sarmine | Selvarajah |
| Sophie | Ravinthiran |
| Sritharan | |
| Stephany | Ravinthiran |
| Thanuja | Pathmanathan |
| Theeviga | Puventhiranathan |
| Thivja | Yoganathan |
| Valavan | A |
| Vinoth | Emmanuel |

**Kingston Institute of Tamil Culture**

| | |
|---|---|
| Shailaja | Maheetharan |
| Shanuja | Maheetharan |
| Sharanya | Maheetharan |

(இதழ் 48 இன் தொடர்ச்சி)

# தாத்தாவும் கண்ணனும்

– முத்து –

தாத்தா தொலைக்காட்சியில் சுனாமியினால் நம் நாட்டிலும் இந்தோனேசியாவிலும் ஏற்பட்ட பேரழிவைப் பார்த்து "அட இது என்ன அநியாயம்? இப்படியும் நடக்குமா? இப்படி ஒரு அழிவை நான் கண்டதுமில்லை. மலை போல ஒரு அலை எழும்பி வந்து மக்களை அழித்து விட்டதே!" தாத்தாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிகின்றது. தாத்தாவின் கண்ணீர் கண்ணனுக்கு கவலையை ஏற்படுத்தியது. தாத்தாவின் கழுத்தைக் கட்டிக் கொள்கிறான்.

**கண்ணன்:** தாத்தா நீங்கள் ரெலிவிசன் பார்த்தது போதும். எல்லாரும் இறந்ததைப் பார்க்க எனக்கும் அழுகை வருகிறது தாத்தா

**தாத்தா:** எல்லாம் கடவுள் செயல்.

**கண்ணன்:** ஆமாம் தாத்தா, கடவுள் ஏன் இப்படிச் செய்கிறார்?

**தாத்தா:** கடவுளின் சக்தி தான் மேலானது என்பதை மக்கள் எல்லோருக்கும் புரிய வைப்பதற்காகத்தான் என்று நான் நினைக்கிறேனடா கண்ணா!

**கண்ணன்:** கடவுள் சர்வ வல்லமையுள்ளவர் என்று எல்லாரும் படித்திருப்பார்களே! தாத்தா!

**தாத்தா:** படித்திருந்தாலும் மறந்து விடுகிறார்கள். அதனால் கடவுள் சில நேரங்களில் மனிதனைச் சோதிப்பது வழக்கம்.

**கண்ணன்:** சரி தாத்தா! இப்போ நீங்கள் கதை சொல்லும் நேரம் வந்தாச்சு, போன வாரத்தில் விட்டதிலிருந்து தொடர்வோம்.

**தாத்தா:** போன வாரம் எங்கே விட்டோம் என்று சொல் பார்க்கலாம்.

**கண்ணன்:** கைகேயி, இராமரைக் காட்டுக்கு அனுப்பும்படி ஏன் கட்டாயப் படுத்தினாள் என்று கேட்டதற்கு நீங்கள் விளக்கம் சொல்லவேண்டும்.

**தாத்தா:** சரி கெட்டிக்காரன். கைகேயி உண்மையிலேயே நல்லவள். இராமருக்கு பட்டாபிஷேகம் என்று சொன்ன அவள் தோழியாகிய கூனிக்கு சந்தோஷமான செய்தியைச் சொன்னதற்காக ஒரு முத்து மாலையைப் பரிசாகக் கொடுக்கிறாள். கூனி அதனை எறிந்து விட்டு கைகேயிக்கு இராமன் அரசனாக வந்த பிறகு கெட்ட காலமே வரும். சந்தோஷமே இருக்காது என்று பல விதமாகச் சொல்லிச் சொல்லி கைகேகியின் நல்ல மனதைக் கெடுத்துப் பொல்லாதவளாக்கி விட்டாள். அதனால் தசரதர் கெஞ்சிக் கேட்டும் வசிட்ட முனிவர் பல விதமான அறிவுரை கூறியும் அவள் கேட்கவில்லை. தனது வரங்களைத் தராது விட்டால் தான் உயிரை விட்டுவிடுவதாக அடம் பிடித்தாள். நீ பெரியவனாக வந்ததும் கம்பர் எழுதிய இராமாயணப் பெரிய புத்தகத்தைப் படித்துப் பார். அப்போது தான் கூனி எப்படி எல்லாம் சொன்னாள் என்பதை அறியலாம். "கரைப்பர் கரைத்தால் கல்லும் கரையும்" என்ற பழமொழியின் கருத்தும் விளங்கும்.

**கண்ணன்:** இப்போ நீங்கள் சொன்ன இந்தப் பழமொழியே விளக்கம் தருகிறது தாத்தா. கூனிக்கு இராமர் மீது ஏன் இவ்வளவு கோபம்?

**தாத்தா:** இராமர் சிறுவனாக இருந்த போது மண்ணுருண்டையை வில்லில் வைத்து கூனியின் முதுகில் அடிப்பாராம். கூனியின் வளைந்த முதுகு இதனால் நேராகி விடும் என்று கேலி செய்வாராம். அதனால் கோபம் கொண்ட கூனி இராமரைப் பழி வாங்கக் காத்திருந்தாள்.

**கண்ணன்:** சிறுவர்கள் செய்யும் குற்றங்களைப் பெரியவர்கள் மன்னிப்பது தானே வழக்கம் தாத்தா.

**தாத்தா:** நல்லவர்கள், சின்னப் பிள்ளைகள் தானே என்று மன்னித்து விடுவார்கள். ஆனால் பொல்லாதவர்கள் திட்டுவார்கள். சாபமிடுவார்கள். பழி வாங்குவார்கள்.

**கண்ணன்:** அந்தப் பொல்லாத கூனியைத் தோழியாகக் கைகேயி வைத்திருந்தது தான் தப்பு, இல்லையா தாத்தா.

**தாத்தா:** ஆமடா கண்ணா! நல்லவர்களுடன் நாம் நட்பாக இருக்க வேண்டும். அது தான் நமக்கு நன்மை தரும். இராமாயணத்தில் உண்மையான அன்பும் நட்பும் உள்ளவர்கள் பலர் வருகிறார்கள்.

யார் யாரென்று சொல் பார்ப்போம்.

**கண்ணன்:** முதலாவதாக குகன் என்னும் வேடர் தலைவன் இராமர் மீது அளவற்ற அன்பு கொண்டவனாக இருக்கிறான். இரண்டாவதாகச் சுக்கிரிவன் இராமர் மீது மிகுந்த பக்தி கொண்டு இருக்கிறான். மூன்றாவதாக இராமருக்குச் சேவை செய்வதையே நினைத்து வாழும் அனுமார், மற்றும் விபீஷணன், தன் அண்ணனையே பிரிந்து வந்து இராமருடன் தங்கி விடுகிறான். திரிசடை சீதா பிராட்டி மீது அன்புடன் இருக்கிறாள். கும்பகர்ணன் தனது அண்ணனுக்காக உயிரையே கொடுக்கிறான்.

**தாத்தா:** நீ மிகவும் கெட்டிக்காரன் கண்ணா! கும்பகர்ணன் தன்னால் முடிந்தளவு அண்ணனுக்கு புத்தி சொல்கிறான். இராமருடன் சமாதானம் செய்வது தான் நல்லது. இல்லாவிட்டால் நாம் எல்லோரும் அழிந்து விடுவோம் என்று அண்ணனுக்கு கூறியும் எதுவும் பயனில்லை. அண்ணன் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்துப் போருக்குச் சென்று இறந்தான். உண்மையான வீரர்கள் சாவுக்குப் பயப்படமாட்டார்கள். நீதிக்குப் பயப்படுவார்கள்.



**கண்ணன்:** எல்லோரும் நீதியைக் கடைப்பிடித்தால் சண்டையே வராது, இல்லையா தாத்தா?

**தாத்தா:** முற்றிலும் உண்மை. பார்! நீ இப்போ நன்றாகச் சிந்திக்கிறாய். ஏல்லாம் இராமாயணம் படித்தபடியால் தானே. சீதையை மீட்பதற்கு இராவணனுடன் யுத்தம் செய்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

**கண்ணன்:** நீதியை நிலை நிறுத்தச் சில சமயம் யுத்தம் அவசியம் என்கிறீர்கள் அப்படித்தானே.

**தாத்தா:** ஆமாம் அது உண்மை. அந்தக் காலத்திலே யுத்தம் வந்தால் வீரர்கள் நேருக்கு நேர் நின்று போர் புரிவார்கள். அதனால் வீரர்களே இறப்பார்கள். குழந்தைகள், பெண்கள், வயோதிபர் கொல்லப்படமாட்டார்கள். யுத்த தர்மம் என்று சில விதி முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால் உலகத்தில் இப்போ நடைபெறும் சண்டைகளில் ஒன்றுமறியாத பொது மக்களே கொல்லப்படுகின்றனர். மனிதன் சக்தி வாய்ந்த ஆயதங்களைக் கண்டு பிடித்து மக்களைக் கொன்று தள்ளுகிறான். இந்த மனிதனுக்குப் புத்தி புகட்ட எண்ணித்தான் இப்படிக் கடல் கொந்தளித்து (சுனாமி) எழுந்ததோ? என்னவோ?

**கண்ணன்:** இருக்கும் தாத்தா. அப்படித்தான் எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்.

**தாத்தா:** சரி கண்ணா. நீ இப்போ தொடக்கம் நல்ல புத்தகங்களைப் படித்து அறிவை வளர்த்துக் கொள். வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்து விட்டால் பின்பு வாழ்க்கை என்றும் அமைதியாகவே போகும்.

**கண்ணன்:** சரிதாத்தா. ■

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

# கலசம்
# KALASAM

இலவச காலாண்டிதழ்

## கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர்: ..........................................................................

முகவரி: ..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

Donation:£...............

Postage: £...............

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Kalasam@hotmail.com

**Postage**: **£10** (U.K/Europe); **£20** (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

சைவ முன்னேற்றச் சங்கப் பணிகளுள் விசேட தினங்களில் பூசைகள், நாயன்மார் குருபூசைகள் என்பனவும் அடங்கும். இப் பூசைகளில் இங்கிலாந்தில் வாழும் இளைய தலைமுறையினரின் பங்களிப்பு முக்கியமானது. சிறுமியான சிவஜனனி சுரேஷ் முன்னின்று பாராயணம் செய்து சிறப்புற நடாத்தினார். இதனைத் தொடர்ந்து உரை நிகழ்ச்சியில் தனரூபிணி தனராஜாவும், சிவஜனனி சுரேஷும் தம் தமிழாற்றலை வெளிப்படுத்தினார்கள்.

# சைவ முன்னேற்றச் சங்க நிகழ்வுகள்



இந்த வகையில் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையான நால்வர் தமிழ்க் கலைநிலைய மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் ஆசிரியர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

பிறந்த ஆண்டின் முதலாவது நிகழ்ச்சியில் கலைநிலைய சங்கீத ஆசிரியை சுகிர்தகலா கடாட்சம் அவர்களின் மாணவிகள் சரண்ஜா சிவச்செல்வம், தனுஷா மயூரி பேரின்பநாதன், நிஷானி ஜெயபாலன் ஆகியோரின் வாய்ப்பாட்டு மிகுந்த பாராட்டுக்குரியதாக அமைந்தது. இந் நிகழ்ச்சிக்கு வயலின் இசை வழங்கியவர் ஆரபி சர்வநாதன்.

வினோதா சிவஞானம். தனுஷா மயூரி பேரின்பநாதன் ஆகியோரின் சிற்றுரைகளும் கலைநிலைய வீணை ஆசிரியை செந்தில் செல்வி வாமனானந்தனின் மாணவிகளின் வீணை இசையும் புத்தாண்டை வரவேற்றன.

புத்தாண்டின் இரண்டாவது நிகழ்வாக 03.05.2005ல் இடம் பெற்ற திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அமைந்தது. இந் நாளிலே வழமையாக இடம் பெறும் கூட்டு வழிபாட்டினை சின்னஞ்



திருநாவுக்கரசர்பால் பேரன்பு கொண்டிருந்த அப்பூதியடிகளின் வரலாற்றுச் சித்திரம் அடுத்தபடியாக அரங்கேறியது.

பிரணவன் ஸ்ரீகரன், அஸ்வினி நடராஜலிங்கம், மீனுஜா லோகசௌந்திரன், வினித்தா விட்னராஜா, துாரிகா லோகசௌந்திரன், சிரோணிகா வைத்தியநாதன் ஆகியோர் இவ்வுரைச் சித்திரத்தில் பங்கேற்றினார்கள். இவர்களுடன், இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் திருமதி புவனேஸ்வரி நடராஜா, திரு மாணிக்கரட்ணம்



அவர்களும், இவர்களின் பெற்றோர்களும் பாராட்டிற்குரியவர்கள்.

இந் நிகழ்ச்சிகள் யாவும் மாணவர்கள் தமிழில் எழுதி தமிழிலே பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.



# ஆனாய நாயனார்

மு.சிவராசா

மங்கலவூரில் ஆயர் குலத்தில் தோன்றிய ஆனாயர் என்பார் தம் குலவழக்கத்துக்குகேற்ப ஆநிரை மேய்க்கும் தொழிலை மேற்கொண்டிருந்தார். தம்மோடொத்த இடையர்களோடு பசு பரிபாலித்து வந்த அவர் மூங்கில் தண்டு ஒன்று எடுத்து அதில்முறைப்படியான துளைகள் செய்த புல்லாங்குழல் ஒன்று ஆக்கிக் கொண்டார். இயல்பாகவே அவருக்கிருந்த இசைஞானத்தால் அந்தக் குழலில் இனிய கானம் கண்டார். இறைவன் நாமங்களில் சிறந்ததான ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஆனாயர் தமது வேய்ங்குழலில் ஸ்வரசுத்தமாக காலை, பகல், மாலை நேரங்களுக்கேற்ற இராகங்களில் வாசிப்பதைக் கேட்கும் ஏனைய இடைச்சிறுவர்கள் மட்டுமன்றி பசுக்கூட்டங்களும் மெய்ம்மறந்து நிற்பது வழக்கமாயிற்று.

ஒரு நாள் மேய்ச்சந் தரைக்குப் பசுக்களை ஓட்டிச் சென்ற ஆனாயர் அங்கு ஒரு கொன்றை மரத்தைக் கண்டார். கார் காலமானதால் மரத்தில் கொத்துக் கொத்தாக பூக்கள் தொங்கி நிறைந்திருந்தன. பசுமையான இலைகளிடையே குலக்காகத் தொங்கியிருந்த பூங்கொத்துகளில் அவர் மனம் ஒன்றியது. அதனால் அவர் மனத்திலே ஒரு காட்சிவிரிந்தது, புறத்திலே தாழ்கின்ற
சடைகொண்ட சிவனார் திருமுடியில் கொன்றைமலர் மாலை சூடியிருக்கும் காட்சியே அது. மனம் நெகிழ்வதாயிற்று. அன்புமீதூர வேய்ங்குழலை எடுத்து வாயில் பொருந்தினார். பெருமானின் ஐந்தெழுத்தால் தூல பஞ்சாட்சரமாகிய நமசிவாய என ஆரம்பித்த இசை, சுரங்கள் பிசகாத இராகத்தில் இழைந்து சிவாயநம என்னும் சூக்கும பஞ்சாட்சரத்தில் தவழ்வதாயிற்று.

இவ்விசை கேட்ட இடைச்சிறுவர்கள் தம் கடமை மறந்தவராய் கொன்றை மரத்தடியில் கூடினர். பசுக்களும், கன்றுகளும் புல் மேய்வதை விடுத்து இசையில் மயங்கிநின்றன. சிறிது நேரத்தில் அருகிலிருந்த ஏனைவிலங்குகள், பறவைகள்தாமும் இவரின் சிவநாம இசையில் கட்டுண்டு தம்மை மறந்தன. தமக்குள் ஒன்றுக்கொன்று பகைமை கொண்டிருந்த மயிலும் பாம்பும், புலியும் மானும், சிங்கமும் யானையுங்கூட இயற்கையான பகைமையை மறந்து இசையில் ஒன்றி அருகருகே இருந்தன.

இசையில் சூக்கும பஞ்சாட்சரம் மாறி சிவயசிவ என்றும், அதன்மேல் தொடர்ந்து சிவய என்றும், அதன்பிறகு "சிவசிவ" என்றும் இழைந்து இறுதியில் மகாமனு என வழங்கும் "சி" யில் நிலைத்து ஒலிப்பதாயிற்று. அந்நேரம் நாயனார் சாத்துவிகம், ராசதம், தாமதம் என்னும் முக்குணங்களையும் சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் எனும் ஐம்புலன்களையும் அடக்கி, இடைகலை, பிங்கலை நாடிகளை அடைத்து சுழுமுனை நாடியைத் திறந்து, அநவரதத் தாண்டவச் சிலம்பொலி கேட்க, ஐந்தெழுத்தும் ஓரெழுத்தாம் தன்மையை ஞானக் கண்களால் கண்டு ஒன்றியிருந்தார்.

இவ்விசையினால் தம் வசமிழந்த நிலையில் அசைவனவும், அசையாத னவுமான சகல உயிர்வர்க்கங்களும் இருந்தன. அதுபோது சிவபெருமான் பார்வதி தேவியாரோடும் இடபவாகனத்தில் ஆனாயருக்குக் காட்சி கொடுத்து, அந்நிலையிலேயே அவருக்கு வீடுபேறு அளித்தருளினார்.
சிவபெருமானின் மந்திரங்களுள் ஒன்று **"ஸ்வரமயாய நம:"** என்பது. சங்கீத ஸ்ரங்களின் வடிவானரே வணக்கம் என்பது பொருள். ஆனாயர் தமது இசைக்கருவியில் எப்போதும் இறைவன் நாமத்தையே இசைத்து வந்தவர். "ஏழிசையால் இசைப் பயனாய் இன்னமுதாய்"
என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கு.

பஞ்சாட்சரத்தைச் செபிக்கும் முறை மூன்று. மானதம், மந்தம், வாசிகம் என்பன அவை. மனத்துள்ளே உருப்போடுவது மானதம். உதடுகள் அசையத் தனக்கு மட்டுமே கேட்கும்படி சொல்லுவது மந்தம். பிறருக்கும் கேட்கும்படி சத்தமாகச் சொல்லுவது வாசிகம். இவை ஒடுங்கு முறை. ஒலிக்குமறை, ஓது முறை எனவும் அறியப்படும்.

பிறருக்கும் கேட்கும்படி சொல்லுவதை இசையோடு சொன்னால் அது அவர்களை இறைவனோடு இசைவிக்கும். வேய்ங்குழல் மூலம் இவ்வரிய தொண்டு செய்து இறைவனடி சேர்ந்தவர் **ஆனாயநாயனார்.**

நமசிவாய மந்திரத்தின் மகிமையை ஞானசம்பந்தப் பெருமான் இவ்வாறு அருளுகின்றார்.

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத நாமம் நமச்சி வாயவே."

**ஞானமார்க்கத்தைப் பற்றிப் பிறமதங்கள் கூறுவது என்ன? தம்மபதத்தை ஆராய்கிறார் கலசத்தின் முன்னாள் ஆசிரியர்.**

# அறிவும் அற்புத ஞானமும்

முு. நற்குணதயாளன்

சமீபத்தில் புத்தமதத் தத்துவ நூலான தம்மபதம் என்னும் அரிய நூலைப்படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சமயம் எதுவாக இருந்தாலும் தத்துவங்கள் ஏறக்குறைய ஒன்றே. புத்தரைப் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் உலகில் பலதரப்பட இருந்தாலும் உண்மையில் புத்தரைப் புரிந்துகொண்டவர்கள் ஒருசிலரே! புத்தருடைய தத்துவங்கள் மிக ஆழமானவை. அதனால் தானோ என்னவோ அவருடைய அபிமானிகளே அதனைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். நான் ஒரு பௌத்தனல்ல! புத்தரைப்பற்றி எழுதுவதும் இக்கட்டுரையில் நோக்கல்ல! தம்மபதம் என்கின்ற மூலதத்துவப் பத்தகத்தை வாசித்ததால் நான் யார் என்பதைப் புரிந்து கொண்ட ஒரு

**அறிவு உன்னுடைய அனுபவத்தின் மூலம் வரும்போது அது ஞானமாகிறது!**

விழிப்புணர்வின் வெளிப்பாடே இக்கட்டுரை. இக்கட்டுரைக்கு புத்தர் ஒரு வழித்துணையே! மானிடத்தின் உச்சாணிக் கொப்பில் அந்தச் சிந்தனையாளன் இருக்கின்றான்.! தம்மபதம் என்கின்ற அந்தத் தொகுப்பில் அந்தச் சிந்தனையாளன் சயனித்தபடி இருக்கிறான். அவனுடைய கண்கள் விழித்தபடியும் முகம் சிரித்தபடியும் அவன் சயனித்திருப்பது கண்கொள்ளாக்காட்சி.

ஓஷோ என்கின்ற இந்தியத் தத்துவஞானி தன்னுடைய சீடர்களிடம் 1989 ஏப்பரல்மாதம் 10ம் திகதி இறுதியாகப் பேசிய வார்த்தைகள் இவை.

"அதுவே உன் நித்தியமும் சிரஞ்சீவிதமும் என்பதால் நீ ஒரு புத்தர் என்பதை நினைவில் நிறுத்துவதே மிக உயர்ந்த அனுபவம். அது நீயல்ல. உன்னுடைய சீவிதம். நட்சத்திரங்களோடும் மரங்களோடும் வானோடும் கடலோடும் ஒன்றாகிப்போனவன் நீ.இனிமேலும் நீ தனித்தவனல்ல! நீ ஒரு புத்தன் என்பதை நினைவில் நிறுத்து!" ஓஷோ அவர்கள் புத்தன் என்கின்ற சொல்லுக்கு ஒரு தனிப் பரிமாணத்தையே ஏற்படுத்திச் சென்றிருக்கின்றார்.

தம்மபதத்தின் முதற் சமுத்திரத்தில்

"நம் எண்ணம் எப்படியோ அப்படியே நாம்.
நாம் எழுவதெல்லாம் நம் எண்ணங்களால் தான்.

**சமயம் எதுவாக இருந்தாலும் தத்துவங்கள் ஏறக்குறைய ஒன்றே!**

உலகை உருவாக்குவதும் நம் எண்ணங்களால்தான்.
புத்தரின் காலகட்டத்தில் இந்தக் கருத்து மிகப் புரட்சிகரமானதாக கருதப்பட்டது. ஆனால் இப்போ அது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகிவிட்டது.

அறிவுக்கும் ஞானத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளையே தம்மபதம் பெரும் பாலும் கதைக்கிறது. அறிவு என்பது ஞானமாக இருக்க முடியாது. அறிவு ஞானத்தைப்போல வேடமிட்டு பலரை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. அறிவு என்பது வெறுமனே பல தகவல்களின் தொகுப்பே!

உன்னிடம் அறிவு வளரும்போது நீ மகிழ்ச்சி கொள்வது அர்த்தமற்றது. அறிவு வளரவளர நீ விடுதலை பெறுவதற்குப் பதிலாக அதனைத் தாங்கிச் செல்லும் சுமைதாங்கியாகி விடுகின்றாய். அறிவு நண்பனைப் போலத் தோற்றமளிப்பினும் உண்மையில் மனிதனின் பிரதான எதிரி அதுவே! அறிவு மனிதன் தனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ண வைக்கின்றது.

அறிவையும் ஞானத்தையும் பற்றி தத்துவஞானி ஓஷோ பின்வருமாறு கூறுகின்றார். "தனக்குத் தெரியாது என்பதைத் தெரிந்து கொள்வதே ஞானத்தை நோக்கி எடுத்து வைக்கும் முதல் அடி. நீ அறிந்திருப்பது எதுவும் உனக்கு நேர்ந்ததல்ல, பிறரிடமிருந்து பெற்றுக்கொண்டது என்று தெரிந்து கொள்வது. அறிவு உன்னுடைய அனுபவத்தின் மூலம் வரும்போது அது ஞானமாகிறது. மேற்கூறிய ஓஷோவின் வசனங்கள் எவ்வளவு நிதர்சனமானவை.

இன்னுமொரு தத்துவஞானியான சாக்கிரட்டீஸ் "எனக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும். அது எனக்குத் தெரியாது என்று தெரிந்திருப்பது." என்று கூறுகின்றார்.

புத்தர் கூறும்போது" நான் உங்களுக்கு அளிக்கும் சத்தியம் எந்த சாத்திரத்திலும் இல்லை. நான் சொல்வதும் நான் உங்களுக்குத் தருவதும்

நான் போதிப்பதும் எங்கேயும் எழுதப்படாதது. எங்கேயும் பேசப்படாதது. வாஸ்தவத்தில் இதை எழுதி வைக்க முடியாது. ஞானி எந்த விடயத்தையும் சேகரித்தோ தயாரித்தோ வைத்துக்கொள்வதில்லை. அது தானாக வெடித்துக் கிளம்புவதே!.

ஞானம் என்பது நம்பிக்கை அல்ல. அது ஒரு அனுபவம். கடவுளை ஞானி நம்புவதில்லை. அவர் கடவுளை உணர்கிறார். அவரின் இருப்பை அற்புதமாக அனுபவிக்கிறார். தேனீர் சுவையானது என்பதை அதைச் சுவைக்கும்போது தானே புரிந்து கொள்ள முடிகின்றது. உன்னுடைய நம்பிக்கைகளே உனக்கு எதிரியாக இருக்கிறது. நம்பிக்கைகளை நீ அணைத்துக் கொண்டிருக்கும் வரைக்கும் எந்த அனுபவத்தையும் நீ உணர முடியாது. புத்தனாக வாழ்வது என்பது இதுதான். சம்பந்தராக மாறிப்போவதென்பதும் இதுதான். இது நம்மில் பலருக்கு இன்னும் புரியாமல் இருக்கின்றது.

ஆயிரம் ஆன்மிகப் புத்தகங்களைப் படிப்பதால் நீ மிகப்பெரிய ஞானியாகிவிட முடியாது. எல்லாவற்றையும் அனுபவிக்கும் பக்குவத்தை நீ பெற்றாகவேண்டும். பைபிள்கள், கீதைகள் தம்மபதங்கள் எல்லாம் இப்படித்தானே வெடித்துக் கிளம்பின. மனிதனிடத்தில் நிரம்ப ஆற்றல் இருப்பதாக தம்மபதம் கூறுகின்றது. ஒவ்வொரு மனிதனும் புத்தனாவதற்காகவே பிறந்திருக்கிறான் என்று தம்மபதம் கூறுகின்றது. இது மதரீதியான ஒரு பிரகடனமென்று யாரும் குழம்பிக்கொள்ளக் கூடாது. புத்தன் என்ற சொல்லு கௌதம புத்தரைச் சார்ந்து வந்திருந்தாலும் கூட அது தனித்தே நிற்கின்றது. அது எல்லாருக்கும் சொந்தமான ஒரு சொல்லே. கௌதம புத்தர் மனைவி பிள்ளைகளை நட்டாற்றில்விட்டு வந்தவர்தானே என்று வசவு பாடுவோரும் உண்டு. இந்த மேலோட்டமான பார்வைகளை ஞானிகள்மேல் வீசக்கூடாது.

உன்னை நீ புரிந்து கொள்ளும்போது உனக்கு ஒன்றுமே தெரியாது என்று ஏற்றுக் கொள்ளும் போதுஅறிவால் நீ பெற்றுக்கொண்ட நம்பிக்கைகள் தகர்ந்து போகும். மனைவி, பிள்ளை, மச்சான், மாமன் இவை எல்லாம் என்ன? உன்னுடைய அறிவு வளர்ச்சியால் நீ ஏற்படுத்திக்கொண்டவைகள் தானே! இந்த நம்பிக்கைகள் உன்னிடமிருந்து அற்றுப் போகும்போது நீ புத்தனாகின்றாய்!

நீ எத்தனை வருடங்கள் வாழ்ந்தாய் என்பது நீ எப்போ சந்நியாசம் வாங்கிக் கொண்டாய் என்பதிலிருந்துதான் தொடங்கவேண்டும் என்று புத்தர் கூறுகின்றார். உண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுகின்றேன் கேளுங்கள்.

பெரிய அரசன் ஒருவன் - பிம்பிசாரன் என்பது அவன் பெயர். புத்தரைப் பார்க்க வந்திருந்தான். புத்தருக்கு அருகே உட்கார்ந்து அவரோடு பேசிக்கொண்டிருந்தான். அப்போது மிக வயதான ஒருவர் வந்தார். புத்தரின் கால்களில் விழுந்து வணங்கினார். வழக்கம்போல புத்தர் அவரிடம் வயதைக்கேட்டார். அவரும் நான்கு என்றார். பிம்பிசாரனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. பார்த்தால் எண்பது வயதிருக்கும் நான்கு என்கிறாரே என எண்ணி திரும்பக் கூறுமாறு கேட்டார். அவர் திரும்பவும் நான்கு என்றார். புத்தர் சிரித்துக்கொண்டார். நாங்கள் வயதைக் கணக்கிடும் முறை உனக்குத் தெரியாது. நான்கு வருடங்களுக்கு முன் அவர் தீட்சை வாங்கியிருக்கிறார். சந்நியாசி யாகியிருக்கிறார். என்றார். நாம் எவ்வளவு வருடங்கள் வாழ்ந்தோம் என்பதைவிட எப்போது எம்மைப் புரிந்து கொண்டோமென்பதே மிக முக்கியமானது.

**ஞானம் என்பது நம்பிக்கை அல்ல. அது ஒரு அனுபவம். கடவுளை ஞானி நம்புவதில்லை. அவர் கடவுளை உணர்கிறார்.**

மனிதனுக்குள் ஒரு சுயதநிதரிசனம் இருக்கின்றது. மனிதனுக்குள்ளே ஒரு அற்புதமான பாடல் இருக்கின்றது. அவனிடமுள்ள அறிவால், எழுந்த நம்பிக்கைகளால் பாடமுடிவதில்லை!

பாடவேண்டும்! எப்போ?
ஆடவேண்டும்! எப்போ?

நான் பாடத் தொடங்கியிருக்கிறேன். நீங்களும் பாட வாருங்கள்!இறைவன் எங்களோடு சேர்ந்து பாடவருவான்.!




******

பயணக்கட்டுரை

# அயோத்தி

Dr. கதிர்காமநாதன்



இந்து மதத்தினர் போற்றியும், புகழ்ந்தும் பெருமைப்படும் இடம் அயோத்தியாகும். இதே போன்று சமமாக பௌத்த, ஜெயின், சீக், முஸ்லீம் மதத்தினர் கொண்டாடுவதும் இந்த இடமாகும்.

நைமிசாரண்யத்திலிருந்து, பிற்பகல் தொடக்கம் பிரயாணம் செய்து அயோத்தியை 16-02-2004 இரவு 7.30 மணிபோல் அடைந்தோம். தங்குவதற்கு சைவ ராம் ஹோட்டலை அண்மிக்கும் போது உட்செல்லவிடாது தெருவை அடைத்து வரவேற்பு காத்திருந்தது! மாப்பிளை அழைக்கும் ஊர்வலம் ஒன்று அலங்கரிக்கப்பட்ட எளிய வாகனத்தில் பெற்றோல் மாக்ஸ் வெளிச்சத்தில் பழையகால பாண்ட் வாத்தியத்தில் கோஷ்டியோடு, முன்நின்று ஆர்ப்பாட்டமாக இசைமாரி பொழிந்து கொண்டிருந்தது. ஏழைகளின் இதயத்துடிப்புடைய இக்காட்சியை ரசித்த பின்னர் தான் எம்மால் உட்செல்ல முடிந்தது.

அயோத்தியில் ராம்காட் எனும் இடம்தான் வெகு பிரதானமானதும், பலத்த பாதுகாப்போடு கூடிய பிரச்சினைக்குரிய இடமுமாகும். இங்கு தான் தசாவதாரத்தின் ஏழாவது அவதாரமான இராமபிரான் அவதரித்தார். காலை 6.30 மணிதொடக்கம் 10.30 மணி மட்டும், மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிமட்டும் இவ்விடத்தை தரிசிக்கலாம்.

நாங்கள் அதிகாலை எழுந்து நீராடி 6.30 மணிக்கே அங்கே சென்றோம். உட்செல்ல முன்பு சோதனைச் சாவடியில் கமரா, கைப்பை போன்ற உடைமைகளை வைத்து விட்டுச்செல்லுமாறு கோரினர். பின்னர் எங்களை நன்றாகவே சோதித்தனர். இதன் பிறகு ஒருவர் மட்டும் நடக்கக்கூடிய மரங்களால் அமைத்த பாதையால் வளைந்து வளைந்து அரைமைல் அல்லது முக்கால் மைல் தூரம் நடந்து சென்றோம். முட்கம்பிவலைகளால் தப்பிச்செல்லா வண்ணம் அடைத்திருந்தது. அத்தோடு பொலிஸ்காரரும் கண்காணித்துக் கொண்டே இருந்தனர்.

இக்கோவிலை ஒருவாறு அடைந்தோம். மேல் நோக்கிய சரிவில் அமைந்த தகரத்தாலான கோவிலை சென்ற வழியிலேயே நின்று 50யார் தொலைவில்தான் காணலாம். பொலிசார் கோவிலுக்கு வெகு சமீபத்திலும் அக்கம்பக்கத்திலும் இருந்தனர். நாங்கள் தமிழில் கதைப்பதை செவிமடுத்த பொலிசார் தமிழில் அங்குள்ள உருவங்களை இது இராமர், சீதை, இலக்குமணர் என்று சுட்டிக்காட்டினர். ஒரு பொலிஸ்காரர் தான் தமிழ்நாட்டிலுள்ள தமிழ் தெரிந்த தெலுங்கர் என்றும் தன்னை அறிமுகப்படுத்தி குசலம் விசாரித்தார். கூட்டம் அதிகம் இல்லாததாலும் அதிகாலை என்றதாலும் இவ்வருள் ஹிந்தி மட்டு தெரிந்த இடத்தில் கிடைத்தது பரபரப்போடு சென்ற எமக்கு சாந்தியையும் தென்பையும் கொடுத்தது. புரோகிதர் ஒருவர் தீபம் காட்டி பிரசாதமும் தந்தார். சித்திரைமாத சுக்கில பட்சத்தில் வரும் நவமிதான் ராம நவமியாகும். இத்தினத்தில் தான் இராமர் அவதரித்தார். அத்தினம் இங்கு சனத்திரள் மிகக்கூடும் நாளாகும்.

எமது உடைமைகளை பொலிசாரிடம் இருந்து பெற்ற பின்னர் அனுமான் கோவிலுக்குச் சென்றோம். அயோத்தியின் மத்தியில் இருக்கும் இவ்விடம் மிக முக்கியமாக கருதப்படுகின்றது. அயோத்தியை அனுமான் இங்கேயிருந்து காவல் புரிந்தாராம். கோவிலை அடைய 76 படிகள் ஏற வேண்டும். ஒரே பக்தர்கள் கூட்டமாகவிருந்தது. இதை விட இருமருங்கும் பிச்சைக்காரக் கூட்டமும் காணக்கூடியதாக இருந்தது. சமீபித்ததும் கோபுரத்தின் உச்சியில் பிள்ளையார் வீற்றிருப்பதை கண்டு கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என

நினைத்து வணங்கி உட்சென்றோம். உள்ளே தங்கத்தாலான ஆஞ்சனேயரின் தரிசனம் கிடைத்தது.

**கனகபவன்:-** இது இராமர் சீதை அரசாண்ட சந்தன நிறமுடைய மாளிகையாகும். இவ்வழகிய மாளிகையைக் கண்டவுடன் நின்று ரசிக்கத்தான் செய்யும். காலை 9 மணி இருக்கும். மேளமும், மணிநாதமும் சேமக்கல ஓசையும் ஆரம்பித்தன. சனங்கள் ஓடோடி உட்சென்றனர். நாமும் விரைந்து சென்றோம். பூசை ஆரம்பமாகியது. இராமபிரானும் சீதாதேவியும் அமர்ந்தநிலையில் அரசாட்சி செய்வது போன்று காட்சியளித்தனர். மக்கள் பூசையைப் பார்க்க கீழே அமர்ந்திருந்ததால் எம்மால் நன்றாகவே காணமுடிந்தது. பூசை ஏறக்குறைய அரை மணித்தியாலத்திற்கு தீப, தூபங்களோடும், பலவித உபசாரங்களோடும் நடைபெற்றது. அடிக்கும் மேளம் எமது கவனத்தை ஈர்த்தது. பிரமாண்டமான மேளத்தை மூலையொன்றில் கட்டித் தூக்கி சரித்து வைத்து டாம் டாம் என்று ஒருவர் நேர்பாட்டான இசையில் அடித்துக்கொண்டிருந்தார். வேறொரு இடத்திலும் இப்படிக் காணவில்லை.

அடுத்ததாக வால்மீகி கோவில் சென்றோம். இராமயணத்தை சமஸ்கிருத மொழியில் எழுதியவர் இவரே. பெரிய கோவில். பத்து பதினைந்து படிகள் ஏறி உட்செல்ல வேண்டும். எல்லாச் சுவர்களிலும் இராமாயண சுலோகங்கள் எழுதப்பட்டு இருக்கின்றது. பீடத்தில் வால்மீகியையும் இரு சீடர்களையும் காணலாம். இராமாயணத்தை ஹிந்தியில் எழுதிய துளசிதாசருக்கும் கோவிலுண்டு.

அயோத்தியில் கோவில்கள் அநேகம். முத்தி தலங்களில் அயோத்தியும் ஒன்றாகும். சிவாசாரியர்கள் மந்திரிக்கும் போது அயோத்தியைத்தான் முதலில் கூறுவர். முத்தி என்றால் மனித வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுவதாகும். சரயூ நதிதான் அயோத்தியின் புண்ணிய நதியாகும். படிகளில் மெதுவாக இறங்கி நீராடி பின்னர் சங்கற்பம் செய்தோம். சப்த கன்னிகைகளில் சரயூ நதியும் இருக்கிறது. இதை விட கம்ப இராமாயணத்திலும் ஆற்றுப் படலத்திலும் பாடப்பெற்றுள்ளது.

சரயூநதிக்கு அருகேயிருக்கும் கோவில்தான் நாகேஸ்வரநாத் கோவிலாகும். 1750ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக் கோவிலில் உள்ள லிங்கம் மிகப்பழமையும் தெய்விகமும் உடையது. இங்கு இலைகள், பூக்களால் அஞ்சலி செய்து பாலால் அபிடேகம் புரிந்து தொட்டு தடவி வணங்கினோம். பின்னர் மதிய பூசையையும் காணும் வாய்ப்பும் கிடைத்தது.

பசியாற மலையாளத்தவர் பரிபாலிக்கும் சந்திரா ஹோட்டலுக்குச் சென்றோம். முதலாளிக்கு ஆங்கிலம் சரளமாகத் தெரியும். இரண்டாம் முறையும் வந்திருக்கிறோம் என அறிந்து தாளி உணவை தானாகவே முன்வந்து உபசரித்து, ஆதரித்து கவனித்தார். காசு கொடுப்பதென்றாலும் அவர் எம்மைக் கண்காணித்தது கீழ்த்தேச விருந்தோம்பல் உபசாரத்தை எடுத்துக்காட்டியது. உத்தரபிர தேசத்திலிருக்கும் அயோத்தியை விமான மார்க்கமாகவும், புகையிரத, பஸ்சேவையூடாகவும் அடையலாம்.


சரயு நதி

புகையிரதநிலையம் பிரதான முகல்-சரய் லக்னோ பாதையிலுள்ளது. சிறந்த பஸ் போக்குவரத்துமுண்டு. ஹிந்தி தெரிந்த தமிழ் அல்லது ஆங்கில நண்பரைக் கூட்டிச்செல்வது சாலவும் சிறந்தது. இது எமது அனுபவமுமாகும். காசி சென்று அயோத்திக்கும் செல்லலாம்.

இராமன் இருக்குமிடம் தான் அயோத்தி என்பர். இராமன் என்றால் ஆனந்தமானவன் என்று பொருள். துன்பத்திலும் இன்பமுடையவன்- துளசிதாசர் ராம் என்ற புனித மந்திரத்தை ஓதி தீட்சை பெற்றதும் அயோத்தியில்தான். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான திருவையாற்றில் பிறந்த இசைமேதையான தியாகராஜ சுவாமிகள் இராமரையே பாடி தரிசனம் கண்டவராவர்.

அயோத்தி முத்திதலம் மாத்திரமல்ல- அரசியல் முக்கியத்துவமும் இலக்கிய முக்கியத்துவமும் உடைய இடமுமாகும்.

*அன்பின் சின்னமான மகாத்மா காந்தி இறக்கும்போது இறுதியில் கூறிய வாசகம்: ராம் ராம் என்பதே.* *

# ஹரதத்தரின் சிவபக்தி

மகோமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர்

சைவத்தின் மேன்மையைத் தம்முடைய செயல்களாலும், நூல்களாலும் நிலைநிறுத்திய பெரியார்களுள் ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியார் ஒருவர். சோழவள நாட்டில் கஞ்சனூரென வழங்கும் கம்ஸபுரம் என்னும் ஸ்தலத்தில் ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் அவர் உதித்தார். பிறகு சிவபக்தராகி அவர் சுருதிசூக்தமாலை, சுலோகபஞ்சகம் முதலிய நூல்களை அருளிச்செய்தார். அவரைக் கஞ்சனூராழ்வார் எனவும் சொல்வதுண்டு.

ஹரதத்த சிவாசாரியார் வேதாகமங்களிலும் சாஸ்திரங்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். சிவபூஜையை முறைப்படி செய்து அதில் இன்பம் காணுபவர். அக்காலத்தில் ஆண்டுவந்த அரசனுக்குக் குருவாகவிளங்கினார். அவ்வரசன் தமக்கு அளித்த பொருளைக் கொண்டு அவர் திருவிடைமருதூரிலுள்ள காருண்யாமிர்தமென்னும் தீர்த்தத்திற்குப் படிக்கட்டுக்கள் கட்டுவித்தார். தினந்தோறும் கஞ்சனூர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள அக்கினீசுவரரையும், கற்பகவல்லியம்மையையும் தரிசிப்பதோடு வேறு சில சிவஸ்தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்து வருவதை ஒரு நியமமாக அவர் வைத்துக்கொண்டிருந்தார். முக்கியமாகப் பிரதோஷ காலத்தில் திருவிடைமருதூருக்குச் சென்று ஸ்ரீ மஹாலிங்க மூர்த்தியை வழிபடும் விரதமுடையவர்.

ஒரு நாள் பகலில் அவர் சிவபூஜை செய்வதற்கு அமர்ந்தார். சிவபெருமானின் திருவுருவங்களாகிய ஸத்யோஜாதம் முதலிய ஐந்து மூர்த்தங்களையும் ஐந்து தீர்த்த பாத்திரங்களில் ஆவாகனம் செய்து ஜபித்து ருத்ரம் சமகம் முதலியவற்றைச் சொல்லி அத்தீர்த்தத்தைக் கொண்டு சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்வது அவர்வழக்கம். அப்படியே அன்று ஆவாகனம் செய்து ஜபம் செய்யும்போது கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் இருந்தார். அச்சமயம் ஒரு நாய் உள்ளே வந்து ஒரு பாத்திரத்திலுள்ள அபிஷேகத் தீர்த்தத்தை நக்கத்தொடங்கியது. ஹரதத்தர் கண்ணைத் திறந்து பார்த்தார். நாய் அபிஷேக தீர்த்தத்தை எச்சிற்படுத்திக் கொண்டிருப்பதை உணர்ந்தார். அவர் அதை ஓட்டவில்லை. அது தன் தாகம் தீரும்மட்டும் தீர்த்தத்தைப் பருகிப் போய்விட்டது. அப் பெரியவர் வழக்கம் போல நான்கு பாத்திரங்களிலுள்ள தீர்த்தத்தோடு ஐந்தாம் பாத்திரத்தில் நாய் உண்டு எஞ்சிய தீர்த்தத்தையும் சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகம் செய்தார்.

அருகில் இருந்து அதைக் கவனித்த சிலருக்கு அப்பெரியார் செய்த காரியம் உசிதமாகத் தோற்றவில்லை. அந்நாயை ஓட்டாமல் இருந்தது அவரது கருணைமிகுதிக்கு அடையாளமானாலும், அதனால் எச்சிற்படுத்தப்பட்ட தீர்த்தத்தை அபிஷேகம் செய்தது மாத்திரம் அவர்கள் மனதில் ஒரு பெரிய சங்கடத்தை உண்டாக்கிவிட்டது. சிறந்த ஆசாரசீலராகிய ஹரதத்தர் அவ்வாறு செய்ததை மறுப்பதற்கும் அவர்களுக்குத் தைரியம் உண்டாகவில்லை. ஆனாலும் அவர்கள் அச்செய்தியை மெல்ல அயலார்களுக்குத் தெரிவித்தனர். கேட்டவர்கள் யாவரும் ஒன்றும் தெரியாமல் மயங்கினர். அச்செய்தி எங்கும் பரவியது. கடைசியில் வேதாத்தியயனம் செய்து ஒழுக்கத்தால் நிரம்பிய சிலர் அப் பெரியாரை, அணுகி "ஒரு சந்தேகம் இருக்கிறது. அதைப் போக்கவேண்டும்." என்று ஆரம்பித்தனர்.

அவர்கள் கருத்தை ஹரதத்தர் ஊகித்துக்கொண்டார். "உங்கள் சந்தேகத்தை நீங்கள் வெளிப்படையாகச் சொல்வதற்கு முன்பே நான் சமாதானம் சொல்லுகிறேன். கேளுங்கள். வேதங்களுக்குள் சிறந்ததாகிய யஜுர் வேதத்தின் மத்திய பாகமாக இருப்பது ஸ்ரீருத்ரம். பரமேசுவரனுடைய பெருமையை அது வெகு விரிவாக வெளிப்படுத்துவது. அதில் ச்வப்ய: ச்வபதிப்யச்ச என்று வருகிறது ஞாபகம் இருக்கிறதா? அதற்கு என்ன அர்த்தம்? நாயாகவும், நாய்க்குத் தலைவனாகவும் இருப்பவன் பரமசிவன் என்ற தாத்பர்யம் அதனால் விளங்குகிறதே. அபிஷேக தீர்த்தத்தை நக்கிய அந்நாயை நான் பரமசிவனாகவே பாவித்தேன். நான் ருத்திர ஜபம் செய்து கொண்டிருந்த சமயம் அது. அந்த ருத்திரம் வாயளவில் இருக்கிறதா? மனதளவில் இருக்கிறதா? என்பதைப் பரிசோதிப்பதற்காகவே பரமேசுவரன் செய்த லீலை

இது என்பதே என் எண்ணம்.'' என்றார் அந்தச் சிவஞானி. ஆ'ேபம் செய்ய வந்தவர்கள் மறுமொழி ஒன்றும் கூறஇயலாமல் அப்பெரியாரை வந்தனம் செய்துவிட்டுச் சென்றனர்.

நாய் மேலே பட்டால் ஸ்நானம் செய்வது அந்தக் காலத்து வழக்கம். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கஞ்சனூரிலும், அதைச்சார்ந்த மணலூர், துகிலி, கோட்டூர் என்னும் அக்கிரகாரங்களிலும் நாய் மேலே பட்டால் அதனை அசுசியாக கருதி ஸ்நானம் செய்வதில்லை.

ஒரு நாள் சாயங்காலம் ஹரதத்த சிவாசாரியார் திருவிடைமருதூர் ஆலயத்திற்குச் சிவதரிசனம் செய்யும் பொருட்டு வந்தார். ஆலயத்தினுள் நுழையும்போது ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. "இல்லை, இனிமேல் இல்லை.'' என்று அவள் சொல்லிச் சொல்லி அழுதாள். அவர் எங்கிருந்து அவ்வொலி வருகிறதென்று கவனிக்கும் போது ஆலய வாசலின் ஒரு பக்கத்தில் அந்த ஆலயத்தைச் சேர்ந்த ருத்திர கணிகையர் சிலரை ஆலய மணியகாரர் தண்டித்துக்கொண்டிருந்தார். முதலில் ஒருத்திக்கு அண்ணாந்தாள் பூட்டி அவள் முதுகில் கல்லை ஏற்றிக் கையில் பிரம்புடன் அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தார். கணிகையோ தண்டனையைத் தாங்க முடியாமல் கதறினாள்.

ஹரதத்தர் கண்ணில் அந்தக் காட்சி பட்டது. அவருக்கு மிக்க இரக்கம் உண்டாயிற்று. அவர் ராஜகுரு என்றும் பெரிய மஹானென்றும் உணர்ந்து ஆலயத்தைச் சார்ந்தவர்களும் மற்ற ஜனங்களும் அவர்பால் பயபக்தியோடு நடந்துகொள்வார்கள். அங்கே நின்றிருந்த ஆலய அதிகாரி ஒருவரை அழைத்து "ஏன் ஐயா இப்படி அந்தப் பெண்ணை வருத்துகிறார்கள்?'' என்று கேட்டார்.

அதிகாரி "இவள்இந்த ஆலய கைங்காரியம் செய்யும் ருத்திர கணிகையர்களில் ஒருத்தி. ஒரு வாரமாக ஆலயத்திற்கு வரவே இல்ல. இடையிடையே இவள் மஹாலிங்க மூர்த்தியின் கைங்காரியம் செய்யாமல் இப்படியே தவறு செய்து வருகிறாள். பலமுறை வார்த்தைகளால் கண்டித்துப் பார்த்தோம். அபராதம் போட்டோம். மீண்டும் மீண்டும் இந்தக் குற்றத்தைச் செய்து வருகிறாள். அதனால் தண்டோபாயந்தான் இவளைத் திருத்தவதற்கு ஏற்றதென்று இவ்வாறு செய்கிறார்கள்'' என்று விஷயத்தை விளக்கினார்.

இயல்பாகவே மிக்க இரக்கத்தோடு அதைக் கேட்டுவந்த அப்பெரியார், அதிகாரி சொல்லச் சொல்ல ஏதோ துக்கத்தில் ஆழ்ந்தவரைப் போல விம்மத்தொடங்கினார்.

அவர் உதடுகள் துடித்தன. உடம்பில் ஒரு படபடப்பு உண்டாயிற்று. விஷயம் முழுவதையும் அதிகாரி சொல்லி முடித்தவுடனே ஹரதத்தர் அப்படியே கீழே விழுந்து புரண்டு புரண்டு கதறத்தொடங்கினார்.

அதைக் கண்ட யாவரும் திடுக்கிட்டுப் போயினர். தாசியைத் தண்டித்தவர்கள் தண்டனையை நிறுத்தி அவரைப் பார்த்தனர். அழுது கொண்டிருந்த தாசிகூட ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து அழுகையை நிறுத்தினாள். ஒரே கூட்டம் கூடிவிட்டது. ஹரதத்தர் உண்மை ஞானி என்று உணர்ந்திருந்த பலர் அவர் செய்கைக்கு காரணம் தெரியாமல் பிரமித்தனர். பிறரால் அவர் பெருமையைத் தெரிந்து கொண்டிருந்த பலருக்கு அவர்பால் இருந்த நன்மதிப்புச் சிறிது கலைந்தது. வம்புப் பேச்சில் இன்பம் காணும் சிலர் "இந்தக் காலத்தில் யாரையும் நம்பக்கூடாது. அந்தத் தாசியை அடித்தால் இவர் எதற்காக இப்படிக் கதறவேண்டும்? இதில் ஏதோ இரகசியம் இருக்கிறது'' என்றனர். "யார் கண்டார்கள்? அவள் அடிக்கடி கோவிலுக்கு வராமலிருப்பதற்கு இவரே காரணமாக இருக்கலாம். தம்மால் அவள் அடிபடுவதை கண்டு இவருக்கே பொறுக்க முடியவில்லை. அதனாலேதான் எல்லாவற்றையும் மறந்து இப்படி இவர் துக்கிக்கிறார்'' என்றார் சிலர். ஒருவராவது உண்மை இன்னதென்று தெரிந்து கொண்டவராகத் தெரியவில்லை.

சிறிது நேரம் கழித்து ஹரதத்தர் மெல்ல எழுந்திருந்தார். கோவில் உத்தியோகஸ்தரில் ஒருவர் தைரியமாக அவரை அணுகி அஞ்சலி செய்து "ஸ்வாமி நாங்கள் செய்த காரியம் தங்களுக்கு இவ்வளவு துக்கத்தை உண்டாக்கக் காரணமாகுமென்று தெரிந்திருந்தால் அவளைத் தண்டித்திருக்க மாட்டோம். குறிப்பாக ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் முன்னமே தண்டனையை நிறுத்தியிருப்போம். கோயில் வழக்கப்படி நாங்கள் செய்தோம். 'மிக்க வேண்டும்'' என்றார்.

அப்பெரியார் சிறிது நிதானித்தார். அதிகாரியின் பேச்சில் அவன் சொன்ன வார்த்தைகளுக்கு ஊடே வேறு குறிப்பு இருப்பதை உணர்ந்து தம்மை அறியாமலே புன்னகை பூத்து "

நீங்கள் அவளைத் தண்டித்தது பற்றி நான் துக்கப்படவில்லை. பரமேசுவரனது கைங்கரியத்தைச் சரியாகச் செய்யவில்லை என்று நம்மையும் தண்டித்து ஈசுவர கைங்கரியத்திலிருந்து மாறாமல் இருக்கும்படி செய்பவர்கள் இல்லையே என்று தான் துக்கித்தேன். ஸ்ரீ மஹாலிங்க மூர்த்தியின் கைங்கரியமே கண்ணாக இருக்கும் நீங்கள் சிவகணங்களுக்குச் சமானமானவர்கள். உங்கள் கூட்டத்தில் நானும் ஒருவனாக இருந்து கைங்கரியம் செய்வதற்கு இல்லையே என்ற குறை எனக்கு இருக்கிறது'' என்றார்.

அங்கிருந்தவர்களெல்லோரும் உள்ளம் உருகிக் கண்களில் நீர்ததும்ப அப்பெரியாரின் சிவபக்தித் திறத்தைப் பாராட்டினர். தவறாக எண்ணியவர்களும் இவர் உலகியலுக்குப் புறம்பானவர் என்பதை நாம் அறியாமல் அபசாரம் செய்தோமே என்று கன்னத்தில் அடித்துக்கொண்டானர்.

நாயின் உருவத்திலே சிவபெருமானையும் தாசியின் உருவத்திலே தம் குறையையும் நினைந்து கனிந்து உருகும் சிந்தையையுடைய ஹரதத்தர் அப்பால் ஆலயத்தினுள்ளே புகுந்தார்.

**நன்றி: டாக்டர் உ.வே. சாமிநாதையரின் நினைவு மஞ்சா**



# கோயிலின் தன்மை

கடவுளை வழிபடுதற்குரிய இடங்கள் மூன்று. அவையாவன கோயில், சிவஞானிகள், இருதயம். இவற்றுள் சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிக அரிது. அதை ஒரு பிறவியிலே ஒரு முறையேனும் காணமாட்டாமல் இருப்பதுமுண்டு. இருதய வழிபாட்டிலே கண் முதலிய பொறிகளேனும், தலை முதலிய அங்கங்களேனும் தொழிற்பட மாட்டா. இவைகள் சிவதொண்டிலே சென்றால் மாத்திரம் தீயவழியிலே செல்லாமல் நிற்கும். எங்களுக்குள்ள எந்தக் கருவியையும் தீயவழியிலிருந்து விலக்குகில் அதை நேரே அடக்குவது மிகவரிது. அதற்கு நல்வழியைக் காட்டுவதே முறைமை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றார் திருவள்ளுவ நாயனார். ஆதலால் மூவகை வழிபாடுகளுள்ளும் எங்களுக்கு மிகப பொருத்தமாவது கோயில் வழிபாடே. மற்றவைகள் இதற்குத் துணையானவை. மூவகை வழிபாடும் அவசியமே. கோயிலானது பாதகன் முதல் சிவஞானி ஈறாக உள்ள யாவருக்கும் அவசியமானது. ஞான நிலையின் உச்சியை அடைந்து சீவன்முத்தரானவர்க்குக் கோயில் வழிபாடு மிக அவசியமென்பது ஆகம முடிவு.

**"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா**
**அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மாலற நேய மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"**

-என்று சிவஞான போதம் கூறும்.

சிவபெருமான் சிவலிங்கத்திலே சரியையில் உள்ளவர்களுக்கு மறைந்துநின்று அருள்செய்வார். கிரியாவான்களுக்கும் யோகிகளுக்கும் பூசிக்கும்போது தோன்றிநின்று அருள்செய்வார். ஞானிகளுக்கு அன்பே தாமாய் எப்போதும் வெளிநின்று அருள் செய்வார்.

**சைவப் பெரியார்**
**சு. சிவபாதசுந்தரம்**
**கந்தபுராணம்**

**பரம்பொருளின் பெரும்புகழைப் பாடிப்பணிதலன்றி
வேறொன்றும் அறியேன் பராபரமே.**

# கூட்டுப்பிரார்த்தனை

கு. பாலசிங்கம்
(முன்னாள் இலங்கை முல்லை மாவட்ட இந்து இளைஞர் மன்ற தலைவர்)

பஜனை, நாமசங்கீர்த்தனம் அல்லது கூட்டுப் பிரார்த்தனை என்பது ஒரு வழிபாட்டுமுறை. இதனைப் பலர் உணராததும், இதன் முக்கியத்துவத்தை பலர் புரிந்து கொள்ளாததும் ஒரு வேதனைக்குரிய விடயமாகும். இதுவே இந்த யுகத்திற்கு உகந்த வழிபாட்டுமுறை என சமய சாஸ்திரங்கள் மிக அழுத்தமாகக் கூறுகின்றன. மூன்றாவது யுகமாகிய துவாபரயுகத்தின் இறுதிக்காலத்தில் வாழ்ந்த ஒரு முனிவர் கடந்த மூன்று யுகங்களிலும் வாழ்ந்தோர் இறை அருளைப்பெற தவங்கள், யாகங்கள் முதலிய மிகுந்த கஷ்டமான அனுட்டானங்களைச் செய்ய வேண்டி இருந்தது, ஆனால் அடுத்த கலியுகத்தில் வாழப்போகும் மக்களுக்கு இந்தக் கஷ்டங்கள் எதுவும் இல்லை. இறைவனை நினைத்து மனம்உருகிப் பாடினாலே போதும், இறைவனின் கருணை கிடைக்கும் என்று கூறிய-தாகக் கதையுண்டு. நமக்கும் நம் சமயத்துக்கும் வழி காட்டியாக இருந்த நாயன்மார்கள் இறைவனை நோக்கி அருட் பாக்களைப் பாடிப்பரவிப் பேரருளைப் பெற்றார்கள் என்பது நாம் அறிந்ததே.

கூட்டுப் பிரார்த்தனை மனிதனின் உடல், உள்ளம் இரண்டையும் குணப் படுத்துகின்றது. இறைவனை மனதில் நினைத்து, பக்தியோடும், அர்ப்பணிப்போடும் அவன் நாமத்தைக் கூறி, அவன் புகழ்பாடும்போது எமது மனம் தெளிவடைகிறது. உள்ளத்திலே உள்ள தீய சக்திகள், தீய எண்ணங்கள் விலகுகின்றன. மனதிலே ஒரு அமைதியும், மகிழ்ச்சியும், நாம் எதிர்பார்க்காத ஒரு இன்பகரமான உணர்வும் ஏற்படுகின்றன. தீமைகள் அழிந்து வாழ்வு சிறக்கின்றது. ஆன்மிகம் என்றால் என்ன இவ்வுலக வாழ்வை-நாம் வாழும் வாழ்வை, துறப்பது அல்ல. நமக்குள்ளே இருக்கும் மிருக உணர்வை அழித்து மனித உணர்வை வளர்த்து வாழ்க்கையை மேம்படுத்துதலே ஆகும்.

நாம் இறைவனை நினைந்து மனமுருகிப் பாடும்போது, நமது உள்ளம் புனிதமடைகின்றது. நான் என்ற எண்ணம் அழிகின்றது. என்னால் எதுவும் முடியாது, யாவும் இறைசக்தியே என்ற எண்ணம் மேலோங்குகின்றது. அப்போது நமதுள்ளத்திலே இறைவன் குடிகொள்கின்றான். உள்ளம் புனிதமடையும் போது உடல் தானாகவே புனிதமடைகின்றது. உடலும் உள்ளமும் புனிதமடையும்போது, சூழல் தானாகவே புனிதமடைகின்றது. நம்மைச்சுற்றி, நம் கண்ணுக்குப் புலப்பாடாத ஒரு சூட்சுமசக்தி (சூட்சும வட்டம்) இருந்து, நமது உள்ளமும் உடலும் புனிதமடையும்போது அந்த சக்தி வளர்ச்சியுற்று பரிணமிக்கின்றது. அது நமக்கு ஆன்மிக சக்தியை அளிப்பதோடு வாழ்க்கையை உன்னத நிலைக்கு மேம்படுத்துகின்றது. ஞானிகள் அருளாளர்கள் ஆகியோரைச் சுற்றியுள்ள இவ்வட்டம் மிக விசாலமானதாக உள்ளதாக கண்ட றியப்பட்டுள்ளது. அதன் சக்தியே, சாதாரணமனிதன் செய்ய முடியாத பல அற்புதங்களை, அவர்களைச் செய்ய வைக்கின்றது.

> புனிதமான சொற்கள் ஒவ்வொன்றினாலும் ஏற்படுகின்ற ஒலி அப்பிரதேசம் முழுவதையும் புனிதமாக்குகின்றது!

நாம் பாடும்போது ஏற்படுகின்ற ஒலியின் அதிர்வுகள் பரவும் பிரதேசம் முழுவதும் புனிதமடைகின்றது என பைத கண்டறிந்துள்ளார்கள். ஒரு மனிதன் எழுப்பும் ஓசையைவிட, பலர் சேர்ந்து கூட்டாக பாடும்போது ஏற்படுகின்ற ஓசை மேலும் பரந்த பிரதேசத்துக்கு சென்றடைகின்றது. புனிதமான சொற்கள் ஒவ்வொன்றினாலும் ஏற்படுகின்ற ஒலி அப்பிரதேசம் முழுவதையும் புனிதமாக்குகின்றது. ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் ஒலியே நமது இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவமாகின்றது. **ஓசை ஒலி-யெல்லாம் ஆனாய் நீயே** என்று நாவுக்கரசர் பெருமான் பாடியதை உற்று நோக்குங்கள். அமெரிக்க நாட்டில் கொலை, கொள்ளை போன்ற மிக மோசமான தீய செயல்கள், விபத்துக்கள் நடைபெறுகின்ற ஒரு இடத்தில்; தொடர்ந்து நூறு நாட்கள் ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்கள் தினமும் பஜனை செய்தபோது, அப்பிரதேசத்தில் நடைபெற்ற 75 சதவீதமான தீய செயல்கள் குறைந்து விட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, நாங்கள் புனிதமான வணக்க ஸ்தலங்களுக்கோ, ஆலயங்களுக்கோ

செல்லுகையில் அவ்விடத்தை நெருங்கும்போது, நம்மை அறியாமலே நம் உள்ளத்திலே ஒரு பயபக்தி உணர்வும், நம்மை பக்குவப் படுத்திக்கொள்ளும் தன்மையும் தோற்றுவதில்லையா? புனிதமான ஒலியின் அதிர்வுகளால் ஏற்படும் சக்திதான் அந்த இடத்தை அந்தச் சூழலை புனிதமாக்குகின்றது.

அடுத்து, இவ்வழிபாட்டு முறை பற்றி யதார்த்தமாகத் தோன்றும் சில உண்மைகளை அறிந்து கொள்வோம். நமது இந்து மதம் அநாதியானது என்பது யாவரும் அறிந்து கொண்ட உண்மை. ஆனால் தற்காலத்தில் பல புதிய மதங்கள் தோன்றி, அம் மதங்களுக்கு நம்மவர் பலர் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள் என்பதும் நாம் அறிந்ததே. அதற்குப் பல காரணங்கள் இருப்பினும் அவர்கள் கூறும் ஒரு காரணம் தமது வாழ்க்கையில் உள்ள பல பிரச்சினைகள், துன்பங்கள், சிக்கல்கள், நோய்நொடிகள் அங்கு தீர்க்கப்படுகின்றன என்பதாகும். அவர்களது பிரச்சினைகள் அங்கு தீர்க்கப்பட்டிருந்தால், அதற்கு காரணம் அவர்களது வழிபாட்டு முறை என்பதே உண்மை நிலை. அவர்கள் ஓசை எழுப்பி பிரார்த்தனை செய்கிறார்கள். நமது பஜனை வழிபாட்டு முறையே அவர்கள் செய்யும் பிரார்த்தனை வழி. அந்த பிரார்த்தனையின் சக்தியே அவர்களுடைய சாதனைக்கு காரணம்.

ஏன் நமது மதத்தைச் சேர்ந்தவர்கள் மதம் மாற வேண்டும்? மதம் என்பது ஒருவனுக்குத் தாய் போன்றது. தன் தாயிடம் இல்லாத ஒன்று மாற்றாந்தாயிடமா கிடைக்கப்போகின்றது? இல்லை. தாயைப் புரிந்து கொள்ளாதது தான் காரணம். கூட்டுப்பிரார்த்தனை மூலம் நாம் சாதனைகளை சாதிக்க முடியும். நமது இந்து சமய அமைப்புக்களும், ஆலய நிர்வாகங்களும் இதனைக் கருத்தில் கொண்டு இவ் வழிபாட்டுமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்த்தல் நல்லது.

மேலும், நமது ஆலயங்களில் நடைபெறும் அர்ச்சனைகள், பூசைகள் என்பவற்றைக் கவனியுங்கள். வேதியப் பெருமக்கள் வடமொழியில் கூறும் மந்திரம் என்ன? இறைவனின் திருநாமத்தை, ஒரு சிலமுறையோ, 108, 1008 முறைகளோ கூறி அடியவர்களின் துன்பம்போக வேண்டுதல் செய்கிறார்கள். இறைவன் அடியார்க்கும் அடியான், யாவர்க்கும் எளியன். வேதியர் பெருமக்கள் எங்களுக்காக செய்யும் வேண்டுதலை நாங்களே எங்களுக்காக நேரடியாக வேண்டுதல் செய்யும் போது இறைவனின் பெருங்கருணை எங்களுக்கு பூரணமாகக் கிடைக்குமே!

தனி ஒருவர் இறை நாமத்தை கூறி வேண்டுவதைவிட, கூட்டுவழிபாடாகச் செய்வதால் அதன் ஓசையும் சக்தியும், இறை அருளும் அதிகம் என்பது நிதர்சனமான உண்மை.

சிவமாக நாம் வணங்கும் லிங்கத்தைப் பாருங்கள். இது லிங்கமாக பிரதிஷ்டை செய்யப்படுமுன்னர், எப்படி இருந்தது? இது எவ்வாறு நாம் வணங்கும் லிங்கமாகியது? எவ்வாறு சக்தி பெற்றது? பல குருமார்கள் சேர்ந்து, குறிப்பிட்ட 12 நாட்கள், 24 நாட்கள், 48 நாட்கள் என நாமத்தை ஓதி அதற்கு சக்தியை ஊட்டுகிறார்கள், உருவேற்றுகிறார்கள். ஒரு கல்லுக்கே இறை சக்தி ஏற்படுகின்றதென்றால் (கல்போன்ற உள்ளமேயானாலும்) ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் இறைவன் வாழ்கின்றான். அந்த இறைசக்தியை வெளிக் கொணர்ந்து, அந்த சக்தியை பலமாகக் கொண்டு, துன்பங்கள் யாவற்றையும் போக்கி, ஒரு சிறப்பான நெறியான வாழ்க்கையை நாம் வாழ்வது எத்துணை சிறப்பு?.


> மதம் என்பது ஒருவனுக்குத் தாய் போன்றது. தன் தாயிடம் இல்லாத ஒன்று மாற்றாந்தாயிடமா கிடைக்கப் போகின்றது? இல்லை. தாயைப் புரிந்து கொள்ளாதது தான் காரணம்.

இதற்கு எங்களது கடினமான முயற்சி எதுவும் தேவையில்லையே! கூட்டுப்பிரார்த்தனை என்பது மிகச்சுலபமான வழியே.! எங்களால் பாடமுடியாதே என்று எண்ணாதீர்கள். பஜனை நடைபெறும் இடத்தில், பக்தியோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் இருந்து காதால் கேட்டு மனதால் உணர்ந்து கொள்ளுங்கள். அதுவே பெரும் பலன் தரும். பஜனையில் இறைவனை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால், அவன் பத்து அடி உங்களை நோக்கி வருவான். ஒரு சில நாட்களில் நீங்களே சிறப்பாக பாடக்கூடிய சக்தி உங்களிடமிருந்து வெளிப்படும். உங்களுக்குள் இருக்கும் அந்த இறைசக்தியை வெளிக்கொணருங்கள். பக்தியோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் இசையோடும் இறை நாமத்தை அவன் புகழை மனம் உருகிப் பாடுங்கள். வாழ்வில் துன்பம் நீங்கும், மேன்மையும், உயர்ச்சியும் நிதர்சனமாகக் கிடைக்கும்.

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

**நாம் வாழும் வாழ்க்கைக்கு ஏற்றபடி, அன்று ஏற்படுத்தப்பட்ட சாஸ்திர நெறிகளை ஏன் மாற்றி அமைக்கக்கூடாது? இதற்கு ஏற்ற தகுதி வாய்ந்த ஆசாரிய புருஷர்கள் பலர் இன்றும் இருக்கத்தானே செய்கிறார்கள்? அவர்கள் ஏன் இந்தக் காரியத்தைச் செய்ய முன்வரக்கூடாது?**

# ஐயம் தெளிவோம்!



சாஸ்திர விஷயங்களில் கொஞ்சம் விட்டுக்கொடுப்பது கொஞ்சம் மாற்றி அமைப்பது என்று ஆரம்பித்தால், கடைசியில் லௌகிக சௌகரியங்களை மட்டும் வைத்துக் கொள்வதாகத்தான் அது முடியும். வயலில் களை எடுப்பதைப்போல் இவற்றை நீக்கி விடவேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்போது சிலவற்றை களை என்று நினைத்து நாம் எடுப்போம். பின்னால் வேறு சிலர் பிறவற்றை களை என்று எண்ணி எடுப்பார்கள். இப்படியே போய்க்கொண்டிருந்தால், எது களை என்ற விவஸ்தையே இல்லாமல், வயல் முழுவதுமே போய் விடும். ரிஷிகள் ஏதோ சொந்த அபிப்பிராயத்தில் சொன்னார்கள் என்பதற்காக நாம் தர்மசாஸ்திரத்தைப் பின்பற்றவில்லை என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். என்றென்றைக்கும் மாறாமல், ஈசுவர ஆக்ஞையாக இருக்கும் வேதத்தை அனுசரித்தே ரிஷிகள் இந்த விதிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதால்தான் இவற்றைப் பின்பற்றுகிறோம். அதை உள்ளபடியே ரட்சிக்கத்தான் பிரயத்தனப்படவேண்டுமேயன்றி, மாறுதல் செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை.

சாஸ்திரப் பிரகாரம் நடப்பது இந்தக் காலத்தில் சாத்தியம் இல்லை என்று நினைத்து விடக்கூடாது. வியாபார வேகத்தில் வளர்ந்து விட்ட லௌகிக நாகரிகத்தை விட்டு விட்டு, தேவைகளைக் குறைத்துக்கொண்டால், யாருமே இப்படி ஆசாரங்களை விட்டுப் பணத்துக்காகப் பறக்கவேண்டியதில்லை. பணத்துக்காகப் பறக்காதபோது பகவத் ஸ்மரணத்துக்கு நிறைய அவகாசமும் இருக்கும். வாழ்க்கையில் நிம்மதியும், திருப்தியும் சௌக்கியமும் தன்னாலே உண்டாகும்.

கர்ம அனுஷ்டானங்களைச் செய்யப் பணவசதி தேவை என்று பலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். **ஆடம்பரமாகச் செலவு செய்து பூஜை செய்ய வேண்டும் என்பதே இல்லை. காய்ந்த துளசிதளமும், வில்வபத்திரமும் பூஜைக்குப் போதும். நாம் சாப்பிடுகின்ற அன்னத்தையே நைவேத்தியம் செய்து காட்டினால் போதும்.** சாஸ்திரப்படி விவாகம் செய்தால் செலவாகிறதே! என்று நினைக்க வேண்டியதில்லை. இப்போது விவாகங்கள் நடக்கிற ஆடம்பரமான முறை, சாஸ்திர சம்மதமான விவாகத்துக்கு தேவையே இல்லை. குறிப்பாக, இப்போது ஏராளமான செலவில் அலங்கார ஆடம்பரங்கள் செய்யப்படுகின்றன. வரதட்சணை என்று பெரிய தொகை கொடுக்கப்படுகிறது. அதற்கெல்லாம் சாஸ்திர சம்மதமே இல்லை. சாஸ்திர முறைப்படி வாழுவதற்குப் பணம் தேவை என்று இருந்தால், பணக்காரர்கள் மட்டுமே முறைப்படி வாழ முடியும் என்று ஆகி விடும். உண்மையில் அப்படி இல்லை. வாழ்க்கையை எளிதாக- எளியதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். சாஸ்திரம் அதைத்தான் சொல்லிக்கொடுத்து, நமக்கு வழி காட்டுகிறது.

**காஞ்சி காமகோடி பீடாதிபதி சந்திரசேகரேந்திர சரசுவதி சங்காராச்சார்ய சுவாமிகள் எழுதிய நாகரிக வியாதிக்கு மருந்து என்ற நூலிலிருந்து**

திருவாசகம்

# திருச்சாழல்

திருமதி. சிவன் அருள் சேதுராம்

**கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை**
**தாயுமிலி தந்யைிலிதான் தனியன் காணேடி!**
**தாயுமிலி தந்தையிலி தான் தனியன் ஆயிடினும்**
**காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ!**

## தோழியின் கேள்வி:

அடி! நாவன்மையில் சிறந்த நங்கையே! உன் நாயகனைக்குறித்து, நீ நயம்பெற நவிலும் செய்திகள், சற்றுத் தெளிவாகவேதான் இருக்கின்றன! அதிலும் நீ விரித்துரைக்கும் பாங்கினை நான் மிகவும் வியக்கிறேனடி! ஆனால் உன் ஐயனைப் பற்றி, இன்னும் என் ஐயம் முற்றும் தீர்ந்தபாடில்லையே! பெண்ணே!

ஏனடி! என்செல்வி! அண்டசராசரங்களை-யெல்லாம் ஆட்டுவிக்கும் உன் அண்ணல், உறைந்து வாழ, இப் பரந்த உலகில், இடமே இல்லாமலா போய் விட்டது? கண்ணுக்கினிய சோலைகளும், காட்சிக்கினிய பூங்காக்களும், கணக்கற்றுக் கிடக்கின்றனவே! அடர்ந்து படர்ந்த கானகங்களும், தொல் மரம் நிறைந்த தோப்புக்களும், அளவற்று இருக்கின்றனவே! இவற்றில் ஏதாவது ஒன்றில் உன் பிரான் உறைந்திருந்தால் வெயிலின் வெப்பமே தெரியாமல் குளுகுளு வென்றல்லவா இருக்கும் அவருக்கு?

மாட மாளிகைகளைக் கட்டிக்கொண்டு, மாண்புற வாழும் நீங்களும் தாம், உங்கள் தலைவனை மறந்துவிடவில்லையே! அவர் உறைவதற்கு என்று உயரமான மணிமாடங்களை உவந்து கட்டியிருக்கிறீர்கள்! உங்கள் தேவனுக்கு, ஓங்கி உயர்ந்து- விண்ணையெட்டும் கோபுரங்களோடு, கோயில்கள் பல அமைத்திருக்கிறீர்கள்! வானளாவிய அந்த ஆலயங்களில், உங்கள் வானவர் தலைவனின், அருளும் பெருமைகளையும் ஆற்றும் நலன்களையும், கண்ணைக் கவரும் சிற்பங்களிலும், கருத்தைக் கவர்ந்திழுக்கும் வண்ணச் சித்திரங்களிலும், பொறித்து இருக்கிறீர்களே! இரு கைகளாலும் அணைக்க இயலாத மாபெருந் தூண்கள் என்ன! அகல நீளமான வலம் வரும் திருச்சுற்றுக்கள் (பிராகாரங்கள்) என்ன! பரந்த பெருங்கூடங்கள் தாம் என்ன! ஆயிரமாயிரம் மக்கள் ஒருசேர உறையப் போதுமானவையாக அல்லவா அந்தக் கோயில்கள் அமைந்திருக்கின்றன.!

இவற்றையெல்லாம் விடுத்து, எங்கு பார்த்தாலும் எலும்புத்துண்டுகளும் மண்டை ஓடுகளுமாக இறைந்து கிடக்கும், கேவலம் சுடுகாட்டை ஏனடி உன்பெருமான் தமக்கு இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்தார்? அழகான கோயிலை விட்டுவிட்டு, அல்லும் பகலும் மழையில் நனைந்து, வெயிலில் காய்கிறாரேடி! குளிருக்கு இதமாகக் கோயிலில் இருப்பதை விடுத்து, கொட்டும் பனியில் கிடந்து வாடுகிறாரே! சுடுகாட்டில் அப்படி என்ன சுகத்தையடி அவர் கண்டு மகிழ்கிறார்?

அதுதான் போகட்டும்! வெட்ட வெளியும் வெட்பதட்பமும், ஒரு வேளை, அவருக்குப் பிடித்தமாக இருக்கலாம்! சுடுகாட்டின் சூழ்நிலை அவருக்கு விருப்பமாக இருக்கலாம். ஆனால் கொலைத்தன்மை கொண்ட கொடிய விலங்கான புலியின் தோலைப் போய், அவர் உயர்ந்த ஆடையாகப் போற்றிப் புனைந்திருப்பதன் உட்பொருள் என்னடி? அது குறித்து சற்று விளக்குவாயா? தோழீ!

முன்னரே உனக்குக் கூறியுள்ளேன், துணிகளைக்குறித்தும், அவற்றிலுள்ள ஆடைவகைகளைப் பற்றியும், சிவந்த மேனிக்கு ஏற்ற, சிறப்பான ஆடைகள் பல செறிந்து கிடக்கின்றனவே! ஏதேனும் மினுக்கும் பட்டாடையோ மின்னும் பொன்னாடையோ உடுத்தி, மிடுக்காக உலவக்கூடாதா உன் தலைவர்?

**அவரை வணங்கி நாம் நன்றியைத் தெரிவிக்க ஓர் இடம் தேவையல்லவா? இவை போன்ற எங்கள் நன்றி யுணர்வுதானடி கோயில்களாக உருப்பெற்றன!**

அது சரி! உன் தலைவருக்குத் தாயும் கிடையாது என்கிறாய்! தந்தையும் கிடையாது என்கின்றாய்! உற்றார், உறவினர், நண்பர் என்று கூறிக்கொள்ளவும் ஒருவருமே கிடையாதா அவருக்கு? யாருமற்ற தன்னந்தனியர்தாமா உன் கடவுள்?

எனக்கு ஓர் ஐயமடி! பெண்ணே! உன் தலைவரைப் பாசத்தோடு பராமரிக்கத் தாயும் இல்லை! கடமையோடு கண்டித்து வளர்த்திருக்கத் தந்தையும் கிடையாது! கனிவுடன் கண்காணிக்கச் சுற்றத்தினரோ, நண்பரோ எவரும் இல்லை! இங்ஙனம் யாருமற்ற தான் தோன்றியாக இருப்பதால் தானோ, என்னவோ அவர் சுடுகாட்டில் வாழ்ந்தும், புலித்தோலைப் புனைந்தும், மனம் போன போக்கில் திரிகிறார்! என் ஐயனின் செயல்களுக்கு உற்ற விளக்கம் கூறி என் ஐயங்களைப் போக்க முடிமாடி உன்னால்?

## பக்தையின் பதில்

அடி! அறிவிலி! எங்கும் நிறைந்து இருக்கும் எம் இறைவருக்குத் தங்கியிருக்கத் தனியிடம் ஏதுக்கடி? அண்டசராசரங்களிலுள்ள, அனைத்து பொருள்களிலும், அவர் அடங்கியுள்ளாரே! ஓரறிவுள்ள உயிரினம் முதல் ஆறறிவுள்ள மனித இனம் வரை, ஒவ்வோர் அணுவிலும் அவர் உள்ளிருந்து கொண்டு காலம், நேரம், தப்பாது அனைத்தையும் இயக்கி வருகிறாரே! இறைவன் என்ற சொல்லுக்கே எங்கும் தங்கியிருப்பவன் என்பது தானே பொருள்? இது தெரியாது ஏதேதோ உளறுகிறாயே! பெண்ணே!

மிக உயரமான கோபுரங்களோடு அவருக்குக் கோயில்கள் வேண்டுமென அவரா எங்களிடம் கேட்டார்? கல்லும் மண்ணுமாகப் படைத்திருக்கிறாரே! அவற்றைப் பயன்படுத்த சிறந்த பகுத்தறிவையும் நமக்குத் தந்தருளியிருக்கிறாரே! பகுத்தறிவின் துணையோடு நாம் வீடுகளும், மாளிகைகளுமாகக் கட்டிக்கொண்டு வாழ்கின்றோமே! நம்மை, இங்ஙனமெல்லாம் வாழ வைத்திருக்கும் தெய்வத்திற்கும் அதே போல வீடுகள் அமைக்கவேண்டாமா? அவரை வணங்கி நாம் நன்றியைத் தெரிவிக்க ஓர் இடம் தேவையல்லவா? இவை போன்ற எங்கள் நன்றியுணர்வுதானடி கோயில்களாக உருப்பெற்றன!

உலகனைத்திற்கும் ஒரு தனி அரசர் அல்லவா அவர்! அதனால் அவருடைய உறைவிடம், ஏனைய வீடுகளை விட உயரமானதாகவும், அகல நீளமாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்த்து நாங்கள் தாம் அமைத்தோம் எழிலார்ந்த கோயில்களை! அரசருடைய வீடு என்ற பொருளில் தான்
கோ + இல் (கோ = அரசர், இல்= வீடு) என்றும் அதற்குப் பெயரிட்டோம்.
எங்கள் ஆன்மா(ஆத்மா) அமைதியாக அவரோடு இலயிக்கும் இடமாகவும் அது இருப்பதால், அதற்கு (ஆ+ லயம் (ஆன்மா இலயிக்கும் இடம்) என்னும் சிறப்புப் பெயரையும் சூட்டினோம்.

இவ்வுலகில் ஓர் உயிர் உடலுடன் தோன்றும் போதே, அவ்வுடலுக்கு ஒரு நாள் அழிவுண்டு என்பது யாவரும் அறிந்த உண்மை. அரசருடைய அரண்மனையில் பிறந்தவராயினும் இறுதியில் ஒரு நாள் சுடுகாட்டை அடைய வேண்டியவர்தாமே? இது இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தவிர்க்க முடியாத உண்மையல்லவா?

இப்பேருண்மையை நாம் நன்கு புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். மனிதப் பிறவிதான் நாம் பெறற்கரிய சிறந்த பிறவி என்று தெளிவாகத் தெரிந்து கொண்டு, செயலாற்ற வேண்டும். இத்தகைய சிறப்பார்ந்த பிறவியில், நாம் ஆணவம் கொண்டு திரிவது நலம்

**கொடிய விலங்கான புலியின் தோலைப் போய், அவர் உயர்ந்த ஆடையாகப் போற்றிப் புனைந் திருப்பதன் உட்பொருள் என்ன?**

பலநல்குமா? தோழீ! பரம்பொருளின் திருவருள் என்ற நிலையான பேற்றைப் பெறுவதற்கு, நாம் முயலவேண்டாமா? பெண்ணே! அப்பெருநிலையை அடைந்த, இறைவரோடு ஒன்றியவராகி, பிறப்பு, இறப்பு என்ற தொல்லை மிக்க தளையைப் போக்கிக் கொள்ள முயல வேண்டாமா! அன்பே!

இது போன்ற உண்மைகளின் தன்மைகளயும், இவ்வுலகின் நிலையாமை இயல்பையும், திட்டவட்டமாக நமக்குத் தெரிவிக்கவே, அவர் இடுகாட்டைத் தம் இருப்பிடமாகக் கொண்டுள்ளார். எல்லா உயிர்களும் இறுதியில் ஒடுங்கும் இடமான சுடலையில், தாம் உறைந்திருப்பதால், அவரே அனைத்தையும் அழிக்கும் கடவுள்- சங்காரமூர்த்தி என்ற உண்மையை நமக்குத் தெளிவாக உணர்த்துகிறாரே! நங்காய்!

எனவே, பெண்ணே! இனி, சுடுகாடு என்றாலே நாம் அஞ்சி நடுங்க வேண்டியதில்லை! அது எம் இறைவர் உறையும் இடம் என்பதையும், ஒரு நாள் நாமும் அங்கு சென்று, அவரோடு ஒன்றிவிடப் போகிறோம் என்பதையும் நினைவில் நிறுத்திக் கொண்டு செயலாற்று! அது போதும். மனம் அமைதியுறுவதோடு ஐயனின் கருணையில்

திளைத்து நிற்கும்!

மற்றும், விலங்கினத்திலேயே, மிக்க கொடூரமானது புலி. விலங்கினத்தின் வேந்தன் எனப்படும் சிங்கம்கூட, பசி தணிந்தவுடன், பசு போல படுத்திருக்கும் என்பர். ஆனால் கொலைகாரப் புலியோ தனக்குத் தேவையற்றபோதும் கூட, கண்ணில் தென்படும் விலங்குகளை விரைந்து ஓடிக்கொன்று விடும். அப்படிப்பட்ட ஆணவமும், கொலைத்தன்மையும் கொண்ட புலியின் தோலை எம் இறைவர் உடுத்தியிருப்பதன் உட்கிடை தெரியவில்லையாடி உனக்கு? ஆணவமும் செருக்கும் மிக்க உயிர்களை அவர் அடக்கி அருளும் இயல்பை அது குறிக்கின்றதே! அதைத்தெரிந்து கொள்ளடி பேதைப் பெண்ணே!

மேலும் எம்பிரான் தாய் தந்தையற்றவர்தாம். தன்னந்தனியராக நிற்பவர்தாம். ஆனால் யாரால் பகைத்து நிற்கமுடியும் பெண்ணே! பிறவாயாக்கை பெற்ற பெரியோர் ஆனவராயிற்றே அவர் அவர் வெகுண்டு எழுந்தால், துணிந்து அவரை துடிப்புடன் எதிர்க்க, உலகமே உருண்டு திரண்டாலும் இயலாதே! அவர் சினந்து எழுந்தால் உலகம் அனைத்துமே கற்பாறை பொடிபட்டது போன்று துகள் துகளாகிப் போய்விடுமே! பெண்ணே! அது குறித்து ஏதேனும் தெரியுமாடி உனக்கு? சற்று விரிவாகவே விளக்குகிறேன்! கவனமாகக்கேள்! அன்பே!

இப்பரந்த உலகமும், உலகிலுள்ள பொருள்களும், பஞ்சபூதங்களால் ஆக்கப் பெற்றிருக்கின்றன! **ப்ருதிவி** (மண் அல்லது நிலம்), **அப்பு** (தண்ணீர்) ,**தேயு** (ஒளி அல்லது தீ), **வாயு** (வளி அல்லது காற்று), **ஆகாயம்** (வெளி அல்லது வானம்) என்னும் ஐம்பெரும்பூதங்களின் சேர்க்கையினாலேயே ஏற்பட்டன என்று சாத்திரங்கள் செப்புகின்றன. பூதம் என்ற சொல்லே பூத்தல் என்ற அடிப்படையில் வந்தது. பூத்தல் என்றால் தோன்றுதல் அல்லது வெளிப்படுதல் என்று பொருளாகிறது. எனவே இந்த ஐந்து இயற்கைப் பொருள்கள்தாம் இப்பரந்த உலகமும், இதிலுள்ள பொருள்களும் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி யாக விளங்குகிறதல்லவா? தோழீ!

எங்கும் தங்கியிருக்கும் எம்பிரான், பஞ்சபூதங்களிலும் நிறைந்து நிலவி உள்ளார். இப்பேருண்மையை உணர்த்தும் வகையில், ஐம்பெரும் ஊர்களில் உறைந்து, நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கிறார் நம் அண்ணல் பிரானார். **காஞ்சிபுரத்தில்,** ஏகாம்பரராக (ஏகாம்பரநாதர் அல்லது ஏகாம்பரேஸ்வரர்) **மணல்** வடிவில் அமர்ந்திருக்கிறார் தந்தை. அங்கு ஆலயத்திலுள்ள சிவலிங்கம் தேவி காமாட்சி அம்மையாரால், வேகவதி ஆற்றங்கரையில், மணலைக்கொண்டு நிறுவப்பெற்றதாக வரலாறு கூறுகின்றது.

**திருச்சிராப்பள்ளி** அருகிலுள்ள கொள்ளிடம், காவிரி என்ற இரு நதிகளுக்கும் நடுவிலுள்ள, **திருவானைக்காவல்** என்ற தலத்தில், எம் ஐயன் நீர் வடிவில் உறைந்துள்ளார். திருவானைக காவலிலுள்ள சிவலிங்கத்தைச் சுற்றிலும், ஊற்றாக நீர் பெருகிக்கொண்டேயிருக்கிறது. எந்தை பிரானார் **நீர்** வடிவில் உறைந்திருப்பதை உணர்த்துகிறது இவ்வூர்.

கார்த்திகை மாதம், கிருத்திகை விண்மீன் கூடிய நன்னாளில் திருவண்ணாமலை என்ற தலத்தில் எம் அண்ணல் பிரானார் மாபெருஞ்சோதியாக காட்சி அளிக்கின்றார். அன்று அந்த மலையின் உச்சியில் ஏற்றப்பெறும் **தீபஒளி** நெடுந்தொலைவிற்கு நன்கு தெரிந்து பக்தர்கள் சேவித்து அருள் பெற இயலுகின்றது.

**காளஹத்தி** என்ற தலத்தில் எம்பிரான் காற்று வடிவத்தில் கோவில் கொண்டுள்ளார். அங்கு மூலத்தானத்தில் சிவலிங்கம் அருகிலுள்ள ஒரு விளக்கு காற்றில் அலைமோதுவது போல, ஓயாமல் ஆடிக்கொண்டேயிருக்கிறது. காற்று உட்புக இயலாத அந்த மூலத்தானத்தில் சிவலிங்கம் அருகிலுள்ள அந்த தீபத்திற்கு மட்டும் எங்கிருந்தோ, எவ்வாறோ காற்று வீசி, தீப ஒளியைப் படபடவென்று ஆடவைப்பது வியக்கத்தக்கதாகவே இருக்கிறது.! சிவனார் காற்றாக அங்கு வீற்றிருப்பதையும் நமக்கு விளக்குகிறதல்லவா?

**சிதம்பரம் சிற்றம்பலத்தில்** எம் தலைவர் வெளி அல்லது ஆகாய வடிவில் பொருந்தியுள்ளார். அந்தத்தலத்தில் கோயில் கொண்டுள்ள நடராசப்பெருமானுக்கு, வலப்புறத்தில் இரண்டு மாலைகள் மறைத்து வைக்கப்பெற்றிருக்கின்றன. ஐயனுக்கும் சிவகாமியம்மையாருக்கும் அணிவிக்கப் பெற்றுள்ளன போன்ற தோற்றத்துடன் கூடிய அவை அங்கு, ஒரு திரையிட்டு மூடப்பெற்றுள்ளன. இறைவர், ஆகாயமாக,

அம்பரமாக, வானவெளியாக, உருவம்ஏதுமற்ற அருவமாக உறைந்திருப்பதையே உணர்த்துகின்றன, அந்த இரண்டு மாலைகளும். அந்த தோற்றம்தான் சிதம்பர இரகசியம் என்றும் போற்றப்பெறுகின்றது.

இந்த ஐந்து வடிவங்கள் மட்டுமன்றி, ஞாயிறு எனப்பெறும் சூரியன், திங்கள் எனப்பெறும் சந்திரன் (நிலா)வடிவிலும் எங்கள் பிரானாரின் எழிலார்ந்த திருவுருவைக் கண்டு வணங்குகின்றோம். நாங்கள் மகர சங்கிராந்தியான பொங்கல் திருநாளன்று சூரியன் முன்னிலையில் பொங்கல் பொங்கி அவருக்குப் படைத்து வணங்குகின்றோம். சித்திரை மாதம் சித்திரை விண்மீன் கூடிய பௌர்ணமி அன்று இரவு ஐந்துவகை அன்னம் செய்து முழுநிலவுக்கு முன்னர் நிவேதித்து வழிபடுகின்றோம்.

மற்றும் எல்லா உயிர்களிலும், உயிருக்கு உயிராகிய எம் இறைவன் உறைந்திருப்பதாகச் சாத்திரங்கள் செப்புகின்றன. எனினும் சித்தி பெற்றவர்களும், இறைத்தன்மையை நன்கு அறிந்தவர்களுமாகிய முனிவர்கள், ரிஷிகள் போன்ற புனிதமான மகான்களையும், நம் பெற்றோர், மூதாதையர் ஆகியவர்களையும் ஆராதித்து வணங்குவது தொன்று தொட்டு வரும் வழக்கமல்லவா?

இவ்வாறாக, பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், பண்பட்டஉயிர்கள் ஆகிய எட்டு வடிவங்களிலும் எம் இறைவர் உறைந்திருப்பதை உணர்ந்து நாங்கள் அவரை வழிபடுகிறோம்! பெண்ணே! எம் இறைவர் இங்ஙனமாக எட்டு வடிவங்களில் அமர்ந்திருப்பதை அறிவிக்கவே, அவருக்கு அஷ்டமூர்த்தி என்ற சிறப்புப் பெயரிட்டும் அவரைப் போற்றித் தொழுகிறோம்!

இவ்வாறு பஞ்ச பூதங்களிலும் உறைந்திருக்கும் இறைவனின் சீற்றம் எவ்வாறிருக்கும்?

பின்னும் கேளடி! பேதைப் பெண்ணே! பூமி அதிர்ந்து பூகம்பமாக எழுந்து பாளம் பாளமாக நிலம் வெடித்து, நாடு நகரங்களை விழுங்குகின்றதே! அதை யாராவது தடுத்து நிறுத்தமுடிகிறதா? ஓயாது மழை பொழிந்து, ஆறு, ஏரி, குளங்கள் எல்லாம் உடைப்பெடுத்து, ஊர் ஊராக அழிகிறதே! அப்போது ஒருவராலும் ஒன்றும் செய்ய இயலவில்லையே! எரி மலைகள் குமுறி எழுந்தாலோ ஏதோ ஒரு காரணம் பற்றி, காடுகளும், வீடுகளும் தீப்பற்றினாலோ, அவற்றினால் ஏற்படும் நாசத்தை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டியிருக்கிறது? புயல் உருவாகி, அடித்து வீசி மரம் மரமாகச் சாய்த்து வீழ்த்துவதால் விளையும் சேதத்தை, மேதைகளான அறிவியல் அறிஞர்கள்கூட தடுக்கஇயலாதே! மழையே பொழியாமல், வானம் காய்ந்து, பூமி வரண்டு, உணவுப்பொருட்கள் சரிவரவிளையாமலும் குடிநீர்ப் பஞ்சமும் ஏற்பட்டாலும் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டியிருக்கிறது? அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல, ஓர் உயிர், அது வாழ்ந்த உடற்கூட்டை விட்டுப் பிரிந்து போவதை யாராவது தடுத்து நிறுத்த ஒன்றும் செய்ய இயலவில்லையே! பெண்ணே!

**இத்தகைய இயற்கைச் சீற்றங்களைத் தான் எங்கள் இறைவரின் சீற்றம் என்று கூறுகின்றோம். நாங்கள் இவற்றைத் தடுத்து நிறுத்தி, இவை வராமல் இருக்க வழிவகைகள் செய்ய, அறிவிற்சிறந்த, அறிவியல் மேதைகளால் கூடஇயலவில்லையே! இவற்றிற்குத் தாய், தந்தை, உற்றார், உறவினர், நண்பர் என்று எவரேனும் உள்ளனரா? எவருடைய கட்டளையால் இங்ஙனம் சீறி எழுந்து இவை சேதத்தை விளைவிக்கின்றன?**

பலவாறு பன்னிப் பன்னிப் பேசும் நீ, இதற்குப் பாங்காக விடை கூறு பார்க்கலாம் தோழீ! அடி அசட்டுப்பெண்ணே! எங்கும் தங்கியிருக்கும், இயற்கை வடிவினரான எங்கள் பிரானின் தன்மைகளை, இப்போது நீ நன்கு புரிந்து கொண்டிருப்பாய் என்று நம்புகின்றேன்!

எம் ஐயன் சினந்து எழுவதற்கான அன்பற்ற அறமற்ற செயல்களைத் தவிர்ப்பாயாக! அவரைப் போற்றித் தொழுது பல நலம் பெற முயல்வாயாக!

**கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை**
**தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி!**
**தாயுமிலி தந்தையிலி தான் தனியன் ஆயிடினும்**
**காயில் உலகனைத்தும் கற்பொடிகாண்! சாழலோ!**

**கோயில்** = உன் இறைவன் (அரசன்) குடியிருக்கும் அரண்மனை,

**சுடுகாடு** = இறந்து போனவர்களை எரிக்கும் சுடுகாடாக இருக்கிறதே!

**கொல்புலித்தோல்** = கொலைத்தன்மை பொருந்திய புலியின் தோலே

**நல்லாடை** = அவர் நல்லதென்று போற்றி, உடுத்திக்கொள்ளும் ஆடையாக இருக்கிறதே! (இப்படிப்பட்ட உன் தலைவருக்கு)

**தாயுமிலி** = பரிவோடு வளர்க்கப் பாசமுள்ள தாயாரும் கிடையாது!

**தந்தையிலி** = கண்டித்துக் கடமையில் நிறுத்திக் கண்ணியமாக வளர்க்கத் தந்தையும் இல்லை!
**தான் தனியன்** = வேறு உற்றாரோ, நண்பரோ எவரும் இல்லாத தன்னந்தனியரான தான்தோன்றி அவர்!
**காணேடி** = இவருடை விந்தையான நிலையை எண்ணிப் பாரடி! பெண்ணே!
**தாயுமிலி** = பேணிப் பாதுகாக்கத்தாய் அற்றவராக இருந்தால் என்ன?
**தந்தையிலி** = கண்டித்து வளர்க்கும், தந்தையில்லாத
**தான் தனியன்** = தனியராக இருந்தால் தான் என்ன?
**ஆயிடினும்** = இங்ஙனம் தன்னந்தனியராக இருந்தபோதிலும்
**காயில் உலகனைத்தும்** = சீற்றமுற்று சினந்து எழுந்தால், உலகம் முழுவதுமே
**கற்பொடிகாண்** = கற்களைப் பொடித்துப் போட்டது போன்று பொடிப்பொடியாகிப் போய்விடுமே? அதை நீ நன்கு தெரிந்து கொண்டு, அவருடைய சீற்றத்தைக் கிளப்பாமல் அவரை அன்போடு வழிபடு! தோழீ!
**சாழலோ** = அவருடைய புகழைப் பாடியபடியே சாழல் ஆடிக்களிப்போமாக!

**********

## இலண்டன் ஸ்ரீ முருகன் கும்பாபிஷேக வேண்டுதல்

**இயற்றியவர்: சபாபதி மகேஸ்வரன்**



**பல்லவி**

முருகா முருகா, முருகா முருகா
உருகாய் உள்ளம் உருகாய் முருகா
லண்டன் பதிவாழ் முருகா முருகா
வருவாய் மயில் மீதினிலே முருகா
தருவாய் தமிழ் ஈழம் மீட்டு எமக்கு — முருகா முருகா

**அனுபல்லவி**

இன்னிசை இசையும் இங்கிலாந்து மண்ணில்
தென்னிசை நோக்கி தேம்ஸ் நதிக் கரையில்
பண்ணிசை பாடிடும் லண்டன் மாநகரில்
முன்னிசை கேட்டிடும் முத்தமிழ் முருகன் வந்தனன் — முருகா முருகா,

வந்தனன் முருகன் வள்ளிதெய்வயானையுடன்
தந்தனன் முருகன் அள்ளித் தங்க வேலுடன்
பந்தமும் பாசமும் தமிழ் ஈழமண்ணே என்று, பாட
செந்தமிழ்ப் பாட்டைச் செவிமடுப்பான் முருகன் — முருகா முருகா,

கருங்கல்லால் கோயில் அமைத்தோம் உமக்கு! எம்மை
கலங்காமல் காத்தருளையா, முருகையா!
வருங்காலம் எம்மக்கள், வாழாவெட்டியாய் வாழ்வதுண்டோ!
வரும் இன்னல்கள் எத்தனையோ, எமக்கோர் மண்ணிலையெனில்!
பெருங்களம் இன்னும், வேண்டாமையா முருகையா! தர்மம்
இனித் தளைத்தோங்கிடவேண்டும் முருகையா! நீ
தரும் வரம் வேண்டும் கந்தையா! தமிழோய்,உன்
தயை வேண்டும் முருகையா! — முருகா முருகா,

**சரணம்**

பாலபிஷேகம், தேனபிஷேகன், கும்பாபிஷேகம் உனக்கு!
மேல நாட்டுப் பழவர்க்கம், தென்னாட்டு தேன்கரும்பு கலந்த
பஞ்சாமிர்தம், கற்கண்டு, கனிரசம் யாவும் உனக்கு!
தஞ்சமென வந்து துதிக்கும் எமக்கு, உன் கருணைகாட்டையா! முருகையா — முருகா முருகா,



அம்மனை சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்

# ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

## SHRI KANAGATHURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

***5 Chapel Road, West Ealing, London W13 9AE***

**கோயிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது**

***Charity No 1014409***

## சமய வழிபாடுகளுடன் சமூக சிந்தனையும்



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
**மட்டக்களப்பு**



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
**பதுளை**



விவேகானந்தா இல்லம்
**வாழைச்சேனை**




லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
**வாஹரை**



அன்பகம்
**வவுனியா**



அன்பு இல்லம்
**திருகோணமலை**




லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
இலவச பயிற்சி நிலையங்கள் (கணனி. தையல்)
**மட்டக்களப்பு**



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
இலவச கணனி வகுப்புகள்
**யாழ்ப்பாணம்**




லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
புதிய கட்டிடம் - இராமநாதன் மஹாவித்தியாலயம்
**யாழ்ப்பாணம்**




லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
இலவச கணனி வகுப்புகள்
**திருகோணமலை**



சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
இலவச திருத்த நிலையம்
**முல்லைத்தீவு**



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
**மன்னார்**




**www.changetheirlife.org    020 8810 0835 / 020 8840 0485**



அம்மனை சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்

# ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

## SHRI KANAGATHURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

*5 Chapel Road, West Ealing, London W13 9AE*

**கோயிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது**

*Charity No 1014409*

Daily Poojas: **8.00am, 12noon, 5.00pm & 8.00pm**

Abishehams: **Tuesday & Friday 7.00pm, Other days on request**

Opening Hours: **Monday, Wednesday & Thursday: 8.00am - 3.00pm, 5.00pm - 10.00pm**

**Tuesday & Friday: 8.00am - 4.00pm, 5.00pm - 10.30pm**

**Saturday & Sunday: 8.00am - 10.00pm**

**Voluntary service within the community sponsoring 5 Local Tamil School to teach Tamil & Hinduism.**

**Guided tours & lecturers for schools, teacher-training colleges & other religious groups.**





ஞாயிற்றுக் கிழமைகளில் இலவச தமிழ், தேவாரம், இந்து சமய வகுப்புகள் கோவில் மண்டபத்தில் நடைபெறுகின்றது

Harrow Tamil School Children Workshop 2003

**இலங்கை அனாதை ஆச்சிரமங்களில் இருக்கும் குழந்தையைப் பொறுப்பெடுத்து பராமரிக்கும் 'காக்கும் கரங்கள்' திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. ஒரு குழந்தையை பராமரிக்க மாதம் £15 மட்டுமே. விபரங்களுக்கு ஆலயத்தை தொடர்பு கொள்ளவும்.**

மேலதிக விபரங்களுக்கு

# 020 8810 0835 / 020 8840 0485

# www.ammanuk.org

Member of
The Federation of
Saiva(Hindu) Temples UK.

# சிவயோகசுவாமிகள் காட்டிய வழி

**ஈசனடியார் அமுதன் அமரர் மு. ஆறுமுகம்**
(இலண்டன் சிவதொண்டன் நிலைய ஸ்தாபகரும், முன்னைநாள் தலைவரும்)

யாழ்ப்பாணத்தில் அவதரித்து உலக மக்களுக்கு ஆன்மிகக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த சிவயோகசுவாமிகள் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள் பற்றிய ஒரு சிறு கட்டுரையை சுவாமிகள் திருவடித்தொண்டாகும் என்று கருதி முயற்சிக்கின்றேன்.

சுவாமிகள் தியானத்தில் இருந்து பாடும்போது அப்பொழுது அங்கிருந்த பக்தர்கள் கேட்டு எழுதியவையே பெரும்பாலான பாடல்கள். சில பாடல்கள் சுவாமிகள் கையெழுத்தில் உள்ளன.

சுவாமிகளின் பக்தர்களில் ஒருவரான சாந்தசுவாமி (Ramsbotham) இலங்கையின் முன்னாள் மகாதேசாதிபதி Lord Salsbury பிரபுவின் மகன். M.A. பட்டதாரி. செல்வந்தர். பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்கும் உரிமையை விட்டு, தன்குருவின் போதனைகளுக்கேற்ப இங்கிலாந்தில் ஆன்மிக வாழ்வில் ஈடுபட்டிருந்தார். தனது புத்தகம் நற்சிந்தனை ஆங்கில மொழி பெயர்ப்பில் அவர் பின்வருமாறு கூறுகின்றார்:

"These hymns flowed from him spontaneously when he was in meditation and written down by those who happened to be present at that time...No intellectual effort was involved. He was the mouthptece of the divine."

இத்தெய்விகப் பாடல்களை யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்து அன்பர்கள் நற்சிந்தனை என்னும் புத்தக வடிவில் தொகுத்து மக்களின் ஈடேற்றத்திற்காக வெளியிட்டுருக்கிறார்கள்.
நற்சிந்தனை ஓர் ஞானக்களஞ்சியம். ஞான விளக்கு. சிவயோகசுவாமிகள் எங்களுக்குத் தந்தருளிய பரம்பரைச்சொத்து. (Our great spiritual heritage)

இந்த அரிய நூல் அழகிய இலகு தமிழில் சாதாரணமக்களுக்கு விளங்கக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது. தமிழ்மக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டியதும், சிறப்பாக தற்பொழுது ஐரோப்பா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் வசிக்கும் எல்லாத் தமிழ்மக்கள் வீடுகளிலும் பெரும் பொக்கிஷமாக பேணப்பட்டு எங்கள் அடுத்த சந்ததியினரும் நல்ல முறையில் வாழ வழிகாட்டியாகப் பயன்படவேண்டும்.

எங்கள் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் சீராகவும் சிறப்பாகவும் வாழ்ந்து பிறவிப்பயனை அடையவேண்டும் - அதாவது முத்தி இன்பம் பெறவேண்டும் என்னும் அன்பு நோக்கிலே முக்திக்கு வழிகாட்டும் வித்துக்களை சுவாமிகள் நற்சிந்தனைப் பாடல்களில் தந்தருளியிருக்கிறார்.

**சுவாமிகள் காட்டிய வழிகள்: ஆத்மவிசாரணை:**
நீயாரெனத் தெரிந்து கொள்
நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று,
சித்தமன்று, நீ ஆத்மா.
தன்னை அறிந்தால் தவம் வேறில்லை
தன்னை அறிந்தால் தனக்குவமை இல்லை
தன்னை அறிந்தவர் தத்துவாதீதரே
தன்னைத் தன்னால் அறிந்திடடா
தானே தானென்றிருந்திடடா
தன்னைத்தன்னால் அறியத் தியானத்தில் நீ மூழ்கு

**பக்தி வழி அல்லது அன்பு வழி**:
கடவுள் எங்கும் இருக்கிறார்
அங்குமிங்கும் எங்குமந்த ஆண்டவன் தானிருக்க
அங்கு மிங்கு மலையாதே
தெய்வத்திற்குத் தெய்வம் சிந்தனையில் தானிருக்க
வையகத்தில் ஏன் அலைந்தாய்
ஆடம்பரமெல்லாம் அடியோடு நீக்கிவிட்டு
கேடறியாத் திருவடியைக் கிட்ட நீ கண்டிரு
சேண்பொழியுந் திருவடிவே சித்தத்தில்
எப்போதுமுண்டு
தத்துவம் பேசி வீண்காலம் போக்காதே
எத்திக்கு மீசனடி இருந்தபடியே இருந்து
பக்தி செய்து பார்த்திடுவாய்
அன்பே கடவுள் அன்பே உலகம்
அன்பின் அதிசயம் ஆரறிவாரே
ஆண்டவன் திருவடி வேண்டிக் கொண்டால்
ஆறுதல் உண்டாகும்
அழுது அழுது ஆண்டவனை
தொழுது வணங்கிடுவாய் துரியநிலை சாருமட்டும்

1) கருமத்தை கை நெகிழ விடாதே.
2) எத்தொழிலைச் செய்தாலும் தம்பி
ஈசனுக்கர்ப்பணம் பண்ணிடடா
(ஈசனுக்கர்ப்பணம் செய்தால் வினைப்பயன் சேராது)
3) கருமத்தைப்பயமின்றி ஆக்கு
4)கருமத்தைப் பற்றாதே கவலை கொண்டு
கலங்காதே

மேலே சொல்லப்பட்ட நான்கு போதனைகளையும் பகவத் கீதையில் கருமயோகப் போதனையில் காண்கின்றோம்.

**தொடரும் ......**



# Bluebell
## dental practice

**140 Tomswood Hill, Chigwell, Essex, IG6 2QP**

**Tel: 020 8500 6789 Fax: 020 8500 4747**

**web: www.bulebelldp.co.uk, E-mail: reception@bluebelldp.co.uk**

***PRINCIPAL DENTAL SURGEON***

***Dr Sukanthy Kanagasabai BDS (Edinburgh)***

***ASSOCIATE DENTAL SURGEONS***

***Dr K. Sokhal BDS (Sheffield)***
***Dr O. Obisesan FDS, RCS (Eng)***
***Dr A. Mandal BDS (Guy's & St. Thomas)***
***Dr S. Mann (Guy's & St. Thomas)***





***We provide a full range of treatments including :***

* State-of-the-art and affordable service to our local community
* You can choose NHS treatment, Private treatment or a mixture of both to suit your individual requirements and affordability
* Cosmetic Dentistry, including White fillings, Veneers, Crowns, Bridges and Tooth whitening
* Flexible early morning, late evening and Saturday appointments



**அதி நவீன சிகிச்சை முறைகள்!**
**தமிழ் மக்களின் பாராட்டைப் பெற்ற தமிழ் பேசும் வைத்தியரும் உண்டு.**

**Hours of Opening**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Monday | 8.00am | to | 7.00pm | Thursday | 8.30am | to | 7.30pm |
| Tuesday | 9.00am | to | 5.30pm | Friday | 8.00am | to | 5.30pm |
| Wednesday | 8.00am | to | 7.30pm | Saturday | 9.00am | to | 4.00pm |

**Tel: 020 8500 6789**

**web: www.bluebelldp.co.uk**

கலசத்தின் 50 வது இதழ் சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள்!


House of Fine Jewellery

# Lakshmis

Jewellers & Silk House



திருமண வைபவத்திற்குத்
தேவையான
வைரத் தாலிக்கொடி
முதல் பட்டுச் சேலைகள்
வரை ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ளக்கூடிய
முதலாவது தமிழர்
களஞ்சியம்

**Opening Hours :**
**Mon-Sun**
**10.30 am - 7.00pm**

**276 High Street North, Eastham E12 6SA**
**Tel :020 8470 5600 Fax : 020 8470 3448**



பொன்னுருக்கல் செய்வதற்கான சகல வசதிகளும்
முறைப்படி செய்து கொடுக்கப்படும்

# SHIPPING- AIR FREIGHT-TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE- PERSONAL EFFECTS, HOUSE HOLD GOODS, VEHICLES, MACHINERY, ETC.**

**TO COLOMBO AND WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR SRI LANKAN AIRLINES**

**PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE**
**ALL YOUR GOODS GO TO OUR BONDED WARE HOUSE IN COLOMBO**
**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

# GLEN CARRIERS LIMITED

**TEL : 020 8740 8379/ 020 8749 0595 | FAX : 020 8740 4229**

**BONDED WARE HOUSE**
**LAKSIRISEVA, 66 NEWNUGE RD, PELIYAGODA**

**14 Allied Way, Off Warple Way, Acton, London, W3 0RQ**

IATA · SriLankan · ATOL 4395



# Markandan & Sharma Solicitors

**Mr.M. Markandan, previous owner of Markandan & Co Solicitors Situated at 720 romford Road, Manor Park, London E12 and Mrs Lata Sharma of Sharma & Co Solicitors situated at 21 Boundary Road, Plaistow E13 have opened a new Practice to deal with the following areas of Law on private basis:**

- Immigration - all countries
- Conveyancing Residential and Commercial
- Liquor Licences
- Magistrate Court Matters
- Police Station Advice
- Work Permits
- Matrimonial Matters
- Landlords and Tenants matters
- Sponsorship Documents

*We have fee earners who speak most of the Asian, African and European languages.*
*Our fees are cheap and affordable.*
*Please contact:*

Mr. Markandan on 07956 386 576
Mrs Sharma on 07939 829 644
Mr. Jasokumar on 07961 996 482

Markandan & Sharma Solicitors
Bow Business Centre
153-159 Bow Road, London E3 2SE
Tel:020 8981 5330 Fax: 020 8981 5350 Email: info@mssolicitors.com

கலசத்தின் 50 வது இதழ் சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள்!



**கலசத்தின் 50 வது இதழ் சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள்!**


*The First & Best Tamil Silk House in London*

6 Kumars ® Silk House & Jewels

"For Your entire family"

மிகப் பிரமாண்டமான
அழகுகாட்சியறையில்
மணமக்களுக்குத் தேவையான
மங்களநாள் கூறைப்புடைவைகள்
பட்டுவேட்டி குர்த்தா தலைப்பாகை
ரவுசர்கள் சேட்டுகள் சூட்கள் முதல்

வைரத்தாலிக்கொடி, நெக்லஸ், டைமன்,
அட்டியல், பூட்டுக்காப்பு, தோடுகள்
வரை சிறுவர் Party Dress கள்
பெற்றுக்கொள்ள நிறைந்த மலிவுடன்
சிறந்த ஓர் இடம்

புதுப்பட்டும் பொன்நகையும்
புன்னகையுடன் எங்களிடம்



Quality & Trust
Since 1982
Tel/Fax :
020 8471 5742
www.6kumars.com

6 Kumars ®
Silk House & Jewels
285 High Street North,
East ham, London E12 6SL

கலசத்தின் 50வது இதழும் ஆலய கும்பாபிஷேகமும் சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள்

# GLENKIE RESTAURANT

## Srilankan & Indian Cuisine

**Open 7 days a week**

**Mon - Sat 11am - 12 midnight**
**Sun 12 noon to 11.30pm**





**Quality food in pleasant Atmosphere !**



**308 Ley Street, Ilford, Essex IG1 4BS**
**TEL: 020 8478 1302**

# Manor Furnishers

**All Kinds of :**

Beds - Bedroom Fitments
Italian Reproduction Furniture
Solid Pine - Rugs - Mirrors
Leather Suites - Three Piece Suites
Dining Tables & Chairs
Bed Settees - Sofa Beds





**Complete House Furnishing for :**
Individuals - Landlord & Letting Agents

**Tel : 020 8514 8293**
**Fax : 020 8514 7638**

**562-564 Romford Road, Manor Park, London E12 5AF**

Internet - Telephone booth - Phone Cards - Photocopy - Fax - DVD Rental - Printing - Computer Sales & Service

# V.ATHULYAAH
## INTERNET & VIDEO CLUB

**367 High Street North, East Ham, London E12 6PQ**
**Pone / Fax : 020 8471 2387**

| Internet | DVD | Phone cards | Photo Copy |
| --- | --- | --- | --- |
| Per Month £ 20 Unlimited Time Per Hour 50p | Per Month £ 20 Unlimited Movies 3 Night from £ 1 | Per card £ 3. 49 onwards | Photo Copy Per page 5p Only |
| **Audio CDS** | **FAX** | **Audio Cassette** | **Computer Sales & Service** |
| From £ 3.49 | Fax 50p onwards | Per Cassette 99p onwards | Pentium £ 60 Onwards |



கலசத்தின் பணி தொடரட்டும் !

# PANESAR ELECTRICAL CO


Est. 1981

**Trade Counter**
**364**

**Lighting Showroom**
**362**

**High Street North, Manor Park**
**London, E2 6PH**

*email : raj@panesarelec.fsnet.co.uk*
*www.lowvoltagedownlights.com*





Tel : 020 8472 1873 Fax : 020 8471 6271




# ATN Jewellery

**Ideal designs for the Ideal woman**

தரம், சேவை, நாணயம்... அனைத்தும் இங்கே தங்கம்...
மங்கையர் மனங்கவர் நகைகளோ மாற்றுக்குறையாத தங்கம்

- எம்மிடம் வாங்கிய நகைகளை மட்டும், உங்களுக்கு பணம் தேவைப்படும் போது குறைந்த வட்டிக்கு அடகு வைத்துப் பயன் பெறலாம்.
- எம்மிடம் வாங்கும் நகைகளை உலகளாவிய ரீதியில் பாதுகாப்பாக அனுப்பி வைக்க நாம் தயாராக உள்ளோம்.
- பொன்னுருக்கலுக்கான வசதிகள் செய்து தரப்படும்
- தவணைமுறையில் பொன்நகைகள் வாங்க புதிய திட்டங்கள்
- நீங்கள் விரும்பும் போது உங்கள் நகைகளை புதிய வடிவமைப்பில் சிறிய கூலியுடன் செய்து தருகின்றோம்.
- வெளிநாடுகளில் இருந்து நகைகளை வாங்க வருபவர்கட்கு விசேட விலைக்கழிவு.
- 500 கிராம் (24கரட்) தங்க திட்டத்தில் உங்களை முதலீட்டாளர்களாக்குகின்றோம்.

**37 Palmerston Road, Walthamstow, London E17 6PR**
**Tel : 020 8521 9767 Fax : 020 8521 1281**

**ATN எமது புதிய கிளை நிறுவனம்**
**2/157 Sea Street, Colombo-11**
**Mob: 07731 58777**

மிக விரைவில் மற்றுமோர்
புதியநிறுவனம்
A9 வீதி, கிளிநொச்சி.

வாரத்தில் 7 நாட்களும்
காலை 11.30 முதல் இரவு 7.00 மணிவரை திறந்திருக்கும்
நினைவெழுச்சி நாள் நடைபெறும் தினத்தன்று கடை திறக்கப்பட மாட்டாது.





இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (Tel: 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 22.05.2005 அன்று வெளியிடப்படுகிறது.